
கோகுலம்
GOKULAM
ஜனவரி '95
ரூ. 5.00
கனடாவைக் கலக்கிய
கராத்தே புலி!

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/- and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not sent us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ....

ADDRESS ....

....

POST OFFICE .... PIN CODE ....

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ....

Note : We shall not enrol you as a member till we receive the membership fee

1994
Silver Jubilee Year of Chacha Chaudhary

DIAMOND COMICS MAGIC FUN BOX

PAY Rs. 60/- INSTEAD OF Rs. 120/-

- 5 Multi Dimensional Comics Worth Rs. 30/-
- 1 Lunch Box Worth Rs. 20/-
- 10 Diamond Comics Worth Rs. 30/-
- Lot of Gifts Worth Rs. 40/-

Total Worth Rs. 120/-

DIAMOND COMICS PVT. LTD. X-30 Okhla Industrial Area, Phase-2, New Delhi-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம் ஜனவரி 95
மலர் : 12 இதழ் : 12

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

“புத்தாண்டு வாழ்த்துக் கூறாவிட்டால் என்ன? சாதம் வேகாதா? கோழி கூவாதா?” என்று சிலர் விவாதம் செய்கிறார்கள்.

நல்ல நாளில் மற்றவர்களுக்கு வாழ்த்துக் கூறி, தான் மகிழ்வதும், மற்றவர்களை மகிழ்விப்பதும் மரபு. எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், இப்படி வாழ்த்தி மகிழ்வதன் காரணமாக, பகை மறந்து, நட்புறவு துளிர்க்கிறது. புதிய பாச உறவுகளை வளர்த்துக் கொள்ள இது ஒரு கருவியாகிறது. புதிய நண்பர்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும், பேசாமூஞ்சிகளைப் பேசி மகிழ்வித்துப் புன்னகை பூக்க வைக்கவும் பெரிதும் உதவும். ஆங்கிலப் புத்தாண்டை நாம் ஏன் கொண்டாடுவது என்று நினைக்கலாம். மற்ற புத்தாண்டுகள் எல்லாம் அந்தந்த வட்டார, மாநில அளவில் நின்று விடுபவை. இந்த ஆங்கிலப் புத்தாண்டு ஒன்றுதான் சாதி, மத, இன வேறுபாடு இன்றி உலகம் முழுவதும் கொண்டாடப்படுவது. தேர்வு எழுதுவது, கணக்கு வைப்பது, சம்பளம் வாங்குவது எல்லாமே ஆங்கில மாதக் கணக்கில்தான். உலகம் முழுவதும் இது பரவியுள்ளது. பிறந்த நாள் கொண்டாடுவதும் இதன்படியே. எனவே, மற்றவர்களுடன் இணைந்து அவர்களுள் நாமும் ஒருவராக அல்லது அவர்களையும் நம்மில் ஒருவராக எண்ணி வாழ்த்துவதால் உலக சகோதரத்துவ உணர்வு வரும். நாமும் ஒருவராக நம்முள் ஒருவராக மற்றவர்களையும் நினைத்துக் கொள்ள இது பெரிதும் உதவும்.

ஒவ்வொருவருக்கும் ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். இது ஓவியம், விளையாட்டு, பாடல், பேச்சு என்று எந்தத் துறையாக வேண்டுமானாலும் இருக்கலாம். ‘இந்தப் புத்தாண்டில் நான் இதற்கென குறிப்பிட்ட அளவுக்கு முன்னேறிக் கடுமையாக முயற்சிப்பேன்’ என்று ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் கல்வியைக் கோட்டை விட்டுவிடக் கூடாது. கல்வியும் இருந்து, இவையும் இருந்தால்தான் பெருமை.

இந்த மாதம் புத்தாண்டு தினத்துடன், பொங்கல் பண்டிகை, குடியரசு தினம் எல்லாம் வருகின்றன. எல்லாவற்றிற்கும் சேர்த்து உங்களை வாழ்த்துகிறேன்.

அடுத்த இதழில் பல புதுமைகளை நீங்கள் காணலாம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்


கோகுலம்

1995 ஜனவரி

இந்த இதழில்....



* சாதனைகளின் சிகரம் - பக்கம் 90



* பறவைகளின் இரை விசித்திரங்கள் - பக்கம் 75



* கனடாவைக் கலக்கிய கராத்தே வீரன் - பக்கம் 9

என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்!



• வை. ரவிசங்கர்

• கே. சிவராஜன்

எங்க வீட்டுக்கே.....

நான் எங்கள் ஊர் பஸ் நிற்கும் இடத்தில் நின்று கொண்டிருந்தேன். ஒரு பஸ் வந்து நின்றது. ஒருவர் என்னிடம் வந்து 'தம்பி' என்று கூப்பிட்டு, எங்க அப்பா பெயரைச் சொல்லி வீட்டுக்கு வழி கேட்டார்!

"நீங்கள் கேட்பது எங்கள் வீடுதான்" என்று கூறி அவரை அழைத்துச் சென்று எங்கள் வீட்டைக் காட்டிப் போகச் சொன்னேன். மறுபடி விளையாடத் திரும்பினேன்.

"எங்கேடா போறது? நான்தான் உன் மாமா வந்திருக்கிறேன். விளையாடப் போய்க் கொண்டிருந்தா எப்படி?" என்றார் அவர். நான் அதிசயத்தோடு திரும்பினேன். அவர் தன் கையில் வைத்திருந்த கேமராவால் என்னைப் புகைப்படம் எடுத்தார்.

பிறகுதான் தெரிந்தது அவர் கோயம்புத்தூரில் இருக்கும் என்னுடைய பெரிய மாமா என்று. அவரை நான் பார்த்ததே இல்லை. அப்போதுதான் பார்த்தேன். மாமா எடுத்த அந்த போட்டோ இன்றும் என்னிடம் இருக்கிறது.

- கே. சிவராஜன், கோவிந்தபுத்தூர்.

அதையும் விடலை!

எங்கள் பள்ளிக்கூடத்தில் 'Sports Day'. அன்று நிறையப் புகைப்படம் பிடித்தார்கள். ஓடினவர்கள் ஓடாதவர்கள் எல்லோரையும் படம் பிடித்தார்கள். 'Sports' முடிந்த பிறகு இரண்டு வாரம் கழித்து ஸ்போர்ட்ஸ் அன்று பிடித்த புகைப்படங்கள் எல்லாவற்றையும் பள்ளி நோட்டீஸ் போர்டில் பார்வைக்குப் போட்டிருந்தார்கள். நமக்கு பிடித்த போட்டோவை, பள்ளி அலுவலகத்தில் போய் பெயர், போட்டோ எண்ணைக் கொடுத்து, பணம் தந்து வாங்கிக்கலாம். நான் தேடித் தேடிப் பார்த்தேன். என் உருவம் எந்த போட்டோவிலும் இல்லவேயில்லை! கடைசியாக தூண்டித் துருவிப் பார்த்ததில் போட்டோ நம். 106 ல் எங்கோ ஓர் ஓரமாக இருந்தேன். அதுகூட முழு உருவம் இல்லை! அதையும் விடாது ரூ. 15 கொடுத்து வாங்கினேன். இருந்தாலும் எனக்கு மிகவும் வருத்தம்தான். ஆனாலும் அமைதியாகப் பொறுத்திருந்தேன். கடைசியில் அடுத்த ஸ்போர்ட்ஸ் டே வந்தது. அதில் ஓடி முதலாவதாக வந்ததற்காக என்னைத் தனியாகப் பரிசுடன் போட்டோ பிடித்தார்கள்.

எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. இன்றும் கூட அதை 'Frame' போட்டு பத்திரமா வெச்சிருக்கேன்.

- வை. ரவிசங்கள், சோளிங்கர்.

எப்பவுமே வேண்டாம்!

புவனை கலைச்செழியன்

“அப்பா! பள்ளியின் வருஷாந்திர விளையாட்டுப் போட்டிகளிலே இந்த ஆண்டும் நான்தான் அப்பா, ஃபர்ஸ்ட் வந்து, சாம்பியன் ஷிப் தகுதி பெற்றிருக்கிறேன்! இதோ பாருங்கள், அதற்கான கப்!”

உற்சாகமுடன் கூறியபடி, விளையாட்டு வீரனுக்கு உரிய பரிசான அந்தப் பெரிய கோப்பையை அப்பாவின் முன் உயர்த்திப் பிடித்தவாறு நின்றான் சூர்யா.

“இங்கே வாயேன்! நம்ம பிள்ளை எவ்வளவு பெரிய கௌரவத்தோடு வந்திருக்கிறான், பாரேன்!”

உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தார் அப்பா.

அம்மாவும், உள்ளக் களிப்பு முகத்தில் பிரதிபலிக்க, ஓட்டமும் நடையுமாய் வந்தாள்.

“நீங்க ரெண்டு பேரும் பள்ளிக்கு வந்து, நான் கலெக்டர் கையால் பரிசு வாங்கினதைப் பார்த்திருந்தீங்கன்னா, இன்னும் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்!” சூர்யாவின் குரலில் ஆதங்கம் தொனித்தது.

“தப்புதான் சூர்யா! வருஷா வருஷப் நீதான் சாம்பியனா வர்றே. அதை நினைச்சி இந்தத் தடவை நாங்க கொஞ்சம் அலட்சியமாய் இருந் துட்டோம். இனிே அப்படியெல்லா நடக்காது” - அம்ம சொன்னாள்.

“ஆமாம் கண்ணா. அடுத்த முறையி விருந்து நிச்சய நாங்க, தவறாம ஆண்டு விழாவுக்கு வந்து, நீ பரிசு வாங்கறதைக் கண்குளிரப் பார்க்கறோம்” - இது அப்பா.

“இரண்டு பேரும் சேர்ந்து நில்லுங்கப்பா!”

மகன் சொன்னபடியே, அப்பாவும் அம்மாவும் நெருக்கமாக நின்றனர். கோப்பையை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கினான் சூர்யா. பெற்றோரும் அவனைச் சிரம் தொட்டு வாழ்த்தினர்.

“அப்பா, நான் ஒவ்வொரு தரமும் இந்த மாதிரி சாம்பியன் ஆகும்போதெல்லாம் எனக்கு விலை உயர்ந்த பொருளாக வாங்கிப் பரிசு கொடுப்பீங்களே? இந்த வருஷமும் அப்படியே செய்வீங்களா?”

“கண்டிப்பா செய்யறேன். என்ன



ீவணும்னு சொல்லு!”

“ஆட்டோமாடிக் டைட்டன் வாட்ச் கட்டிக்கணும்னு எனக்கு ஆசையா இருக்கு, அப்பா!”

பையன் சொற்ப விலையில் ஏதாவது வாங்கித் தரச் சொல்வான் என்று நினைத்த அப்பாவுக்கு, அவன் தானியங்கிக்கைக் கடிகாரம் கேட்டது, திடீர்

திகைப்பை உண்டுபண்ணியது. அம்மாவும் சற்று அதிர்ச்சியடைந்தாள்.

"நீ ஆசைப்படற டைட்டன் வாட்ச் வாங்க ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகுமே சூர்யா!" என்றார் சற்று இரங்கின குரலில்.

"அப்பாவுக்கு இந்த வருஷம் வியாபாரத்தில ஏகமா நஷ்டம் ஆகிவிட்டதே சூர்யா? அப்புறமா செளகரியம் ஏற்பட்டு, தொழில் நல்லாவர்றப்போ, உன்னோட ஆசையைப் பூர்த்தி பண்ணிடறோமே, ராஜா!" –அம்மா சமாதானப்படுத்தினாள்.

"நான் எப்போதாவது எனக்கு அதை வாங்கிக் கொடுங்க, இதை வாங்கிக் கொடுங்கன்னு வற்புறுத்தி இருக்கிறேனா? முதல் முதலாய் இப்போது தானே நானாக என் ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறேன்?"

"உண்மைதான் சூர்யா! ஆனால், நிலைமை இந்தச் சமயத்தில் சீராய் இல்லையே? கிராமங்கள்லேருந்து சரக்கு வர்றது எக்கச்சக்கமா குறைஞ்சு போச்சு. கோடை காலம் மாதிரியே இந்த வருஷம் முச்சூடும் கானல் தகிச்சுது. தானிதவசெல்லாம் சரியா விளையல்லே. ஏதோ வாய்க்கும் வயித்துக்கும் எட்டினால் போதும்னு ஜனங்கள்லாம் தவிச்சிக்கிட்டிருக்காங்க..." அப்பாவால் மேற்கொண்டு பேச முடியவில்லை. நெஞ்சு அடைத்தது.

"அத்தோட பணப்புழக்கம் வேற ரொம்பக் குறைஞ்சு போய், கடனுக்குத்தான் தற்சமயம் சாமான்களைக் கொடுத்துக்கிட்டு வர்றோம். ஆனால், இந்த நிலைமை இப்படியே நீடிக்கும்னு சொல்ல முடியாது. நல்ல காலம் பிறக்கும். வாடிக்கைக்காரங்க வாங்கின கடனையெல்லாம் திருப்பி அடைச்சிடுவாங்க. பணம் நிறைய புரளும். அப்போ நீ





ஞாபகப்படுத்தக் கூடத் தேவையில்லை. உனக்கு அந்த உசத்தி வாட்சை கட்டாயம் வாங்கித் தந்திடுவோம்" - அம்மா சுமுகமாகச் சொல்லி முடித்தாள்.

"என்னம்மா இது, சாக்குப் போக்கு! நான் உங்களுக்கு ஒரே மகன்தானே? இந்த ஒருத்தனோட ஆசையை நிறைவு செய்ய முடியாதபடி அவ்வளவு சிரமமா உங்களுக்கு?"

"நீ எப்படி நினைச்சாலும் நினைச்சிக்கோ சூர்யா. தற்சமயம் சுத்தமாய்ப் பணத் தட்டுப்பாடுதான் நமக்கு!"

"எப்படியாவது, பட்டினி கிடக்காம, மூணு வேளையும் சாப்பிட வழியிருந்தால் போதும்னு நான் ஓடுதுடா சூர்யா. கையில இருந்தா, உன்னோட ஆசையை நிறைவேத்தி வைக்காம, இப்பிடி சாக்குப்போக்கு சொல்லித் தட்டிக் கழிப்பமா?"

அம்மாவின் கேள்வி நியாயமாகவே பட்டது. ஆனாலும், சூர்யா தன் பிகுவைத் தளர்த்திக் கொள்கிறவனாகத் தெரியவில்லை.

அவனது உள்ளம் கலங்கியது. அதன் பிரதிபலிப்பாக முகம் ஒரு மாதிரியாய் மாறியது. "உங்க இஷ்டப்படியே செய்யுங்க அம்மா" என்று வேண்டா வெறுப்புடன் கூறிவிட்டு, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திண்ணைப் பக்கம் சென்றான்.

"மனசு சோர்ந்துடாதடா, செல்லம்! கடைக்குப் போய்ட்டு வர்றேன். எப்படியும் உன்னோட விருப்பத்தைப் பூர்த்தி செய்யணும்ங்கிறதுதான் என்னோட ஆசை!" என்று கூறிக் கொண்டே படியிறங்கித் தெருவில் நடக்கத் தொடங்கினார் அப்பா.

சூர்யா என்ன நினைத்தானோ தெரியவில்லை. "நானும் உங்களோட வர்றேன், அப்பா" என்று சொல்லி அப்பாவைப் பின்தொடர்ந்து கடைக்குப் போனான்.

"முதலாளி! வீட்டிலே எல்லாம் துடைச்சி வச்ச மாதிரி இருக்கு. பையனுக்குத் தேர்வுக் கட்டணம் ஐம்பது ரூபாய் கட்டியாகணும். நாளன்னிக்குத்தான் கடைசி தேதி. அத்தோட வீட்டுக்கும் சாமான் - சட்டு கொஞ்சம் வாங்கிப் போடணும். ஒரு நூறு ரூபாய் கொடுத்தீங்கன்னா..."

மண்டிக் கடைக் கணக்குப் பிள்ளை அப்பாவைப் பார்த்துத் தலையைச் சொறிந்தார்.

"என்ன கணக்குப் பிள்ளை, இந்தப் பஞ்ச காலத்தில் உனக்கு மாசச் சம்பளம் நறுக்காக் கொடுக்கவே எவ்வளவு கஷ்டப்படறேன்! அப்படியிருக்க, நீ திடீர்னு வந்து இப்படிக் கேட்டா, நான் என்ன பண்றது?"

"நீங்க எப்படியாச்சும் இந்த நெருக்கடியான நேரத்தில் எனக்குக் கைகொடுக்கணும், முதலாளி! கெஞ்சிக் கேட்டுக்கிறேன். என் சம்பளத்திலேருந்து இரண்டு தவணையாய்க் கழிச்சுக்குங்க... இப்ப இருக்கிற நிலைமையில, நான் வேற யாரைப் போய் உதவி கேட்க முடியும்?"

'கஞ்சிக்கு உப்பில்லை என்று சொல்கிற ஆளுக்கு உதவுவதா? பாலுக்குச் சர்க்கரை இல்லை என அடம்பிடிக் கிறவனைச் சமாளிப்பதா?'

மனம் குழம்பியவராய் மகனை நோக்கினார் அப்பா.

"அப்பா, அப்பா... கணக்குப் பிள்ளை பாவம்பா! அவர் மகன் செல்வமணி என்னோட படிக்கிறவன்தான்பா! தேர்வுக் கட்டணம் கட்டாட்டிப் போனா, அவன் படிச்ச படிப்பு வீணாகப் போய் விடும். எப்படியாவது கணக்குப் பிள்ளைக்கு ஒத்தாசை பண்ணப் பாருங்க! நான் வீட்டிலே வீம்பு பிடிச்சதை நினைச்சு உண்மையாகவே வருத்தப் படறேன்பா. எனக்கு அவ்வளவு விலை கொண்ட வாட்ச் இப்போ மட்டுமில்லை, எப்பவுமே வேண்டாம், அப்பா. நமக்கு விசுவாசத்தோடு ஊழியம் செய்கிற கணக்குப் பிள்ளையோட மகனைக் கரையேத்தினால் போதும்!"

சூர்யாவின் மனமாற்றத்தைக் கண்டு, உண்மையிலேயே பூரித்துப் போனார் அப்பா.

"கண்ணா! எவ்வளவு உயர்ந்த மனசு உனக்கு! உன் நல்ல எண்ணத்திற்கு, இப்ப கொஞ்சம் தாமதம் ஆனாலும், பின்னாலே உன் கடிகார ஆசை நிச்சயம் நிறைவேறும். கட்டாயம் நான் அதை நிறைவேத்தியே வைப்பேன்!"

பெருமிதத்தோடு இப்படிக் கூறிய ராகவன், கணக்குப் பிள்ளை கேட்ட தொகையைக் கொடுக்கக் கல்லாவைத் திறந்தார்.

தேங்காய்த் திருடர்கள்!

ஓர் ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் திருடர்கள். ஆனால் உண்மையே பேசக் கூடியவர்கள். அவர்கள் திருடி மாட்டிக் கொண்டு விட்டாலும், உண் மையையே பேசி ஒப்புக் கொள்வார்கள். ஆனால் அவர்களை யாரும் தண்டித்ததில்லை. தண் டிக்க முடியாதபடி நடந்து கொள்ளுவார்கள்.

இருவரையும் எப்படியாவது பிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று ஊரார் பகீரதப் பிரயத் தனம் செய்து பார்த்தனர். முடியவில்லை. இருவரும் அத்தனை திறமைசாலிகளாக; அறிவாளி களாக இருந்தனர்.

ஒருநாள் இரவு, சகோதரர்கள் இருவரும் தேங்காய் திருட, ஒரு தென்னந்தோப்புக்குச் சென்றனர். ஒருவன் மரத்தின் மேல் ஏறி, அரிவாளால், தேங்காயை வெட்டித் தள்ளினான். கீழே இருந்த மற்றவன் அவைகளைப் பொறுக்கி சாக்குமூட்டையில் போட்டுக் கட்டினான். இருவரும் புறப்பட்டுச் செல்லும்போது இவர்களைப் பிடிக்கக் காத்திருந்த மக்கள் இருவரையும் கொண்டு போய் மரத்தில் கட்டிப் போட்டனர்.



அடுத்த நாள் காலை ஊர்ச் சபை கூடியது. அவர்கள் இருவரும் உண்மையைப் பேசக் கூடியவர்கள் என்பது அனைவருக்கும் தெரியு மாதலால், தண்டிக்கத் தயாராய் இருந்தனர். முதலாமவன் சொன்னான் : "கடவுள் மேல் ஆணையாக நான் தேங்காயைக் கையால் கூடத் தொடலை" என்று. இரண்டாமவன் சொன் னான் : "கடவுள் மேல் ஆணையா நான் மரத்து மேலே ஏறக் கூட இல்லை!"

அவர்கள் இருவரும் சொன்னது உண்மை யாதலால், மக்கள் அவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிட்டனர்.

- எஸ். பி. காயத்ரி, நமனசமுத்திரம்.

கனடாவைக் கலக்கிய கராத்தே புலி!



கராத்தே வகுப்பில் சேருவதற்காக வந் திருந்த அந்தக் குட்டிப்பையனை ஆசிரியர் வியப்போடு நோக்கினார்.

"என்ன சார், எல்.கே.ஜியில் கூட சேர்க்க முடியாத இத்தனை பொடிப் பையனை எப்படி சார் கராத்தே வகுப்பில் சேர்ப்பது? முடியாத காரியம்" என்று கைவிரித்தார் ஆசிரியர்.

"சார், பையனின் வயதை மட்டும் பார்க்காதீர்கள். இவ னைக் கராத்தே கற்க வைத்து உலகப் புகழ்பெற வைக்க வேண் டும் என்று எனக்கு அளவில் லாத ஆசை. அதே போல் இவனுக்கும் இதைக் கற்றுக் கொள்ள ஒரே ஆவல். இவன் கண்டிப் பாக உங்களுக்கும் பெருமை தேடித் தரு வான்" என்று வற்புறுத் தினார் சிறுவனின் தந்தை.

தந்தையின் வற்புறுத் தலைத்தட்ட முடியாது அந்தப் பொடிப் பையனைத் தனது பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொண்டார் அந்த ஆசிரியர். அதற்குப் பிறகுதான் பையன் எல்.கே.ஜி. வகுப்பில் கல்வி கற்கச் சேர்ந்தான்!

தந்தை கூறியது பொய் யில்லை என்பதை வெகு விரைவில் குட்டிப் பையன் காட்டினான். கராத்தே பயிற்சியில் தீவிரமான ஈடுபாடு! அவன் பயிற்சி பெறு வதைக் காணவே கூட்டம் வரும்!

கராத்தே சிறப்புக் காட்சிகள் நடை பெறும் போது சிறுவனும் தவறாது கலந்து கொண்டு பாராட்டைப் பெற்றான். சிறுவர் பிரிவில் சாம்பியனாகி, படிப்படியாக உயர்ந்தான். மாநில அளவில், பிறகு அகில இந்திய (நேஷனல்) அளவில். அண்மையில் கனடா வில் நடைபெற்ற உலக அளவிலான சர்வதேச கராத்தே போட்டியிலும் பங்குகொண்டு கட்டா பிரிவில் தங்கப் பதக்கம் பெற்று தனது மாஸ்டருக்குப் பெருமை சேர்த் துத் தந்திருக்கிறான். இந்தச் சிறு வன்தான் மாஸ்டர் ரஜீஷ். பதி னோறு வயதான இவன் சென்னை ரஜீனா மெட்ரி குலேஷன் பள்ளியில் படித்து வருகிறான்.

கோகுலத்தின் சார் பில் ரஜீஷைப் பார்க் கச் சென்றோம். 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்ற திருக் குறள்தான் ராஜீஷைப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது. உலக சாதனையை நிகழ்த்தி விட்டு வந்திருக்கும் செறுக்கு சிறிதும் தெரிய வில்லை. கலகலவென்று பேசி னான். பளிச் பளிச்சென்று பதிலளித்தான்.

"எத்தனையோ விளை யாட்டுகள், கலைகள் இருக் கும் போது ஏன் கராத் தேவைத் தேர்ந்தெடுத்தாய்?"

"அப்பாவுக்கு நான் கராத்தேவில் பெரிய ஆளாக வந்து உலகப் புகழ் பெற வேண்டும் என்று ஆசை. என் மனதிலும் அப்படி ஓர் ஆசையை அவர் வளர்த்திருந்தார். அதனால், எல்.கே.ஜி. வகுப் பில் சேருவதற்கு முன்பே நான் கராத்தே பயிற்சி வகுப்புக்குப் போய் விட்டேன்."

"உன் நண்பர்கள் கேலி பண்ண

வில்லை?"

"பண்ணாமல் இருப்பார்களா? பண்ணினார்கள். ஆனால், அதையெல்லாம் நான் பெருமையாக எடுத்துக் கொண்டு தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டேன். என்னைக் கேலி பண்ணின வர்களே என் திறமையையும் பெருமையையும் கண்டு மலைக்கும்படி நான் உயர்ந்து காட்டினேன்."

பதில்கள் பளிச் பளிச் என்று வந்ததோடு தெளிவாகவும் வந்தன.

"தினமும் எத்தனை மணி நேரம் பயிற்சி? எப்போ எழுந் திருப்பே?"

"அதிகாலையிலேயே எழுந்து விடுவேன். கராத்தே பள்ளி இங்கே அருகில்தான் இருக்கு. ஒரு மணி நேரம் பயிற்சி. வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு பள்ளிக்குப் போவேன். மாலையில் மறுபடி ஒரு மணி நேரம் பயிற்சி. இரவில் பாடம். வேறு பொழுதுபோக்கு எதையும் நினைக்கக்கூட நேரம் கிடையாது," என்று சிரித்தான் ரஜீஷ்.

"விடுமுறை நாட்களில்?"

"எங்கள் கராத்தே பள்ளி பங்குகொள்ளும் நிகழ்ச்சிகள் ஏதாவது இருக்கும். வெளியூர் போகும் நிகழ்ச்சிகள் இருக் கும். தப்பித் தவறி நேரம் கிடைத்தால் கிரிக்கெட் பார்ப்பேன்."



ரஜீஷ் பங்குகொண்ட கராத்தே போட்டிகள், நிகழ்ச்சிகள், பரிசு பெற்ற விழாக்கள் அடங்கிய புகைப்பட ஆல்பத்தைப் பார்த்த போதும், அவன் வாங்கியுள்ள பரிசுகளைக் கண்ட போதும் பிரமிப்பே ஏற்பட்டது.

"உங்கள் ஆசிரியரைப் பற்றிக் கொஞ்சம் கூறேன்?"


"தமிழ்நாட்டில் உள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய சிறந்த கராத்தே மாஸ்டர்களில் குறிப்பிடத்தக்கவர் எங்கள் மாஸ்டர் சிஹான் கோதண்டன் அவர்கள். சிஹான் என் றால் 'கராத்தே பேராசிரியர்' என்று பொருள். இவருக்கு உடல், பொருள், மூச்சு எல் லாமே கராத்தேதான். கோஜினோ பிரிவின் பயிற்சியாளர். இவரிடம் பயிற்சி பெற்ற பலர் இன்று குறிப்பிடத்தக்க விதத்தில் சிறப்பாக விளங்கி அவருக்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள். படுக்க வைத்து எங்கள் மேல் மோட் டார் சைக்கிளை ஓட்டிக் காட்டி திகைப்பில் ஆழ்த் தியவர்."

"உங்கள் அணி இந்தியாவில் பெற்ற வெற்றி களில் குறிப்பிடத்தக்க போட்டி எது?"

"கடந்த ஆண்டு (94)களில் நடைபெற்ற தேசிய கராத்தே சேம்பியன் ஷிப் போட்டியைச் சொல்ல லாம். இதில் பதிமூன்று வயதிற்குட்பட்டவர்களுக் கான பிரிவில், நான் சிறந்த ஆட்டக்காரனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அகில இந்திய அளவுக்கு உயர்ந்தேன். ஒட்டுமொத்த சேம்பியன் பட்டம் எங்கள் குழுவுக்குக் கிடைத்தது. இந்த வெற்றியின் காரணமாகத்தான் கனடாவில் நடைபெற்ற உலக கராத்தே போட்டியில் கலந்து கொள்ள எங்களுக்கு அழைப்பு வந்தது."

"உலக கராத்தே போட்டியைப் பற்றி கொஞ்சம் விளக்கமாகக் கூறேன்?"

"கனடா நாட்டில் உள்ள லெத் பிரிட்ஜ் நகரில் உலக கராத்தே போட்டி கடந்த ஆண்டு (94) அக் டோபர் 21, 22, 23 தேதிகளில் நடைபெற்றது. அதில்



• ஆசிரியர், பெற்றோருடன்



போற்றுவோம்!

அண்ணா மலையார் வாசலில்
அறுபத்து மூவர் பெருவிழா.
கண்ணி ரண்டும் போதுமோ
காணக் காண இன்பமே!

நாயன் மாரைச் சுமந்திட
நாடி வரும் பிள்ளைகள்.
தூய அன்பின் மிகுதியால்
தூக்கி வரும் கிள்ளைகள்.

செம்மை மிக்க சிறுவர்கள்
சிரித்து வரார் ஓடியே.
அம்மையுடன் அப்பனும்
ஆடிவாரர் தேடியே!

ஆர்ப்பரிக்கும் ஆழிபோல்
அலையலையாய் மாணவர்.
ஆர்வ மிகும் பக்தியை
அனைவருமே போற்றுவோம்!

— வள்ளி முத்தையா

பங்குகொள்ள எங்கள் அணியினரைத் தேர்வு செய்து, அழைப்பு வந்தது. அதோடு, இந்த போட்டிகளில் நடுவராக இருக்கும்படி எங்கள் மாஸ்டருக்கும் அழைப்பு வந்தது. எத்தனை பெரிய பெருமை இது!" என்று சிறிது நேரம் மாஸ்டரின் பெருமைகளில் மிதந்த ரஜீஷ் மீண்டும் தொடர்ந்தான்.

"எங்களுக்கு அழைப்பு வந்தாலும், நாங்கள் போய் வர ஆகும் செலவை அரசாங்கமோ, இல்லை தனி நிறுவனமோ ஏற்றுக் கொண்டால்தான் போக முடியும் என்ற நிலை. சுமார் நான்கு இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. எங்களிடம் பணம் இல்லை. அதனால் எல்லோருமே மனம் உடைந்த நிலையில் இருந்தோம். அப்பொழுதுதான் நம்பிக்கை இல்லாத நிலையில் பணஉதவி வேண்டி தமிழ் நாடு முதலமைச்சருக்கு விண்ணப்பித்தோம். உடனே முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 3,68,000/- ரூபாய் வழங்க உத்தரவிட்டார். அத்துடன் பயண அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கலைத் தவிர்க்க, உரிய அதிகாரிகளுக்கும் தகவல் அனுப்பி உதவினார். எல்லாம் கிடுகிடுவென்று நடந்தன. நாங்கள் புது உற்சாகத்துடன் லண்டன் போய் இறங்கினோம். 'பிளேக்' பயம் காரணமாக, எங்கள் பிளேனைத் தனித்து வைத்து மருந்து தெளித்து, பிறகே இறங்க அனுமதித்தார்கள். இந்தக் காலதாமதத்தால், சரியான நேரத்தில் போய்ச் சேர முடியாது போய் விடுமோ என்று பயந்தோம். ஆனால், அங்குள்ள அதிகாரிகள் தனி அக்கறை எடுத்து உரிய நேரத்தில் எங்களைக் கொண்டு சேர்த்தனர். பிறகுதான் எங்களுக்கு நம்பிக்கை வந்தது" என்றான் ரஜீஷ்.

"கனடா நாட்டில் நடந்த இந்த உலகப் போட்டியில் எத்தனை நாடுகள் பங்கு கொண்டன?"

"இந்தியாவைத் தவிர மெக்ஸிகோ, அமெரிக்கா, கனடா, வியட்நாம், குரோஷியா, கவுத்தமாலா, டொமினிக்கன் குடியரசு, ஹெய்ட்டி, க்யூபா, பனாமா போன்ற பல நாடுகள் பங்குகொண்டன. எங்கள் அணி இரண்டு தங்கப் பதக்கம், மூன்று வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது. கலந்து கொண்டவர்களில் நான்தான் சிறியவன். அதனால் எல்லோருடைய கவனமும் என் பேரில் இருந்தது. அதோடு என்னை சீனியர் அணியில் சேர்த்து போட்டியிட வைத்தார்கள்."

"தங்கப் பதக்கம் வாங்கிய போது என்ன எண்ணினாய்?"

"உலக அரங்கில் நம் நாட்டின் பெருமையைத் தலைநிமிர வைக்க இப்படி ஒரு பொன்னான வாய்ப்பும் கிடைத்து அதை



* முதலமைச்சருடன்

நல்லபடியாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றி பெற்றோமே என்று பெருமிதமாக இருந்தது. அதே நேரத்தில் இதற்குரிய செலவுக்காக இலட்சக்கணக்கான ரூபாயை எங்கள் அணிக்கு வழங்க உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சரின் பெருந்தன்மையையும் அவர் எங்கள் மீது வைத்த நம்பிக்கையையும் நான் எண்ணிப் பார்த்து உருகிப் போனேன்."

"என்னை இந்த அளவுக்கு உயர்த்த திட்டம் போட்டுப் பயிற்சி அளித்த என் ஆசிரியர், என் பெற்றோரையும் எண்ணிப் பார்த்தேன். எனக்குக் கிடைத்த வெற்றி இவர்களுடைய கூட்டு முயற்சியால் கிடைத்ததுதான்" என்றான் ரஜீஷ் அடக்கமாக.

"ஆமாம். எப்பொழுதும் கராத்தேவைப் பற்றியே சிந்தித்து, பயிற்சி பெற்று வருகிறாயே... படிப்பு எப்படி?"

"வகுப்பில் எப்பொழுதும் ரேங்கில் வருகிறேன்" என்று சிரித்த ரஜீஷ், "பெரும்பாலும் வார நாட்களில் நான் எந்தப் போட்டியிலும் பங்குகொள்வதில்லை. ஆனால், தவிர்க்க முடியாதபடி நேரும் சமயங்களில், எங்கள் மாஸ்டர் முன்பே கூறி விடுவார். வகுப்புக்குச் செல்ல முடியாது போகும் அத்தகைய நேரங்களில் என் ஆசிரியர்களும் நண்பர்களும் நடந்த பாடத்தை எனக்காக மறுபடி நடத்திக் காட்டுவார்கள். அவர்கள் இப்படிச் செய்ய மறுத்திருந்தால், என்னால் இந்த அளவுக்கு முன்னேறி இருக்க முடியாது" என்றான்.

"நீ தங்கப் பதக்கம் பெற்றது உன் மாஸ்டருக்குப் பெருமைதானே?"

"கண்டிப்பாக. ஆனால் எனக்கு இந்த வெற்றி கிடைக்கும் என்பதிலும், எங்கள் அணியின் மற்றவர்கள் பெற்ற வெற்றியிலும் மாஸ்டருக்கு மிகுந்த நம்பிக்கை. பயிற்சி தந்தவர் அவர்தானே? இதை அவர் ஏதோ ஒரு தொழிலாகச் செய்யவில்லை. தொண்டாகச் செய்கிறார். பாரத ஸ்டேட் வங்கியில் அவர் உதவி மேலாளராக இருக்கிறார். அளவில்லாத ஆர்வம் காரணமாக, முழு ஈடுபாட்டுடன் அவர் கராத்தே கலையில் பயிற்சி அளித்து வருகிறார். அவருடைய ஈடுபாட்டையும், உழைப்பையும் பார்த்து கராத்தே சர்வதேச சம்மேளனம், கனடா சர்வதேச கராத்தே போட்டியில் 5-வது டிகிரி கறுப்பு பெல்ட்டையும், "சிஹான்" பட்டத்தையும் வழங்கியுள்ளது."

"திரும்பி வந்ததும் முதலமைச்சரைச் சந்தித்தீர்களா?"

"ஓ, எங்கள் அணியினரோடு, மாஸ்டர் தான் அழைத்துச் சென்றார். நாங்கள் பெற்று வந்த பரிசுகளைப் பார்த்து முதலமைச்சர் பாராட்டினார். அவருடன் புகைப்படம் கூட எடுத்துக் கொண்டோமே? எல்லாப் பத்திரிகைகளிலும் வந்ததே? பார்க்கவில்லை?"

"உன் இலட்சியம் என்ன?"

"கறுப்பு பெல்ட் வாங்கி நம் நாட்டிற்கு எங்கள் மாஸ்டரைப் போலவே பெருமை சேர்ப்பதுதான்."

"கோகுலம் வாசகர்களுக்கு என்ன செய்தி?"

"கராத்தே வெறும் தற்காப்புக் கலை மட்டும் அல்ல. மனத்துக்கும் பயிற்சி தரும் உன்னதமான கலை. இதனால், நினைவு வாற்றலும் தன் நம்பிக்கையும் அதிகரிக்கும். படிப்பில் முன்னேறப் பெரிதும் உதவும். தம்பி தங்கைகள் எல்லோரும் இதை அவசியம் கற்க வேண்டும். வாசகர்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துகள்!"

ஆயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் பதிலுக்கு வாழ்த்தி விட்டு கிளம்பினோம்.

அட்டை வண்ணப்படம் : **யோகா**

கமலவேலன்

மறக்க முடியாத மாட்டுப் பொங்கல்!

காட்சி - 1

(விவேக்கின் வீடு. அப்பா, அம்மா, விவேக்.)

விவேக் : அம்மா... அம்மா... நா... ஒண்ணு கேட்பேன். சரின்னு சொல்லணும்.

அம்மா : என்னால முடியறதாயிருக்கணும். கேக்கறதும் நியாயமாயிருக்கணும்.

விவேக் : நேத்திக்குப் பொங்கல்....

அம்மா : அடாடா... நேத்திக்குப் பொங்கல்தான்டா. சொல்ல வந்ததை சட்டுன்னு சொல்லு.

அப்பா : (திரும்பிப் பார்த்து) விவேக்க வரச் சொல்லு. அவனைத் தேடி, சகாய ராஜ், நூருல்லா, தினேஷ்... மூணு பேரும் வந்திருக்காங்க.

விவேக் : (திட்டுக்கிட்டு) ஐய்யய்யோ... அவனுகளே வீட்டுக்கு வந்துட்டாங்களா....?

அம்மா : டேய்... என்னடா... உன் நண்பர்கள் கூட்டமே ஒன்னா வந்திருக்கு! என்னடா விசேஷம்?

விவேக் : அம்மா நேத்திக்குப் பொங்கல்....!

அம்மா : பொங்கல்... பொங்கல்... உன் வாயில என்ன கூழாங்கல்லா...? அதுக்கு மேலே வார்த்தை வரமாட்டேங்குது?

விவேக் : அது வந்தும்மா.. இன்னிக்கு....

அம்மா : *(எரிச்சலுடன்)* மாட்டுப் பொங்கல்!

விவேக் : சரியாச் சொன்னீங்க. இன்னிக்கு மாட்டுப் பொங்கல்.

அம்மா : *(சலிப்புடன்)* பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல்தான். இதைச் சொல்றதுக்குத்தானா இவ்வளவு நேரம் என் வேலையைக் கெடுத்தே!

அப்பா : *(அம்மாவிடம்)* எங்கே அந்த எருமை மாடு? உடனே வெளியில வரச் சொல்லு.

விவேக் : எருமை மாடு... எப்பம்மா வாங்கினீங்க?

அம்மா : அருமையா... உங்க அப்பா உன்னைத்தான் கூப்புடுறாரு. இன்னுமா தெரியலே! இன்னும் நீ அடுப்பங்கரையிலேயே நின்னுக்கிட்டிருந்தா... அவரு... எல்லா விலங்குகளையும் வரிசையா கூப்பிட ஆரம்பிச்சுடுவாரு?

விவேக் : *(பரபரப்புடன்)* அம்மா இன்னிக்கு மாட்டுப் பொங்கல். கருங்கப்பட்டியிலே... ஜல்லிக்கட்டு விழா நடக்குது. அதைப் பார்க்கறதுக்குத்தான் நான் நண்பர்களோட...... போகணும்னு திட்டம். அதுக்குத்தான் எல்லோரும் வந்திருக்காங்க. அப்பாகிட்டே நீங்கதான் அனுமதி வாங்கித் தரணும்.

அம்மா : ஜல்லிக்கட்டுப் பாக்கற



துக்குத்தான் இப்படித் துள்ளிக்கிட்டு நிக்கறியா...? அதெல்லாம் ஆபத்தான விளையாட்டு. மாடுகள் மிரண்டு போய் கூட்டத்துல புகுந்துட்டுதுன்னா... அப்புறம் தப்பிக்கிறது உன்பாடு... என்பாடுன்னு பெரும்பாடாயிடும்.

விவேக் : அம்மா... அம்மா... அந்த கிராமத்துல எங்க கூட படிக்கிற திம்மையா யிருக்கான். அவன் எங்களுக்காக எல்லா வசதியும் செய்து தர்ரேன்னு சொல்லியிருக்கான்.

அப்பா : உன் பிள்ளையாண்டானை உடனே அனுப்பு. அங்கே என்ன, அம்மாவுக்கும் பிள்ளைக்கும் ஜல்லிக்கட்டு சண்டை நடக்குதா?

அம்மா : அதை எப்படிங்க கண்டு பிடிச்சீங்க?

அப்பா : சகாயராஜ்... நூருல்லா... தினேஷ்... மூணு பேரும் புட்டுப் புட்டு வச்சுட்டாங்க.

அம்மா : அப்புறம் என்னடா... அப்பாவையே போய்க் கேளு.

அப்பா : டேய் விவேக். நீ விவேகமானவன். நண்பர்களையும் வரச் சொல்விட்டே. இனிமே... தடுத்தால்... நல்லாயிருக்காது. போயிட்டு பத்திரமா, முழுசா திரும்பி வாங்க.

நண்பர்கள் : ரொம்ப நன்றிங்க.

அம்மா : டேய் விவேக். இந்தா டவுன் பஸ் செலவுக்காக அஞ்சு ரூபா வைச்சுக்க...

விவேக் : தேவையறிந்து கொடுப்பவள் அம்மா.!

அப்பா : அந்த அம்மாவுக்குப் பணம் கொடுக்கறது இந்த அப்பா...!


அம்மா : பசங்க வெளியில காத்துக்கிட்டுயிருக்காங்க. அம்மாவா அப்பாவான்னு பட்டி மன்றத்தை அப்புறம் நடத்தலாம்!


விவேக் : வர்ரேம்மா. அப்பா வர்ரேன்.

அப்பா : கவனம். பாக்கப் போறது ஜல்லிக்கட்டு. கால்கட்டு கைகட்டு இல்லாம வந்து சேருங்க.

சகாயதாஸ் : மாமா. நாங்க கராத்தே வீரர்கள்.

அப்பா : காளைகளுக்குக் கராத்தே தெரியாதே.





நூருல்லா : அங்கிள்... முட்ட வரும் காளைகளை முட்டி போட்டுப் பணிய வைப்போம்.

தினேஷ் : காட்டு வழி போனாலும் கடவுள் துணை உண்டு. மாட்டுக் கூட்டத் தைப் பார்த்துப் பயந்து விடுவோமா என்ன?

அம்மா : இப்பவே மணி நாலாகப் போகுது. சீக்கிரம் கிளம்புங்க... பேசிக் கிட்டே நின்னா.... ஜல்லிக்கட்டு முடிஞ் சுடும். அப்புறம் புல்லுக்கட்டு விக்கிறவங் களைத்தான் பார்க்க முடியும்.

(நண்பர்கள் சிரித்துக் கொண்டே புறப்படுகிறார்கள்.)

காட்சி - 2

(விவேக்கின் வீடு. திம்மையா, அப்பா, அம்மா.)

அம்மா : என்னங்க மணி எட்டாகப் போகுது. விவேக் இன்னும் வரலையே?

அப்பா : அவன் மட்டுமா போயிருக் கான். நண்பர்கள்ளாம் துணைக்குப் போயிருக்காங்க. பத்திரமா வந்து சேர் வான். பயப்படாதே. நீ சாப்பாட்டைப் போடு.

அம்மா : ஊஹூம். விவேக் வந்தப் புறம்தான் சாப்பாடு.

(திம்மையா வருகிறான்.)

அப்பா : வா... திம்மையா. என்ன நீ மட்டும் வர்றே? உன் நண்பர்கள்ளாம் ஜல்லிக்கட்டுப் பார்க்கணும்னு சொல் லிட்டு உங்க ஊருக்குத்தானே போயிருக் காங்க? நீ இங்கே இருக்கியே!

திம்மய்யா : அடேடே! அப்படியா? நான் பார்க்கலையே. ஊருக்குள்ளே ஒரு சின்னத் தகராறு. அதுவே பெரிய சண் டையா மாறிட்டுது.

அம்மா : ஐய்யய்யோ... என்ன சண்டை?

திம்மய்யா : யாரு வீட்டுக் காளையை முதல்ல மைதானத்துல மோத விடற துன்னு சண்டை. அதனால மாடுகள் மோதறதுக்குப் பதிலா மனுஷங்க.... ஒருத்த ரோட ஒருத்தர் பயங்கரமா மோதிக்கிட் டாங்க.

அப்பா : முடிவு என்ன ஆச்சு?

திம்மையா : மொத்தத்துல... ஜல்லிக் கட்டு விழாவே நடக்கலே.... மனிதர்களின்

மோதல் விழாதான் நடந்தது. அதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.

அப்பா : *(திடுக்கிட்டு)* விவேக்கையும், உன் நண்பர்களையும் நீ பார்க்கலையா?

திம்மைய்யா : நான் ஐந்து மணிக்கே ஊரை விட்டுப் புறப்பட்டுட்டேன். வழியிலே 'டவுன் பஸ்' பிரேக்டவுன் ஆயிடுச்சு. அதான்... இங்கே வர லேட்டாயிடுச்சு....

அம்மா : *(பதைபதைப்புடன்)* என்னங்க இது! பிள்ளைங்களைத் தேடுங்க... கலாட்டாவுல மாட்டிக்கிட்டு அடிபடப் போறாங்க.

அப்பா : புலம்பாதே. திம்மைய்யாவைக் கூட்டிக்கிட்டு அவங்க ஊர்லேயே போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்.

(வெளியிலிருந்து விவேக்கும் நண்பர்களும் வீட்டிற்குள் வருகிறார்கள்.)

அம்மா : *(மகிழ்ச்சியுடன்)* வந்துட்டீங்களாப்பா! உங்களுக்கு ஒண்ணும் அடிகிடி படலையே?

விவேக் : அம்மா. நாங்க திம்மைய்யாவோட ஊருக்கே போகலே.

அப்பா : அப்புறம்... வேற எங்கே போனீங்க? பொய் சொல்லப் பழகிட்டியா?

சகாயதாஸ் : கோபப்படாதீங்க அங்கிள்.

நூருல்லா : பஸ் ஸ்டாண்ட் பக்கத்துல ஒரு கன்றுக்குட்டி... ஆட்டோவுல அடிபட்டு... துடிச்சுக்கிட்டுக் கிடந்தது.

தினேஷ் : இடது பின்னங்கால்ல பலமான அடி.. கதறித் துடிச்சுது. யாருமே அதைக் கண்டுக்கலே.

விவேக் : பாக்கறதுக்குப் பாவமாயிருந்தது. நாங்க மூணு பேரும் உடனே வேற ஒரு ஆட்டோவைப் பிடிச்சு... கால் நடை மருத்துவமனைக்கு அதைத் தூக்கிட்டுப் போனோம். எப்படியோ.. கன்றுக் குட்டியைக் காப்பாத்திட்டோம்.

திம்மைய்யா : அது யாருடைய கன்றுக்குட்டி?

விவேக் : அதைக் கண்டு பிடிக்கறதுக்குத்தான் இவ்வளவு நேரமாயிட்டுது. பஸ் ஸ்டாண்ட் பக்கத்துல மாடு வளர்க்கறவங்க வீட்டுக்கெல்லாம் போய் விசாரிச்சு... ஒரு வழியாக் கண்டு பிடிச்சு ஒப்படைச்சுட்டு வர்றோம்.

நூருல்லா : நேரமும் ஆயிடுச்சு. வச்சிருந்த பணமெல்லாம் ஆட்டோவுக்குக் கொடுத்துட்டோம்.

சகாயதாஸ் : ஆனா... கன்றுக்குட்டிக்கு சொந்தக்காரங்க வீட்டுல மூக்குப் பிடிக்க மாட்டுப் பொங்கல் சாப்பிட்டோம்... மறக்க முடியாத மாட்டுப் பொங்கல்.

அம்மா : மாட்டுப் பொங்கலும் அதுவுமா... நல்ல காரியம் செய்திருக்கீங்க.. என்னங்க நீங்களும் திம்மைய்யாவும் சாப்பிட வாங்க.

அப்பா : வா.. திம்மைய்யா. சாப்பிட்டுட்டு ஊருக்குக் கிளம்பு.

அம்மா : விவேக்... உனக்கும் உன் நண்பர்களுக்கும் சுடச் சுட... பசும்பால் தர்றேன்.....

(எல்லோரும் பாடுகிறார்கள்.)

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு.
துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி."

(பாடுகிறார்கள்.)



சந்திரமண்டல இரவு!

ஒரு பகலும், ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள் என்று நாம் கூறுகிறோம். ஆனால் சந்திர மண்டலத்தில் அத்தகைய ஒரு நாள் என்பது நமது முப்பது நாட்களுக்குச் சமம். அங்கு தொடர்ந்து 15 நாள் இரவாக இருக்கும். அடுத்து 15 நாள் பகலாக இருக்கும்.

— எஸ். விஜயாசீனிவாசன்

தொழிலதிபர் கந்தசாமியின் ஒரே செல்லப் பெண்தான் பானுமதி. தாயில்லாத சிறுமி. அதனால், அவள் கண்கலங்க கந்தசாமி சகிக்க மாட்டார்.

கந்தசாமி ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் சம்பாதித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் கடுமையான உழைப்பாளி. அவரிடம் சூதுவாது கிடையாது. பழைய பண்பாட்டில் பற்றுள்ளவர். தொழிலில் நெளிவு சுளிவு தெரிந்தவர். அதிர்ஷ்டமும் கைகூடியது. தொழில் பெருகியது. காரும் பங்களாவும் அடிக்கடி வெளிநாட்டுக்குப் போகும் அவசியமுமாக வளர்ந்து விட்டார். பானுமதி பிறந்த பிறகுதான் அவருக்கு இந்த உயர்வு ஏற்பட்டது. அதனால் பானுமதியிடம் அவருக்குத் தனி அன்பு. அவளை எந்தக் குறையுமின்றி வளர்ப்பதில் அக்கறை காட்டினார். அவள் எது கேட்டாலும் வாங்கித் தருவார். வெளிநாட்டிலிருந்து வரும் போதெல்லாம் விதவிதமான அதிசயப் பொருள்களை வாங்கி வந்து குவிப்பார்.

விரும்பிக் கேட்பவை எல்லாமே உடனுக்குடன் கிடைத்தாலும், நினைத்தது எல்லாம் உடனுக்குடன் நடந்ததாலும் பானுமதியின் மனத்தில் ஒரு பணக்காரச் செருக்கு வளர்ந்தது. சாதாரண மக்களை விடத் தான் மேல்நிலையில் உள்ளவள் என்ற எண்ணம் குடிகொண்டது. எல்லோருமே தனக்கு அடங்கிப் போக வேண்டும் என்ற ஆணவப் போக்கு உருவாகி வளர்ந்தது. எல்லோரையும் துச்சமாக எண்ணினாள்.

மகளின் போக்கு கந்தசாமிக்கு அதிர்ச்சியளித்தது. தாயில்லாதவள் என்று அவளுக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்ததன் விளைவே இது என்பது அவருக்கு நன்கு புரிந்தது. ஆனால் அவளை எப்படித் திருத்துவது என்றுதான் அவருக்குத் தெரியவில்லை.

கந்தசாமி சாதாரண நிலையில் இருந்து தனது உண்மையான உழைப்பால் படிப்படியாக உயர்ந்தவர். அதனால், ஏழைகளின் துன்பம் எப்படி இருக்கும் என்பதை அனுபவித்தவர். அதை எல்லாம் அவர் மறந்து விடவில்லை. இன்னும் சொல்லப் போனால் உயர்ந்து விட்ட அந்த நிலையிலும், தான் இப்படி உயர உதவியவர்கள் யாரையும் அவர் மறக்கவில்லை. பழைய பணிவோடும் அன்போடுமே அவர் இருந்தார். அதனால், செல்ல மகளின் ஆணவப் போக்கு அவரை நடுங்க வைத்தது. அதே சமயம் மகளைக் கடிந்து கொண்டு கடுமையாக நடந்து கொள்ளவும் அவர் மனம் ஒப்பவில்லை.

ஆதிநாளிலிருந்தே கந்தசாமியிடம் விசுவாசமாக ஊழியம் செய்து வருபவன் டிரைவர் செல்லையா. ஆரம்பத்தில் இருந்த செவலைக் காளை பூட்டிய வில் வண்டியை ஓட்டிய அவன் இப்போது கந்தசாமியின் 'செவர்லைட்' காரை ஓட்டு

திருவரசு



கிறான். அதோடு பானுமதியைத் தூக்கி வளர்த்தவனும் செல்லையாதான். கந்தசாமி அவனை வெறும் டிரைவராக மதிக்கவில்லை. தன் குடும்பத்தில் ஒருவனாகவே மதித்தார். அந்த அளவுக்கு அவனும் அவர் நலனில் அக்கறை கொண்டவனாகி உண்மையாக நடந்து கொண்டான். பானுமதியின் கான்வென்ட் படிப்பும் 'தாட் பூட்' நடவடிக்கைகளும் அவனுக்கும் கவலையாக இருந்தது. சின்னவர் பெரியவர் என்ற வயது வித்தியாசம் கூடப் பாராது பானுமதி, வீட்டுப் பணியாளர்களைக் கடுமையாகப் பேசி, மனம் புண்பட நடந்து கொள்ளும் சமயங்களில் செல்லையாவுக்கு மனம் பொறுக்காது.

"பெரியவர்களை இப்படி எல்லாம் மரியாதை இல்லாமல் பேசக் கூடாதம்மா. ஐயா இந்த அளவுக்கு உயர அவங்களும் ஏதாவது ஒருவகையில் காரணமா இருந்தவங்கம்மா" என்று செல்லையா கூறினால், பானுமதி வெறுப்புடன் முறைப்பாள்.

"எப்பப் பாரு இந்தச் செல்லையா என்னைக் குத்தம் சொல்லிக்கிட்டே இருக்கான்" என்று தந்தையிடம் சிணுங்குவாள். எப்படி இவளைத் திருத்துவது என்று கவலைப்படலானார் கந்தசாமி.

விடுமுறை நாட்களில் வீட்டில் பொழுது போகாமல் ஊர் சுற்றுவதை வழக்கமாகக் கொண்ட பானுமதிக்கு, அடிக்கடி செல்லையாவின் தயவை நாடுவது வெறுப்பாக இருந்தது. அவள் எங்கே போக வேண்டும் என்றாலும் கந்தசாமியிடம் சம்மதம் வாங்கிக் கொண்டுதான் செல்லையா அழைத்துப் போவான். சொன்ன நேரத்துக்குத் திரும்பி வர வேண்டும் என்பான். அப்பாவுக்குத் தெரியாமல் தோழிகளுடன் சினிமாவுக்குப் போகலாம் என்றால் கூட முடியவில்லை.

"இவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு வேறு டிரைவரை அமர்த்த ஏற்பாடு செய்யணும். இந்தப் பழம்பெருச்சாளி இருந்தா, என் இஷ்டப்படி ஊர் சுற்ற முடியாது. யாரையும் திட்டவோ, அதட்டவோ முடியாது" என்று கருவிக் கொண்டாள். அடிக்கடி தந்தையிடம் செல்லையாவைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வெறுப்பேற்றிக் கொண்டு வந்தாள். தன் மகளின் குணமறிந்த கந்தசாமி அவள் பேச்சையெல்லாம் காதில் வாங்கவில்லை.

அன்று செல்லையா கார் ஓட்ட, பானுமதி பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தாள். வழியில் பஸ் ஸ்டாண்டில் அவருக்குத் தெரிந்த ஒரு சிறுமி. அவள் பெயர் மாலா. பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். சிறுமியின் முகத்தில் கவலை. படபடப்பு. செல்லையா காரை ஓரமாக நிறுத்தி சிறுமியிடம், விசாரித்தார். "எனக்கு ஹிந்தி தேர்வு. பத்து மணிக்கு நேரு மண்டபத்தில் இருக்கணும். ஒரு பஸ்ஸும் நிக்காம போகுது. இன்னும் ஐந்து நிமிஷம்தான் இருக்கு. எப்படி போய்ச் சேருவது என்று கவலையா இருக்கு" என்று கண்ணீர் விட்டாள் சிறுமி.

"வண்டியிலே ஏறிக்கோ மாலா. நான் உன்னை டயத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்துடறேன்" என்று முன் கதவைத் திறந்து விட்டான் செல்லையா. கார் வேகமெடுத்தது. மாலாவை இறக்கி விட்டுப் பானுமதியின் பள்ளிக்குக் காரைச் செலுத்தினான். காருக்குள் பத்ரகாளியாகி உட்கார்ந்திருந்தாள் பானுமதி. மாலையில் அப்பா வந்ததும் எரிமலையாகி அவரிடம்



வெடித்தாள்.

"தெருவோட போற யாரோ ஒரு அனாதைக்கு இந்த செல்லையா நம்மோட காரிலே சவாரி கொடுக்கிறதுன்னா எத்தனை துணிச்சல் இருக்கணும் அவனுக்கு? கண்டவங்களுக்கெல்லாம் விட்டு கொடுக்கவா நாம கார் வச்சிருக்கோம்? எதேச்சையா இன்னிக்கு நான் பார்க்க நேர்ந்தது. இப்படி நம்ம காரை இன்னும் எப்படியெல்லாம் தன் சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்தறானோ? இப்படிப்பட்ட டிரைவர் நமக்கு உதவாதப்பா. உடனே இவன் சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பி விட்டு வேற டிரைவரை ஏற்பாடு பண்ணுங்க..."

இன்னும் என்னென்னமோ கூறி செல்லையாவை வேலை நீக்கம் செய்தே ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள் பானுமதி. ஏதோ ஒரு முடிவுக்கு வந்த கந்தசாமி, அவள் விருப்பப்படியே செல்லையாவின் சீட்டைக் கிழித்து அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

பானுமதிக்கு ஒரே கொண்டாட்டம். புதிய டிரைவர் ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டார்.

நாட்கள் ஓடின. மகாபலிபுரத்தில் கோடை விழா ஒன்று நடந்தது. பள்ளி மாணவிகள் பங்கேற்கும் ஒரு நடன நிகழ்ச்சியும் இருந்தது. அதில் பள்ளியின் சார்பில் நடனமாட பானுமதியைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். ஏற்பாடு செய்திருந்தவர்கள், "எம்மா, எங்கள் வேனிலேயே வருகிறாயா?" என்று கேட்டபோது, "எனக்குத் தனி கார் இருக்கு. நான் வந்து கொள்கிறேன். மற்றவர்களோடு ஒண்டிக் கொண்டு வர எனக்கு அவசியமே இல்லை" என்று பணச்செருக்கு தெரியப் பேசினாள் பானுமதி.




பிற்பகலில் தன்னுடைய காரில் மகாபலிபுரம் கிளம்பினாள். புதிய டிரைவர் தான் ஓட்டினார். முட்டுக்காட்டைத் தாண்டியதும் கார் நின்றுவிட்டது. டிரைவர் இறங்கி என்னென்னவோ பண்ணிப் பார்த்தார். முக்கால் மணிதான் ஓடியதே தவிர கார் ஓடவில்லை!

"மெக்கானிக்தாம்மா வந்து பார்க்கணும்" என்று கைவிரித்தார் டிரைவர்.

பானுமதி எரிமலையாக வெடித்தாள். டிரைவரின் முகத்திலும் பணிவு மறைந்து கடுமை நிறைந்தது.

"இத பாரும்மா, நான் உங்க கார் டிரைவரா இருக்கலாம். ஆனால் அதுக்காக உங்க அடிமை இல்லை. என் உடம்பிலும் இரத்தம்தான் ஓடுது. மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்கக் கத்துக்க" என்று கூறி விட்டான்.

பானுமதிக்கு ஒரே அதிர்ச்சி. இதற்கு மேல் கூட கடுமையாக அவள் செல்லையாவைத் திட்டியிருக்கிறாள். ஆனால் செல்லையா இப்படிப் பதிலுக்கு அதட்டி அவளை அதிர்ச்சி அடைய வைத்தது கிடையாது! அதோடு இப்படி ஒருமுறை கூட காரைப் பாதி வழியில் நிற்க வைத்தது இல்லை. எப்போதுமே கார் நல்ல



கண்டிஷனில் இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்வான்.

மேகம் இருண்டு கொண்டு வந்தது. மழை வரக் கூடிய சூழ்நிலை உருவானது. பானுமதிக்குக் கவலை பிடித்துக் கொண்டது.

அந்த வழியில் வந்த இரண்டொரு கார்களைக் கை காட்டி நிறுத்தப் பார்த்தாள் பானுமதி. எதுவும் பயனளிக்கவில்லை. எந்தக் காரும் நின்று, அவளுடைய குறையைக் கேட்கவோ, உதவவோ முன்வரவில்லை. அவளுக்கு ஓரே எரிச்சல்.

புது டிரைவர் சிரித்தான்.

"ஏம்மா முதலாளி பொண்ணு நீ, இதுவரை யாருக்காவது உதவிக் கரம் நீட்டியிருந்தால்தானே இப்ப உனக்கு யாராவது உதவ?" என்று கிண்டல் பண்ணினான்.

பானுமதிக்கு ரோஷமாக இருந்தாலும் எதுவும் பண்ண முடியவில்லை. ஆனால், அவன் கூறியதில் இருந்த உண்மை அவளைச் சுட்டது.

"செல்லையாவை அனுப்பியது தவறோ" என்று முதல் முறையாக எண்ணத் தொடங்கினாள்.

மழை பிடித்துக் கொண்டது. பானுமதி காருக்குள் உட்கார்ந்து கொண்டு ஜன்னல் கண்ணாடிகளை மூடிக் கொண்டாள். ஒருவழியாக மழை விட்டது. மறுபடி எழுந்து சாலைக்கு வந்து நின்று கொண்டாள். ஏதாவது கார் வராதா என்று ஏக்கத்தோடு பார்த்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு கார் வந்து அவளருகே நின்றது.

"ஐயா, ஆறு மணிக்கு மகாபலிபுரத்தில் விழாவில் நடனம் இருக்கு. கொஞ்சம் உதவுங்க" என்று கைகூப்பிக் கெஞ்சினாள்.

வண்டியில் இருந்த ஒரு பெரியவர் இரக்கப்பட்டு அவளை ஏற்றிக் கொண்டார். கார் விரைந்தது. " 'சுமி' கொஞ்சம் தள்ளி உட்காரும்மா. இந்த அக்காவுக்கும் இடம் கொடு" என்று பெரியவர் கூறினார். பின் சீட்டில் இருந்த சிறுமி எரிமலையாக வெடித்தாள்.

"என்ன தாத்தா, ரோட்டுல போற யாரோ ஒரு பனாதைக்காக நான் உடம்பை ஒடுக்கிக்கிட்டு உட்காரணுமா? இந்த பனாதைங்களுக்கெல்லாம் 'லிஃப்ட்' தரவா இதை லட்சம் லட்சமா கொடுத்து வாங்கியிருக்கோம்?" என்றாள்.

பானுமதியின் கண்களில் நீர் திரண்டது. அப்பாவிடம் தான் கூறிய அதே சொற்கள்! நம்மால் எடுத்தெறிந்து பேசப்பட்டவர்கள் எல்லாம் இப்படித்தானே மனவேதனைப்பட்டு மனம் நைந்து போயிருப்பார்கள் என்று அவள் எண்ணத் தொடங்கினாள்.

"சின்னம்மா. இப்படித் தூக்கி எறிந்து பேசாதீங்க. தேவைப்பட்டால் இல்லாதவர்களுக்கும் உதவ வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் நமக்கு வசதியைத் தந்திருக்கிறான். இந்தப் பொண்ணும் உங்களைப் போல பணக்கார வீட்டுப் பொண்ணுதான். உங்களிடம் நான் வருவதற்கு முன்னால், இவங்க வண்டியைத் தான் ஓட்டிக்கிட்டு இருந்தேன்" என்றார்

டிரைவர்.

பானுமதி திரும்பி டிரைவரைப் பார்த்தாள். ஆம் செல்லையாவேதான்!

"செல்லையா" என்று கண்கலங்கினாள் பானுமதி.

"கவலைப்படாதேம்மா. உன்னை சரியான நேரத்துக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது என் பொறுப்பு" என்று சிரித்தார் செல்லையா.

"செல்லையா எனக்குப் புத்தி வந்து விட்டது. நான் மாறி விட்டேன். மனிதர்களை மதிக்கக் கற்றுக் கொண்டு விட்டேன்" என்று விசும்பினாள் பானுமதி.


அன்று மகாபலிபுரம் விழாவில் மிகப் பிரமாதமாக நடனமாடி பரிசு பெற்றாள் பானுமதி. அதற்குள் புதிய டிரைவரும் காரை எப்படியோ ரிப்பேர் செய்து கொண்டு வந்து சேர்ந்தார். இரவு வீடு திரும்பியதும் அப்பாவிடம் நடந்ததையெல்லாம் சொன்னாள் பானுமதி. நடனத்துக்காகப் பரிசு பெற்றதில் மகிழ்ச்சி. மற்றொருபுறம் செல்லையாவை நினைத்து வருத்தம்.

"அப்பா! செல்லையாவை எப்படியாவது மறுபடி இங்கேயே வேலைக்கு வரவழைச்சுடுங்க அப்பா!" என்று கேட்டுக் கொண்டாள்.

"ஆகட்டும்மா. முயற்சி பண்றேன்" என்று அவள் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தார் தந்தை.

ஆனால், செல்லையாவைத் தாம் வேலையை விட்டு அனுப்பவில்லை என்பதையும், தமது நண்பரிடம் பேசி டிரைவர்களை மாத்திரம் தற்காலிகமாக மாற்றிக் கொண்டதையும் அவர் பானுமதியிடம் தெரியப்படுத்தவேயில்லை! தமது செவர்லெட் கார் ரிப்பேராகி விட்டதாக புது டிரைவர் சொன்னதும், அப்போது தமது நண்பர் தனது பேத்தியுடன் அங்கே செல்லையா கார் ஓட்ட வந்து சேர்ந்ததும், நண்பரின் பேத்தி டிரைவரை இடித்துப் பேசி பானுமதிக்கு உணர வைத்ததும் எல்லாமே தன்னால் திட்டமிட்ட நாடகமே என்பதையும் கூறவில்லை!

அப்படிக் கூறி விட்டால் பானுமதி மறுபடி கர்வக் காரியாக மாறி விட்டால் என்ன செய்வது? அதனால்தான்!



சுதந்திரம் எதற்கு?

சுதந்திரம் பெற்றுத் தந்தது எதற்கு
சுற்றித் திரிவதற்கா?
சுதந்திரம் பெற்றுத் தந்தது நாமும்
ஜோராய் படிப்பதற்கு

சுதந்திரம் பெற்றுத் தந்தது எதற்கு
சோம்பிக் கிடப்பதற்கா?
சுதந்திரம் பெற்றுத் தந்தது நாமும்
ஜோராய் உழைப்பதற்கு

படிக்கும் போது சுதந்திரம் என்பது
படிப்பில் அக்கறையாம்
முடியும் என்று எதையும் விடாமல்
முயல்வது சுதந்திரமாம்

ஏழ்மை என்பதை விரட்டி அடிப்பது
இன்பச் சுதந்திரமாம்
தாழ்ந்தவர் என்னும் ஜாதியை ஒழிப்பது
சமத்துவச் சுதந்திரமாம்

கொட்டும் முரசும் இன்னிசைப் பாடலும்
சுதந்திரம் ஆவதுண்டோ?
பட்டினி என்பதை ஒழிப்போம் அன்றே
பாரதம் சுதந்திரமாம்

அன்பிற் சிறந்தது துன்புறு வோரை
அணைப்பது சுதந்திரமாம்
என்றும் பள்ளியின் நற்பெயர் காக்கும்
இயல்பே சுதந்திரமாம்

காந்தித் தாத்தா வாங்கிய சுதந்திரக்
காட்சிகள் இவைதானாம்
காந்தி விரும்பிய செயல்களைச் செய்திடும்
கருத்தே சுதந்திரமாம்.

- செல்லகணபதி

இடம் இல்லையே!

என் தங்கைக்கு வயது நான்கு. ஒரு நாள், "திசைகள் தெரியுமா?" என்று அவளிடம் கேட்டேன். "தெரியும்" என்றாள். நான், "வடக்கு எந்தப் பக்கம்?" என்றேன். சரியாகச் சொன்னாள். அப்படியே நான்கு திசைகளையும் கை நீட்டிச் சரியாகச் சொன்னாள். கடைசியாக நான், "வடகிழக்கு எந்தப் பக்கம்?" என்றேன். சுற்றுமுற்றும் பார்த்தாள். "இடம் இல்லையே?" என்றாள். அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.


- எம். எஸ். பெருமாள்,
சேலம் - 3.



கண்டுபிடிப்பு

நானும் எனது குடும்பத்தினரும் மேட்டூருக்கு சுற்றுலா செல்வதற்காக பஸ்ஸில் சென்று கொண்டு இருந்தோம். நாங்கள் சென்ற சுற்றுலா பஸ் மிகவும் வேகமாகச் சென்றது. பஸ் வேகமாகச் சென்றதால் மரங்கள் எதிர்த் திசையில் வேகமாக நகர்வது போல் தோன்றின. இதைப் பார்த்துக் கொண்டு வந்த என் தம்பி என்னிடம், "அண்ணா, மரம் வேகமாகப் போற காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டேன்" என்றான். காரணத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன்" என்னடா? கூறு?" என்றேன். "பஸ் வேகமாக வருவதைக் கண்டு மரங்கள் பயந்து கொண்டு ஓடுகின்றன" என்று கூறினான் தம்பி. அதைக் கேட்டு பஸ்ஸில் இருந்த அனைவரும் சிரித்துவிட்டோம்!

பி. சரவணன்,
சுந்தம்பாளையம்.



ஏலம்

எங்கள் ஊர் பொது இடத்தில் குளங்களை ஏலம் விட்டுக் கொண்டிருந்தனர். ஏலம் கேட்க வந்திருந்தவர்களில் ஒருவருடைய மணிபர்ஸ் காணாமல் போய்விட்டது. இவ்விஷயம் ஏலம் நடத்துபவரின் கவனத்துக்கும் வந்தது.

உடனே அவர், "நண்பர்களே, இங்கே வந்துள்ள ஒரு நண்பரின் மணிபர்ஸ் காணாமல் போய்விட்டது. அதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு இனாம் ரூ. 100" என்றார். சிறிதுநேர அமைதிக்குப் பின் ஒரு குரல், "150 ரூபாய்" என்றதும் அங்கிருந்தவர்கள் அனைவரும் சிரித்தனர்.

எஸ். தட்சிணாமூர்த்தி,
நாகலூர்.

தூக்கு! தூக்கு

நான் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது ஓர் வயதான பாட்டி, மூட்டையுடன் பேருந்தில் ஏறினார். நடத்துனர், அந்தப் பாட்டியிடம் வந்து, "பேருந்தில் நடக்கும் வழியில் மூட்டையை வைக்காதே! அதை தூக்கு! தூக்கு!" என்று கூறிச் சென்று விட்டார். சிறிதுநேரம் கழித்து, நடத்துனர் அந்தப் பாட்டிக்கு

அருகே வந்தபோது, அந்தப் பாட்டி, மூட்டையைத் தன் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்துக் கொண்டு இருந்தார். நடத்துனர், "என்ன பாட்டி இப்படிச் செய்யறே?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பாட்டி, "நீங்க தானே தூக்கச் சொன்னீங்க?" என்றார். அடுத்த நொடியே பஸ் பயணிகள், நடத்துனர், நான் உட்பட எல்லோரும் சிரித்தோம். அந்த நிகழ்ச்சியை இன்று நினைத்தாலும் சிரிப்பாக உள்ளது.

- கே. மகேஷ்,
தில்லையாடி.

முக்கால் பந்து

எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் மிகவும் கோபமானவர். பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்தது. தலைமை ஆசிரியர் பார்வையிட வந்திருந்தார். அப்போது நான் கால் பந்து ஆடுகளத்தில் நின்று கொண்டிருந்தேன். கால் பந்தாட்டத்தில் இரு அணிகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுக் கூடிவிட்டார்கள். தலைமை ஆசிரியர் என்னைப் பார்த்து "அங்கே என்ன கூட்டம்?" என்றார். அதற்கு நான், "'கால்' பந்தாட்டத்தில் மீதி 'முக்கால்' பந்து காணவில்லையாம்'' என்றேன். தலைமையாசிரியர் உட்பட எல்லோரும் கொல் எனச் சிரித்தனர்.

டி. கலையரசு,
செஞ்சி.



ஃபுட்போர்டில்

ஒருமுறை நானும் நண்பன் கார்த்திக்கும் வெளியூர் செல்லும் பேருந்தில் ஏறினோம். பேருந்து சென்றுகொண்டிருந்த போது கார்த்திக் ஃபுட்போர்டில் அமர்ந்து கொண்டு பயணித்தான். கண்டக்டர், ''ஏம்பா ஃபுட்போர்டில் உட்கார்ந்திருக்கே?'' என்று கேட்டார். அதற்கு கார்த்திக், "ஃபுட்போர்டில் நிற்கத்தானே கூடாது? உட்காரலாமே?'' என்றான். பயணியர் அனைவரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

- ஜெ. கிருஷ்ணமூர்த்தி, வந்தவாசி.

எங்கள் ஊரில் நடந்தது!

நின்றே வாங்கு!

என் மாமா என் வீட்டுக்கு அருகில் டீக்கடை வைத்துள்ளதால் 6 மணிக்கே எழுந்து கடையைத் திறந்து விடுவார். கூட்டமாக இருக்குமாதலால் நானும் சீக்கிரம் எழுந்து அவருக்குக் கடையில் உதவுவேன். ஒருநாள் பானு என்ற சிறுமி டீ வாங்க வந்தாள். அவள் என் மாமாவிடம், "நாளை என் வீட்டில் இட்லி. அதனால் நான் இப்பவே போயி உளுந்து வாங்க வேண்டும். ஆதலால் சீக்கிரம் ஒரு டீ போடுங்கள்" என்றாள். உடனே என் மாமா வேடிக்கையாக, "உழுந்து வாங்காதே, நின்று கொண்டே வாங்கு. இல்லையென்றால் அடிபட்டுவிடும்" என்றாரே பார்க்கலாம். கடையில் உள்ள அனைவரும் சிரித்து விட்டனர்., நானும்தான்!

- கோ. ஆனந்தன்,
சோழன்,மாளிகை.

கண்வலி!

எங்கள் வீட்டில் சாமி பக்தி அதிகம். அடிக்கடி விரத நாட்கள், மற்ற விசேஷ நாட்களில் இறைவனுக்குப் படையல் செய்து விட்டுத்தான் சாப்பிடுவோம். எங்கள் வீட்டில் உள்ள சிறு குழந்தைகள் சமையல் செய்யும்போது எதையாவது எடுத்துத் தின்றால், "சாமிக்குப் படைக்கணும், அப்புறம்தான் நாம சாப்பிடணும். இல்லையென்றால் சாமி கண்ணை மறைச்சுடும்" என்று பயமுறுத்துவார்கள். ஒருநாள் எனக்குக் கண்வலி. கண் டாக்டரிடம் செல்வதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது அண்ணனின் பெண் "நீங்க சாமிக்குப் படைக்காம சாப்பிட்டுட்டீங்களா! அதனால்தான் கண்வலி வந்து விட்டது!" என்றாளே பார்க்கலாம்!

- மேலப்பாதி எஸ். நாகராஜன்,
தரங்கம்பாடி.

காசு பறிக்க!

நானும் என் தங்கையும் திண்டுக்கல்லுக்குச் சென்று கொண்டிருந்தோம். அங்கு பஸ் ஸ்டாண்டில் இறங்கிய நான், அங்கே இருந்த எடை பார்க்கும் மிஷினில் என்னுடைய எடையைப் பார்க்க ஆசைப்பட்டு அதில் காசு போட்டேன். எடை அட்டை வரவில்லை. இதைச் சாதாரணமாக நினைத்துக் கொண்டு மீண்டும் அதில் காசு போட்டேன். அப்பொழுதும் எடை அட்டை வரவில்லை. பிறகுதான் தெரிந்தது. மற்றவர்களை ஏமாற்றிக் காசு பறிப்பதற்காக அதை வைத்திருக்கிறார்கள் என்று. இப்படி இருந்தால் நம் நாடு உருப்படுமா?


- எம். முகம்மது அசேன்,
பொச்சிபாளையம்.

வால் நிமிர்ந்தது!

அண்மையில் என் நண்பர் ரவி வீட்டிற்குச் சென்றிருந்தேன். பேசிக் கொண்









டிருந்தபோது அவரது மகள் விசாலி வந்து "கத்திக் கப்பல் செய்து தாங்க" என்று நச் சரித்துக் கொண்டிருந்தாள். "சரி, நீ நம்ம டின்ஸி(நாய்)யோட வாலை நேரா நிக்க வை. உனக்குக் கத்திக் கப்பல் செஞ்சு தரேன்" என்று அவளை அவ்விடத்தை விட்டுப் போகச் செய்தார். சிறிதுநேரத்தில் விசாலி வந்து, "பாருப்பா செய்துட்டேன், இப்ப கத்திக்கப்பல் பண்ணிக் கொடு" என்றாள். எனக்கு ஒரே ஆச்சரியம். எப்படி என்று பார்த்தால், நாயின் வாலோடு ஒரு கரண்டியை வைத்துக் கட்டியிருந்தாள். வால் நேராக விறைப்பாக நின்றது. அவளது புத்தி சாலித்தனத்தையும் அறிவையும் வியந்து, சிரிப்போடு அவளைப் பாராட்டினேன். கத்திக் கப்பல் செய்து தந்த பிறகுதான் பேச்சைத் தொடர்ந்தோம்.

- **ஸ்ரீநிவாஸ் பிரபு,**
சென்னை - 90.

ஃபுல் ஹேண்டு!

நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறேன். நான் ஆறாம் வகுப்பில் படித்த போது ஓர் ஆங்கில ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது நான் கீழே குனிந்து கொண்டு வேறு என்னவோ எழுதிக் கொண்டிருந்தேன். ஆசிரியர் பாடம் நடத்திவிட்டு அனைவரையும் 'ஸ்பெல்லிங்' கேட்டுக் கொண்டிருந்தார். அனைவர் பெயரும் தெரியாததால் அடையாளங்களை வைத்துக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். என் முறை வந்தது. நான் கீழே குனிந்து கொண்டு இருந்தேன். அவர், 'டேய், டேய்' என்று கூப்பிட்டுப் பார்த்துவிட்டு, நான் முழுக்கைச் சட்டை அணிந்திருந்ததால் 'ஃபுல் ஹேண்ட் எழுந்து ஸ்பெல்லிங் சொல்லுடா' என்று கேட்டார். உடனே நான் எழுந்து "F, U, L, L, H, A, N, D" என்று கூறினேன். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தனர்.

- **கே. ஜெகன்நாதன்,**
செஞ்சி.

ஒரு ரூபாய் தமிழ்நாடு!

நாங்கள் ஒரு சமயம் குடும்பத்துடன் எங்கள் மாமாவின் திருமணத்திற்குத் திருச்சிக்குச் சென்றிருந்தோம். திருமணம் முடிந்து திரும்பி வரும்பொழுது பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தோம். அப்பொழுது ஓர் ஏழை லாட்டரி டிக்கெட் விற்பவர், "தமிழ்நாடு அரசு ஒரு ரூபாய்க்கு, தமிழ்நாடு அரசு ஒரு ரூபாய்க்கு, தமிழ்நாடு அரசு" என்று கூறிக் கொண்டே சென்றார். அப்பொழுது எனது ஐந்து வயதுத் தம்பி, "அம்மா ஒரு ரூபாய்க்கு தமிழ்நாட்டை ஒருவன் விற்கிறான். வேறு யாரும் வாங்குவதற்கு முன்னால் நமக்கு தமிழ்நாடை வாங்கும்மா'' என்றானே பார்க்கலாம். லாட்டரி டிக்கெட் விற்பவர் உட்பட அனைவரும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தோம்.

- **எம். கண்ணன்,**
கோவிலூர்.

கலைப் பொருள் செய்யலாம்
— 6 —

பல்பு நாய்

கே. குப்புராஜ்

படத்தைப் பாருங்கள். இந்த அழகான பல்பு நாய் வீட்டில் உள்ள பயனில்லாத பொருள்களைக் கொண்டு செய்யப்பட்டது. இதன் பகுதிகள் அடித்தளம் (Base), உடம்பு, கழுத்து, முகம்.

தேவையானவை :

1. ஒரே அளவிலான மூன்று ஃபியூஸான பல்புகள்

2. அரையடி நீளம், ஒன்றரை அங்குல அகலமுடைய கனத்த மரக் கட்டை அல்லது அதே அளவுக்கு ஒரு கனத்த அட்டைப் பெட்டி. அட்டைப் பெட்டியாக இருந்தால் சிறிது களிமண் தேவைப்படும். கனமாக இல்லாவிட்டால் நாயால் அதில் நிற்க முடியாது.

3. பெரிய தீப்பெட்டி அகலத்திற்கு பழுப்புத் துணி பிட் இரண்டு. பழைய துணியாக இருந்தாலும் பரவாயில்லை. இவை காதுப் பகுதிக்கு.

4. சிறிது மஞ்சள் வண்ணக் காகிதம்.

5. ஒரு கண்ணாடி வளையல் துண்டு,

6. ஃபெவிகால் அல்லது க்விக் ஃபிக்ஸ்,


7. கத்தரிக்கோல், பிளேடு

8. பிளாஸ்டிக் மூடி

அடித்தளம் (Base) :

பல்புகளின் உலோக தாங்கு குமிழ்களைக் கவனமாகத் தரையில் தேய்த்து விடவும். இதற்குப் பெரியவர்களின் உதவி கண்டிப்பாகத் தேவை. சற்று கவனம் தவறினால் கூட பல்பு உடைந்து கண்ணாடி கைகளைப் பதம் பார்க்கும்! கவனமாக, பெரியவர்கள் உதவியுடன் செய்க.


முதலில் இரண்டு பல்புகளின் அடிப்பாகம் பொருந்தும் அளவுக்கு



இரண்டு குழிகளை அடையாளமிட்டு, மரத்துண்டில் குடைந்து கொள்ள வேண்டும். இதற்கும் பெரியவர்களின் உதவி தேவைப்படும். அதைவிட ஒரு காலி பெரிய அளவு பற்பசை அட்டைப் பெட்டியை எடுத்துக் கொண்டு, அதன் உள்ளே போட்டு மூடும் அளவுக்குக் களிமண்ணைக் குழைத்துத் தட்டையாக்கிக் கொள்ளுங்கள். அது காயுமுன்பே, இரண்டு பல்புகளின் அடிப்பாகமும் பொருந்தும் அளவுக்குக் குழி செய்யுங்கள். இந்தக் குழிகள் அமையும்படி, பற்பசைப் பெட்டியில் வட்டமாக வெட்டி விடுங்கள். களிமண் நன்றாகக் காய்ந்ததும் பற்பசைப் பெட்டியில் போட்டு மூடி, ஃபெவிகாலால் ஒட்டிவிடுங்கள்.

இந்த இரண்டு ஓட்டைகளிலும் ஃபெவிகாலை நிரப்பி இரண்டு பல்புகளையும் அதில் நிற்க வையுங்கள். இப்பொழுது Base ம் உடம்பும் தயார்.

தரப்பட்டுள்ள அளவுக்குக் காகிதத்தில் வரைந்து இரண்டு பழுப்புத் துணித் துண்டுகளிலும் ஒட்டிக் காய விட்டு, வெட்டி எடுத்துக் கொண்டு, நாயின் தலைப்பகுதியாக அமைய உள்ள பல்பின் இருபக்கமும் ஒட்டி விடுங்கள். காதுகள் நன்கு மடிந்து தொங்கினால்தான் அழகு. அளவோடு பசையை ஒட்டாவிட்டால் காதுகள் விரைப்பாக நிற்கும்!



காது அளவு

மஞ்சள் காகிதத்தை மிகச் சிறிய கூமாச்சியாக ஆக்கிக் கொண்டு ஒட்டிக் காய வையுங்கள். அதன் நுனியில் இதேபோல் மிகச் சிறிய கூமாச்சியாக கறுப்புக் காகிதத்தில் செய்து கொண்டு, மஞ்சள் கூமாச்சியில் ஒட்டி, காய்ந்த பிறகு கத்திரித்து எடுத்துப் பாருங்கள். இவை கண்களாக அமைய வேண்டியவை. புது 10 காசு நாணயம் அளவுக்கு இது இருந்தால் போதுமானது. இது கூமாச்சியாக இருந்தால்தான் கண்கள் காண அழகாக இருக்கும். ஒன்றுமே வேண்டாம் என்றால், கடைகளில் ஐலெட் கிடைக்கும். அதை வாங்கிக் கண்களாக ஒட்டிவிடுங்கள். அல்லது வீணாகும் கறுப்பு, மஞ்சள் பட்டனை ஒட்டி விடுங்கள்.

பிளாஸ்டிக் மூடியை, ஒரு செ.மீ. உயர அளவுக்கு தேய்த்து, முன்னால் உள்ள பல்பின் தலையில் ஒட்டி, அதற்குமேல் முகமாக அமைய உள்ள பல்பை ஒட்டிவிடுங்கள்.

பின்பக்கம் வளையல் உடைசலை நுனியை மேல் தூக்கியவாறு ஒட்டி விடவும்.

தலையில், வளைபாகம் துருத்திக் கொண்டிருக்கும் பகுதி, கழுத்து, இரு கால்கள் இவைகளுக்கு பிளாடிக் அல்லது வண்ணக் காகிதத்தால் ஒட்டி மூடுங்கள். அல்லது வண்ணம் பூசுங்கள். வாய்ப் பகுதிக்கும் மட்டும் வட்டமான காகிதத்தில் வெட்டி ஒட்டவும். அல்லது வண்ணம் பூசவும்.

இந்த நாயை வைக்கும் இடம் கண்டிப்பாக அழகு பெறும்.

இந்தக் கட்டுரை குறித்து எழும் உங்கள் சந்தேகங்களைப் போதிய தபால்தலை வைத்து திரு. குப்புராஜ், பயிற்சியாளர், ஜவஹர் பால பவன், இராஜாஜி மண்டபம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002 என்ற முகவரிக்கு எழுதிக் கேட்கலாம்.

அப்பாவோடு நீ!

புவனா ஆறாம் வகுப்பு. நன்றாகப் படிப்பவள். எல்லோரிடமும் நன்றாகப் பழகுவாள். ஆனால், ஒரு தீயபழக்கம். அனுமதி இல்லாமல் மற்றவர் பொருள்களை எடுத்துக் கொள்வாள்.

பள்ளியில் படம் போடும் போது பென்சில் எடுத்து வர மறந்து விட்டிருப்பாள். பக்கத்தில் இருப்பவளின் பென்சிலை எடுத்துப் படம் போடத் தொடங்குவாள். அந்த மாணவி எழுதி விட்டு படம் போடப் பென்சிலைத் தேடுவாள். திண்டாடுவாள். இது புவனாவின் தோழிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் புவனாவின் நட்பை இழக்க யாரும் விரும்பாததால் பொறுத்துக் கொண்டிருந்தனர்.



ஒருநாள் அப்பாவின் மேஜையில் இருந்த பேனாவை எடுத்துக் கொண்டு புவனா பள்ளிக்குச் சென்று விட்டாள். மாலையில் திரும்பியதும் அப்பா விசாரித்தார். புவனா தான் தான் எடுத்துச் சென்றதாகக் கூறினாள். அப்பாவிற்கு சரியான கோபம்!

''எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். அனுமதியில்லாமல் மற்றவர்களது உடைமைகளை எடுக்காதே என்று? படிக்கிறாயே? இதுக்குக் கூடவா அறிவில்லை? இனிமேலும் இன்னொரு முறை இப்படி நடந்தால் உதைப்பேன்'' என்றார் சீற்றத்துடன்.

புவனா பயந்து போனாள். அதே சமயம் அப்பாவின் மேல் கோபமும் ஆத்திரமும் உண்டானது. தவறு தன் மேல்தான் என்பதை அவள் எண்ணிப் பார்க்கவில்லை. இனி அப்பாவிடம் பேசுவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டாள். கூடுமானவரை அவரைப் பார்ப்பது இடையாது. அப்படியே பார்த்தாலும் முகத்தைத் திருப்பிக் கொள்வாள்.

வேறொரு அப்பாவாக இருந்தால் நடந்திருக்கும் சமாச்சாரம் தனி. ''என்னடி நான் உனக்கு அடிமையா?'' என்று நாலு சாத்து சாத்தி வெளுத்திருப்பார்கள். ஆனால் புவனாவின் அப்பா அப்படிச் செய்யவில்லை. அந்த அளவுக்கு மகள் மேல் அவர் பாசம் வைத்திருந்தார். அதனால் அப்பா மிகவும் வேதனைப் பட்டார்.

''புவனா, நீ செய்வது சரியல்ல. உன் நன்மைக்குத்தானே அப்பா கண்டித்தார்? இப்படி அவரோடு பேசாமல் இருந்து வேதனைப்படுத்தலாமா? இது அப்பாவை அவமானப்படுத்துவது போல் ஆகாதா?'' என்று அம்மா அறிவுரை கூறினாள்.

''அவர் என் தவறை இதமாக; அன்பாகச் சுட்டிகாட்டியிருக்கலாமே? நெருப்பைக் கொட்டுவதைப் போல் பேச வேண்டுமா?'' என்று புவனா திருப்பிக் கேட்டாள்.

புவனாவின் பள்ளியில் காலரா தடுப்பு ஊசி போட்டார்கள். புவனாவும் போட்டுக் கொண்டாள். மறுநாள் காலையில் எழுந்தவள் கையைத் தூக்க முடியாமல் வேதனைப்பட்டாள். கையில் பெரிய வீக்கம். காய்ச்சல் வேறு. அம்மா ஒரு சிறிய பாத்திரத்தில் நீரைக் கொதிக்க வைத்து ஒரு துணியைப் பந்து போல் சுருட்டி நனைத்து வீக்கத்திற்கு ஒத்தடம் கொடுத்தாள்.

முதலில் சூடு தாங்காது புவனா அலறினாள். பிறகு அதுவே இதமாகத் தோன்றியது. வீக்கம் குறைந்தது. பள்ளிக்குச் சென்றாள்.


மாலையில் மகிழ்ச்சியுடன் வந்த புவனா, ''அம்மா, காலையில் ஒத்தடம் கொடுத்ததில் வீக்கமும், வலியும் போயே போய் விட்டது!'' என்றாள்.

''புவனா, வீக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்தியாசம் உண்டு. வீக்கத்திற்கு சுடுநீர் ஒத்தடம் கொடுத்தால்தான் குறையும். அதே போல் சில கெட்ட பழக்கங்களைக் கடுமையாகக் கண்டித்தால்தான் மாற்றிக் கொள்ள முடியும். புரிகிறதா?'' என்றாள் அம்மா.

''நன்றாகப் புரிகிறது அம்மா,'' என்று சிரித்தாள் புவனா.

அம்மாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி. புவனாவின் இந்த நல்ல மனமாற்றத்தைக் கொண்டாட இனிப்பு செய்ய சமையலறையில் நுழைந்தாள்.

— வாண்டுதாசன்



சேவல் கூவுவது ஏன்?

சேது வீட்டுக் கோழி மொட்டைச் சுவர்மேல் ஏறிக் கொண்டு கம்பீரமாகக் கூவியது.

"கொக்கரக்கோ...கோ!"

கணக்குத் தேர்வை எண்ணித் தூக்கம் வராது புரண்டு கொண்டிருந்த சேதுவின் காதில், கோழியின் கூவல் தெளிவாக விழுந்தது. அது அவர்கள் வீட்டுச் சேவல்தான். அவனுடைய சித்தப்பாதான் வளர்த்து வருகிறார். ஐந்து பெட்டை, ஒரு சேவல். அதுதான் இப்படிக் கம்பீரமாகக் கூவுகிறது.

சேவல் மறுபடி கூவியது.

"கொக்கரக்கோ கோ!"

இப்பொழுது அமைதியான அந்த விடியற்காலைப் பொழுதில் சேதுவின் வீட்டுச் சேவல் கூவிய கூவலுக்கு, எதிர் கூவல் மெதுவாகக் கேட்டது! மெதுவாக் கேட்டாலும் அது மிகவும் தெளிவாக இருந்தது.

இப்பொழுது சேது வீட்டுச் சேவல் மறுபடி கூவ, அதற்கு பதில் கூவல் மறுபடியும் கேட்டது. அக்கம் பக்கத்தில் எங்கேயோ இருந்து பதில் குரல் கொடுக்கிறது ஏதோ ஒரு சேவல்! தினமும் இது நடக்கிறதா என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால், இன்றுதான் கவனித்திருக்கிறான்.

காலையில் எழுந்து பல் விளக்கிக் கொண்டதும் சித்தப்பாவைத் தேடிக் கொண்டு போனான்.

"சித்தப்பா, நம்ம வீட்டுச் சேவல் கூவியதும், அதன் கூவலைக் கேட்டு, எங்கிருந்தோ இன்னொரு சேவல் பதிலுக்குக் கூவுகிறது சித்தப்பா!"

சித்தப்பா அதிசயப் படுவார் என்பதை எதிர் பார்த்த சேது ஏமாந்து போனான்.

"தூங்கு மூஞ்சி, நீ இன்னிக்கித்தான் கவனிச்சிருக்கே. அதான் உனக்கு அதிசயமாப் படறது. சேவல் எதுக்குத்தான் கூவறதுன்னு

ரேவதி

நினைச்சுக்கிட்டிருக்கே?"


"சேவல் எதுக்குக் கூவும்? பொழுது விடிஞ்சு போச்சுன்னு அறிவிக்கத்தான்."

"அதுக்காகத்தான்னு இல்லே. ஆந்தையைத் தவிர எல்லாப் பறவைகளுமே பொழுது புலர்ந்ததும் சத்தம் போடும். ஒரு நாளைக்கு இன்னும் சீக்கிரமா எழுந்து, ஏதாவது ஒரு மரத்தடிக்குப் போய் கவனமா கேட்டுப்பார்."

"அப்ப, சேவல் கூவப் பொழுது புலர்ந்ததுன்னு கவிஞர்கள் பாடறாங்களே!"

"பொழுது புலர்ந்தது. சேவல் கூவியது என்பதுதான் சரி. சேவல் கூவியதற்காகப் பொழுது விடிவதில்லை. பொழுது விடிவதற்காக சேவல் கூவுவதில்லை. சேவல் மட்டுமல்ல. எல்லாப் பறவைகளுமே விடியலை வரவேற்கக் குரலெடுத்துக் கத்துகின்றன. மற்ற பறவைகளின் கத்தல் இத்தனை நீளமாக; சத்தமாக; தொடர்ந்து கேட்பதில்லை. அதனால், சேவலின் கூவல் நமது கவனத்தை ஈர்க்கிறது. அதற்கு முக்கியத்துவம் தருகிறோம்."

"அப்போ நம்மை எழுப்பணும்னு சேவல் கூவலையா?"




"நீ எழுந்தா என்ன? தொடர்ந்து தூங்கினா அதற்கு என்ன? அது வேறொரு காரணத்திற்காகக் கூவுகிறது. அதைக் கேட்டு, பொழுது விடிஞ்சு போச்சுன்னு நீ எழுந்திருக்கறே. அவ்வளவுதான்."

"அப்போ சேவல் எதற்காக சித்தப்பா கூவுது?"

"பொதுவாகவே பறவைகளுக்கு ஆதிக்க உணர்வு இருக்கும். குறிப்பா சேவல்களுக்கு இது அதிகம். தன்னுடைய பெட்டைக் கோழிகளுக்கு தான்தான் தலைவன். தன்னைத் தவிர வேறு எந்தச் சேவலும் இங்கே வந்து விடக் கூடாது என்பதில் அவை மிகவும் எச்சரிக்கையாக இருக்கும். இந்த எச்சரிக்கை அறிவிப்புதான் விடியற் காலையில் சேவல்கள் கூவுவது."

சேது அசந்து போய் நின்றான்.

அன்று மாலை சித்தப்பா ஒரு பெரிய கூண்டில் மேலும் ஐந்து பெட்டைக் கோழிகளைக் கொண்டு வந்தார். ஏற்கனவே இருந்த பெட்டைகள் அவைகளைத் துரத்தித் துரத்திக் கொத்தின. சில சமயங்களில் புதிய கோழிகள் பதிலுக்கு எதிர்ப்பைக் காட்டின. 'கொக்', 'கொக்' என்று கனத்த குரலெடுத்து, சடசட வென்று சிறகுகளை அடித்துக் கொண்டு அவை ஒன்றை ஒன்று கொத்தியபடி இரண்டடி உயரத்திற்குப் பறந்து



சண்டையிட்டன.

"சித்தப்பா, இதுங்க போடற சண்டையைப் பார்த்தா பயமா இருக்கே. இத்தனையையும் பார்த்துக்கிட்டு அந்த சேவல் சும்மா இருக்கே!" என்றான்

சேது.

"நீங்க வகுப்பில் புதுப் பையன் வந்தால், உடனே உங்களுடன் சேர்த்துக் கொண்டு விடுகிறீர்களா?. என்ன பாடு படுத்தி வைக்கிறீர்கள்? அதே போலத் தான் இங்கேயும்," என்று சிரித்தார் சித்தப்பா.

கோழிகளுக்குள் சண்டை மாலை வரை நீடித்தது. அவை என்ன செய்கின்றன என்பதைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் சேது.

திடீர் திடீரென்று சண்டை போட்டுக் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு ஒரேயடியாக அமைதி காத்தன. பழைய கோழிகளில் கறுப்புக் கோழி ஒன்று இருந்தது. அது தான் எல்லாப் பெட்டைகளையும் விரட்டும். அது 'கொக் கொக் கொக்' என்று குரல் கொடுத்தது. எல்லாக் கோழிகளும் ஒவ்வொன்றாக அதற்கு அருகே வந்தன. தன் சிறிய அலகால், கறுப்புக் கோழி, மற்ற பெட்டைகளைத் தலையில் கொத்தியது. எல்லாம் அதற்குப் பிறகு அடங்கிப் போயின. சித்தி, கூடை நிறைய கோழித் தீவனத்தைக் கொண்டு வந்து இறைத்தாள். எந்த விதமான சச்சரவும் இன்றி எல்லாக் கோழிகளும் தனித் தனியாக ஒதுங்கி, தீவனத்தைக் கொத்தித் தின்றன.


சித்தப்பா வீடு திரும்பியதும், சேது நடந்தவற்றைக் கூறி அதிசயித்தான்.

"ஆக, கணக்குத் தேர்வுக்கு கணக்குப் போட்டுப் பார்க்காம, இப்படி கோழிகளையே பார்த்துக் கொண்டு பொழுதைப் போக்கியிருக்கே" என்று கண்டித்தார் சித்தப்பா.

சேது தலை குனிந்தான்.

"சரி, உன் சந்தேகத்துக்கு பதில் சொல்லிடறேன். அதுக்கப்புறம் நானே கணக்கு சொல்லித்தரேன்." என்று சிரித்தார் சித்தப்பா.

"புதுப்பையனை படாத பாடு படுத்தி கடைசியா நீங்க உங்க பெஞ்சல இடம் தரமாதிரிதான் இதுவும். கோழிகள் நிறைய இருந்தால், யார் சொல்வதை யார் கேட்பது என்ற பிரச்னை கண்டிப்பா எழும். இதுக்கு ஒரு முடிவு கட்டலேன்னா, ஒரே சண்டை, சச்சரவு, தாக்குதல், எதிர்த்தாக்குதல்தான்.



அதனால், ஒரு தலைவியைத் தேர்ந்தெடுத்து விட்டால், எல்லாம் அதற்கு அடங்கிப் போய்விடும். அந்தத் தலைவி யாருன்னு முடிவு பண்ணற வரை போராட்டம்; தாக்குதல்தான். ஒவ்வொன்றும் தன்னுடைய பலம், வலிமை என்ன என்பதை இந்தத் தாக்குதலில் காட்டி, தலைவிப் பதவிக்குப் போட்டியிடும். ஒன்றை ஒன்று கொத்தும் போதே, ஒன்றின் வலிமையை மற்றொன்று அறிந்து கொண்டு விடும். நீ சொல்றதுலேருந்து இதுங்க எல்லாம், கறுப்புக் கோழியின் தலைமையை ஏத்துக்கிட்ட மாதிரி தெரியுது. அதனால்தான் அது கொத்துவதை பணிவா ஏத்துக்கிட்டிருக்குங்க. இந்தப் பெட்டைக் கோழிங்களுக்குள்ள தலைமைப் போராட்டம் நடக்கும் போதெல்லாம், இந்த கொத்தும் முறை தான் முடிவு."

"அப்ப, சேவலின் நிலை என்ன சித்தப்பா?"

"அது இந்தக் கூட்டத்திற்குத் தலைவன்; ராஜா. வெளியே இருந்து வேறு எந்த சேவலும் இந்தப் பெட்டைகளிடம் வர முடியாமல் அது தடுக்கும். இந்தப் பெட்டைகளுக்குள் நடக்கும் சண்டையில் சேவல் தலை இடாது."

"இந்தப் போராட்டம், எல்லாக் கோழி களிடமும் நடக்குமா?"

"ஒன்றுக்கு மேற்பட்ட கோழிகள் இருந்தால் யார் சொல்லி, யார் கேட்பது என்ற கேள்வி எழும் இல்லையா? ஒரே ஓர் பெட்டையாக மட்டும் இருந்தால் எந்தப் பிரச்னையும் இருக்காதே? எல் லாம் உங்களை மாதிரித்தான்" என்று சிரித்தார் சித்தப்பா.

சேது திகைப்புடன் கேட்டுக் கொண் டிருந்தான்.

"சித்தப்பா, ஒரு வேளை இந்தக் கறுப்புக் கோழியை குருமா பண்ணி விடுகிறார்கள் என்று வைத்துக் கொள் வோம். இல்லை, நீங்கள் விற்று விடு கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போ என்னவாகும்?"

"தலைமை இடம் காலியாகி விட் டால், அதை யார் பிடிப்பது என்பதில் சண்டைதான். பிறகு இதே மாதிரித்தான். கொத்து முறை வந்துவிட்டால் சண்டை முடிவுக்கு வந்து தலைமை முடிவாகி விட்டது என்று பொருள். அதுவரை தாக்குதல், எதிர்த் தாக்குதல்தான்."

"சித்தப்பா, முட்டைகள் குஞ்சாகி வெளி வந்த உடனேயே அவை பெட் டையா, சேவலா என்பதைக் கண்டு பிடிக்க முடியுமா?"

"முன்பெல்லாம் இதைக் கண்டு பிடிக்க ஆறு முதல் எட்டு வாரங்கள் ஆகும். ஆனால், இப்பொழுது நவீன வசதிகளைக் கொண்டு உடனே கண்டு பிடித்து விட முடிகிறது."

"உடலுக்கு வலுவைத் தரும் கோழி களுக்கு நோய்கள் வருமா?"

"வருமே. உண்ணிக் காய்ச்சல், அம்மை, வயிற்றில் குடல் புழு போன் றவை சர்வ சாதாரணமாக வரும். கடுமை யான சில தொற்று நோய்களும் வரும். இவைகளுக்கு முக்கிய காரணம் தூய்மை இன்மை. நோய் எதிர்ப்பு சக்தி இன்மை."

சேது இப்பொழுது சேவலைப் பார்த்த பார்வையில் புது ஆர்வம் தெரிந் தது.

அறிவியல் உண்மைகள்


- கோழி அதிக உயரம் பறக்க இய லாத பறவை இனம். சிந்து வெளி நாகரீக காலத்திலேயே இதை வீட்டில் வளர்த்திருக்கிறார்கள்.

- கோழிக்கு ஆதிக்க உணர்வு அதிகம். அதை உறுதி செய்து கொள்ளவே, ''என்னுடைய எல்லை இது. வேறு எந்தச் சேவலும் வரக் கூடாது'' என்பதை அறிவிக்கும் அறிவிப்பே கூவல். சேவல் மட்டுமே கம்பீரமாகக் கூவும்.

- சேவலைப் போலவே எல்லாப் பற வைகளும் அதிகாலையில் குரல் கொடுக் கும். இருந்தாலும் இதன் தனித்த குரல் மட்டுமே பெரிதும் ஈர்க்கிறது. சேவல் எந்த நேரத்தில் வேணுமானாலும் கூவும்.

- கொத்து உரிமையால் தலைமைக் கோழி, மற்ற கோழிகளை அடக்கி ஆளும் தகுதியை பெறுகிறது.

- கோழி, முட்டையிட ஆண் கோழி அவசியம் இல்லை. ஆனால் அந்த முட் டையில் கரு இருக்காது. பொரிந்தால் குஞ்சு வராது.



"ராஜு, உன் பேனா உடைஞ்சதுக் காகவா இப்பிடி அழறே?"


"அதுக்கில்லைடா. என் வாழ்நாள் பூரா இந்தப் பேனா உழைக்கும்னு கடைக்காரன் சொன்னான். அத நினைச்சுத்தான்."

-ஜெ.அன்புச் செல்வன்.

பாடி ஆடுவோம்!

நமதுநாடு பாரதம்! நாம் வணங்கும் தாயகம்!
இமயமலையும் குமரிமுனையும் இரண்டு திசையின் எல்லைகள்!
இந்துமுஸ்லீம் சீக்கியம், இலங்குகின்ற கிறித்துவம்
என்றுமதங்கள் பற்பல இருந்தபோதும் அனைவரும்
இந்த நாட்டில் பிறந்ததால் இந்தியாவின் மக்களே!
ஒன்றுபட்டு வாழ்ந்தவர் சண்டையிட்டுக் கொண்டதால்
வந்து வணிகம் செய்தவர் நாட்டைத் தமதாய் ஆக்கினர்!
சொந்த நாட்டில் அடிமையாய் வாழ்ந்த நிலைமை மாறவே
இந்த மண்ணின் மைந்தர்கள் ஏற்றதுன்பம் கொஞ்சமோ?
அன்புவழியில் போர்புரிந்து அன்னியரை விரட்டிய
அண்ணல்காந்தி அடிகளால்நாம் அடைந்தோம் இனியசுதந்தரம்!
பெற்றநல்ல சுதந்தரத்தைப் பேணிக்காத்தல் வேண்டியே
உற்றநாட்டை மக்கள் ஆளும் உயர்ந்தகொள்கை நாட்டினோம்!
மக்கள்நலம் காக்கவே மக்கள் தேர்ந்து எடுத்தவர்
மக்கள்தம்மை ஆள்வதே மக்களாட்சி என்பதாம்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாண்டு ஜனவரி
இருபத் தாறாம் நாள் நமது இனியகுடி யரசுநாள்!
ஆண்டுதோறும் இந்தநாள் அன்னைநாட்டைப் போற்றும்நாள்!
மாண்புமிக்க இந்தநாளில் மகிழ்ச்சி யோடுகூடுவோம்!
வாழ்கநமது தேசமென்று வாழ்த்துப்பாடி ஆடுவோம்!

— சுப. திருஞானம்



கேட்கட்டுமா டாக்டர்?

கே.பி. சசிகுமார், ஈரோடு - 2.

டி.பி. என்ற நோயை ஏற்படுத்தும் கிருமியின் பெயர் என்ன?

'மைக்கோ பேக்டீரியம் டியூபர்குளோசிஸ்' (Mycobacterium Tuberculosis) எனும் பாக்டீரியா கிருமியே 'டி.பி.' நோயை ஏற்படுத்துகிறது.

பி. நபீஸ் அஹமது, ஆடுதுறை.

'A'+ வகை இரத்தம் உடையவருக்கு 'A'+ வகை இரத்தம் கிடைக்கவில்லை. அப்போது 'O'+ இரத்தம் கொடுக்கலாம் என்று என் ஆசிரியர் கூறினார். இது பற்றி உங்கள் விளக்கம் என்ன, டாக்டர்?

உன் ஆசிரியர் சொன்னது முற்றிலும் சரி, தம்பி. 'O' வகை இரத்தத்திற்கு 'Universal Donor' என்று ஒரு செல்லப் பெயர் உண்டு. அதாவது 'எல்லோருக்கும் கொடுக்கப்படும் இரத்தம் இது' என்பது இதன் அர்த்தம். பிற இரத்த வகை உள்ளவர்களுக்கு அதே இரத்த வகை உள்ள இரத்தம் கிடைக்காத சமயங்களில் 'O' வகை இரத்தத்தைத் தாராளமாகச் செலுத்தலாம்.

பி. சேகர், தாம்பரம்.

என் கை, கால்களில் நிறைய மருக்கள் வருகின்றன. கோவிலுக்கு உப்பு, மிளகு போட்டால் இவை குணமாகிவிடும் என்று சொல்கிறார்கள். இது உண்மையா? இதற்குரிய முறையான சிகிச்சை என்ன?

மருக்கள் (Warts) வைரஸ் கிருமிகளின் தாக்குதலால் தோலில் தோன்றும் சிறு வளர்ச்சிக் கட்டிகள். சிலருக்கு இவை தானாகவே மறைந்து விடும். வேறு சிலருக்கு சிகிச்சை தேவைப்படும். மிகச் சிறிய மருக்களின் மேல் 'போடோஃபிலிக் அமில' (Podophyllic Acid) த்தை மருத்துவர் யோசனைப்படி பயன்படுத்தினால் குணம் கிடைக்கும். சற்றுப் பெரிய மருக்களை மின்சூட்டுக் கருவியால் (Electric Cauterization) பொசுக்கி விடலாம். மிகப் பெரிய மருக்களை சிறு அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிடலாம். மற்றபடி கோவிலுக்கு உப்பு, மிளகு போடுவதால் கோவிலுக்கு வருமானம் கிடைக்கலாம். மருக்கள் மறையாது.





ஜி.ஜி. கிருஷ்ணன்,
விசலூர்.

நம் உடலில் காணப்படும்

டி.பி.யை ஏற்படுத்தும் கிருமியின் பெயர் என்ன?

pH என்பது என்ன, டாக்டர்? சராசரியாக நம் உடலில் அது எவ்வளவு இருக்க வேண்டும்? இதன் வேலை என்ன?

pH என்பது திரவங்களில் உள்ள ஹைட்ரஜன் அயனி (Hydrogen Ion) களின் அடர்த்தியைக் குறிக்கும் ஓர் அடையாளக் குறி (Symbol). இதன் இயல்பு மதிப்பு 7. ஒரு திரவத்தில் pH மதிப்பு 7க்கு மேல் அதிகமானால் அந்தத் திரவத்தை 'காரப் பண்பு' (Alkalinity) உடையது என்றும், pH மதிப்பு 7க்குக் கீழ் குறைந்தால் அந்தத் திரவத்தை 'அமிலப் பண்பு' (Acidity) உடையது என்றும் பிரித்து உணர்வதற்கு pH அளவு உதவுகிறது. நம் உடம்பில் உள்ள உள்ள ஒவ்வொரு திரவத்திற்கும் தனித் தனி pH மதிப்பு உண்டு. எல்லாவற்றையும் வகை வாரியாகச் சொல்வதற்கு இங்கே இடமில்லை.

ஆர். பாபு, காரைக்குடி.

எங்கள் ஊரில் அதிகமாக 'டைபாய்டு காய்ச்சல்' வருகிறதே? ஏன்? எப்படித் தடுப்பது?

டைபாய்டு காய்ச்சல் (Typhoid Fever) 'சால்மோனெல்லா டைஃபை' (Salmonella Typhi) என்ற பாக்டீரியா கிருமிகளால் வருகிறது. இந்தக் கிருமிகள் தண்ணீரின் மூலம் பரவக் கூடியவை. உங்கள் ஊரில் பயன்படும் தண்ணீரில் இந்தக் கிருமிகள் கலந்திருக்கலாம்; அதனால் தான் அங்கு அதிகமாக டைபாய்டு காய்ச்சல் வருகிறது. தண்ணீரைக் கொதிக்க வைத்து, பின்பு ஆற வைத்துப் பயன்படுத்தினால் டைபாய்டு கிருமிகள் ஒழியும். அப்புறம் டைபாய்டு காய்ச்சல் வராது. டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் பயன்படுத்திய உடைகளையும் உணவுத்தட்டுகளையும் மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது; இதன் மூலமும் பிறருக்கு இந்தக் காய்ச்சல் வராமல் தடுத்து விட முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, டைபாய்டு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு 'வாய்வழி தடுப்பு மருந்தும்' (Oral Vaccine), தடுப்பு ஊசியும் தற்போது கடைகளில் கிடைக்கிறது. மருத்துவரிடம் ஆலோசித்து, அவற்றில் ஏதாவது ஒன்றை உபயோகித்து, டைபாய்டு காய்ச்சலை முழுமையாகத் தடுத்து விடலாம். தம்பி. கவலைப்படாதே!



மு. முருகேசன், இராமேஸ்வரம்.

மருத்துவத்துறையில் 'சைக்கியாட்ரிஸ்ட்' எனும் மருத்துவர்கள் இருக்கிறார்களே... இவர்கள் என்ன வகையான பாடங்களைப் படிப்பார்கள்? மற்ற டாக்டர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

'மன நல மருத்துவர்கள்' தான் 'சைக்கியாட்ரிஸ்ட்' (Psychiatrist) என்று அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் மனம் தொடர்பான நோய்களைப் பற்றி மிக விரிவாகப் படிப்பார்கள். பட்டம் பெற்றதும் மனநோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை கொடுப்பார்கள்.

வே. பூங்குன்றன், வடமாதிமங்கலம்.

பால், கண்டைக்காய் சாப்பிட்டால் புற்று நோய் வரும் என்கிறார்களே... உண்மையா, டாக்டர்?

உண்மையில்லை! பால், கண்டைக்காய் சாப்பிட்டால் புற்று நோய் வராது. பயமே வேண்டாம், பூங்குன்றன்!

டாக்டர் கு. கணேசன்

தூரத்தில் பாலன் சைக்கிளில் வருவதைக் கண்டான் முருகன். இருவரும் ஒரே வகுப்பில்தான் படிக்கிறார்கள். பாலனுக்கு, ஏதாவது ஒரு கதை எழுதி, அதன் மூலம் தன் பெயரை அச்சில் பார்த்துவிட வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசை. 'இரண்டே நாட்களுக்குள் ஒரு அருமையான சிறுகதை எழுதி வருகிறேன் பார்!' என்று முருகனிடம் பந்தயம் கட்டியிருக்கிறான் பாலன். பந்தயப்படி, கதையுடன் முருகன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறான்!



இதை, பாலன் கையிலிருந்த கத்தையான காகிதங்களை வைத்தே முருகன் புரிந்து கொண்டான். வாசலை நெருங்கியதும் பாலனை வரவேற்றான் முருகன். ''வா பாலா! என்னிடம் பந்தயம் கட்டினபடி கதையோடு வந்திருக்கே போலிருக்கு?''

''ஆமாம். 'சிறுவர் முல்லை' பத்திரிகைக்காக அருமையான கதையை எழுதியிருக்கேன். படிச்சுப்பார்!''

''வா... உள்ளே போய் உட்கார்ந்து கொண்டே படிக்கலாம்'' என்றபடி, சோபாவில் அமர்ந்தனர் இருவரும்.

முருகன், பாலனிடமிருந்து காகிதக் கத்தையை வாங்கிப் பிரித்துக் கதையைப் படிக்க ஆரம்பித்தான். கதை மிகவும் அருமையாக இருந்தது. ஒரே சீராக, அருமையான நடையுடன், தெள்ளத் தெளிவாய், படித்ததும் புரியும்படி கதை அமைந்திருந்தது. கதையைப் படித்து முடித்த முருகன் பாலனை மனம் திறந்து பாராட்டினான்.

''இந்தக் கதை நிச்சயமா வெளிவரும். அருமையா இருக்கு. நாளைக்கே அனுப்பிடு.''

பாலன், தலையில் ஐஸ் கட்டியை வைத்தது மாதிரிக் கு ளி ர் ந் து போனான்!


அம்மா கத்தினாள்.

''முருகா! இன்னைக்காவது பழைய பேப்பர்களையும் காலி புட்டிகளையும் கடையில் போட்டுட்டு வாப்பா...''

''சரிம்மா.... எல்லாத்தையும் ஒரு பையில போட்டுத் தாங்க. இப்பவே போட்டுட்டு வந்திடறேன்!''

அம்மா எல்லாவற்றையும் ஒரு பையில் போட்டுக் கொடுத்தாள். முருகன் அதை வாங்கிக் கொண்டு தனது சைக்கிளில் 'வேஸ்ட் பேப்பர் மார்ட்' நோக்கிப் பறந்தான்.

கடைக்காரர் காகிதங்களைத் தனி



யாகவும், பிளாஸ்டிக், இரும்பு சாமான்களைத் தனியாகவும் எடை போட்டுக் கொண்டிருந்தார். கடைக்கு உள்ளேயும் வெளியேயும் பேப்பர்களும், வார, மாத இதழ்களும் இறைந்து கிடந்தன. குப்பைகளுக்கு நடுவே, அழகிய சிறுமியின் அட்டைப் படத்துடன் கிடந்த பழைய 'சிறுவர் முல்லை' பத்திரிகை ஒன்று சட்டென்று முருகன் கண்ணில் பட்டது.

எடுத்து அதன் தேதியைப் பார்த்தான். 1983 ஆம் ஆண்டு வெளிவந்த புத்தகம் அது. ஒவ்வொரு பக்கமாகப் புரட்டி அழகிய படங்களை ரசித்துக் கொண்டும், துணுக்குகளைப் படித்துக் கொண்டும் வந்தவனுக்குப் பேரதிர்ச்சி! பாலன், தான் எழுதியதாக மார்தட்டிக் கொண்ட அதே கதை, அதே தலைப்புடன் எழுத்து மாறாமல் அதில் வெளியாகியிருந்தது!

நண்பனிடம் பந்தயம் கட்டிவிட்டோமே என்பதற்காக பிறர் உழைப்பைத் தன் உழைப்பென்று சொல்லிக் கொண்ட பாலன் மீது வெறுப்பாக வந்தது முருகனுக்கு.

கடைக்காரர் எண்ணிக் கொடுத்த

கி. சிவா

பணத்திலிருந்து ஐம்பது காசு கொடுத்துவிட்டு அந்தப் பத்திரிகையை வாங்கிக் கொண்ட முருகன், பாலன் வீடு நோக்கி விரைந்தான்.


பாலன் அவன் வீட்டு வாசலில் நின்று கொண்டு இருந்தான். கையில் நீளமான உறையில் அவன் எழுதியதாகக் கூறிக் கொண்ட கதை. பாலனின் தாயும் அங்கு இருந்தாள்.

பாலன் தன் அம்மாவிடம் கோபித்துக் கொண்டான்.

''என்னம்மா இந்த கோபி..., காலையிலே நான் கஷ்டப்பட்டு சைக்கிளைத் தள்ளிக்கிட்டு போய் பஞ்சர் போட்டுட்டு வந்தா, அவன் ஜாலியா எடுத்துக்கிட்டு ஃபிரெண்டு வீட்டுக்கு போயிடறதா? மணி வேற ரெண்டாகப் போவுது... போஸ்ட் ஆபிஸ் தபால் எடுத்துடுவாங்களே!''

''உங்க ரெண்டுபேர் சண்டைல என்னை இழுக்காதீங்க...!'' என்று சொல்லிவிட்டு அவன் அம்மா உள்ளே போகவும் முருகன் அங்கே வரவும் சரியாக இருந்தது.

''வா முருகா! நல்ல வேளையா உன்கிட்டே சைக்கிள் இருக்கு... சீக்கிரம் வண்டியைத் திருப்பு. போஸ்ட் ஆபீஸ்



பிடித்திடு!

எலிதான் ஒன்று ஓடுது
எட்டிப் பார்த்துத் தாவுது
விழியால் உற்றுப் பார்க்கையில்
வேக மாக மறையுது!

சட்டிப் பானை இடையிலே
சடு குடுதான் ஆடுது
தட்டு, கிண்ணம் கரண்டிமேல்
தாவி ஆட்டம் போடுது!

பண்ட மெல்லாம் கெடுக்குது
பரண் மேலே உருட்டுது
கண்ட பொருளும் கெட்டிட
கடித்து நாசம் பண்ணுது!

எண்ணெய் திரியை எடுக்குது
எகிறி மேலே குதிக்குது
சின்ன கண்ணு பூனையார்
சிற்றம் கண்டால் பதுங்குது!

படுத்து உறங்கும் இரவிலே
பாய்ந்து நம்மேல் ஓடுது
துடித்து எழுந்து தேடினால்
தூலத் தின்மேல் பாடுது!

புத்த கப்பை கடிக்குது
போக்கிரித் தனமாய் நடக்குது
ஒத்த வெங்காயம் பொறியிலே
ஒட்ட வைத்தே பிடித்திடு!

- கலைப்பொழிலன்

வரைக்கும் போயிட்டு வந்திடலாம்.''

''எதுக்கு? கதையை போஸ்ட் பண்ணவா?''

''ஆமாம்.''

''அது, நீ சொந்தமா எழுதிய கதை தானா?''

''அதிலென்ன சந்தேகம்?''

''இப்ப என் சந்தேகமெல்லாம் இந்தப் புத்தகத்தில் வந்திருக்கிற கதை பற்றித்தான்...'' என்று கூறிக் கொண்டே தன் பேண்ட் பாக்கெட்டில் மடித்து வைத்திருந்த 'சிறுவர் முல்லை' இதழை எடுத்துக் காட்டினான் முருகன்.

பாலனின் முகம் சிறுத்துப் போனது.

முருகன் தொடர்ந்தான்.

''நீ கஷ்டப்பட்டுத் தள்ளிக் கொண்டு போய் பஞ்சர் பார்த்துக் கொண்டு வந்த சைக்கிளை, உன் தம்பி எடுத்துக் கொண்டு போனதை ஏமாற்றமா, துரோகமா நினைச்சு பொருமறியே? அரும்பாடு பட்டு, சிந்திச்சு வேறு ஒருவர் எழுதின கதையைக் காப்பியடிச்சு எழுதியனுப்பறது எவ்வளவு துரோகம் பண்ற மாதிரி? கதை எழுதணும், பெயரை அச்சில் பார்க்கணும்கறதுக்காக மற்றவர் உழைப்பை, உண்ணி மாதிரி உறிஞ்சுவது தப்பில்லையா?''

பாலனுக்கு, தான் செய்த தவறு 'சுரீர்' என்று உறைத்தது.

''நல்லவேளை முருகா! கதையை போஸ்ட் பண்றதுக்கு முன்னாடியே என்னைத் திருத்திட்டே! நான் அனுப்பி இந்தக் கதை மீண்டும் வெளி வந்து, யாராவது இதைக் கண்டு பிடிச்சு எழுதியிருந்தா, கதை எழுதணும்கிற என் ஆசைக்கே முற்றுப்புள்ளி வச்சதா ஆயிருக்குமே!'' என்ற பாலனின் கைகள் தானாகவே அந்தக் கடித உறையை சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டன!

6. புதிய திட்டம்

சட்டென்று யார் கண்ணிலும் பட முடியாதபடி அந்தப் புளிய மரத்திற்குப் பின்னால் தன் நண்பன் மணி நின்று கொண்டிருப்பதை ராஜா பார்த்தான். உள்ளே வரும்படி மணிக்கு ஜாடை காட்டினான்.

'நல்லவேளை... என்னை யாருப் பார்க்கவில்லை.... என்று எண்ணியபடி ராஜா இருக்கும் வீட்டிற்குப் பின் பக்கக் கதவு வழியாக நுழைந்தான் மணி. உடனேயே வாசல் கதவு, கொல்லைப்புறக் கதவு இரண்டையும் சாத்தித் தாழ்ப்பாள் போட்டான் ராஜா.

வாசலில் திண்ணை. அதை அடுத்து நீண்ட ஹால். அதற்குப் பின்னால் சமையல் அறை. சமையல் அறையின் கதவைத் திறந்தால் கொல்லைப்புறம். இதுதான் அந்த வீட்டின் அமைப்பு.

ஹாலின் மத்தியில் பாயைப் போட்டு அமர்ந்து கொண்டான் மணி. மணி சாமியார் வேஷத்தில் வந்திருந்தான். அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்ட ராஜாதான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"இருட்டின பிறகு ராத்திரி பத்து மணிக்கு மேல்தானே நான் உன்னை வரச் சொல்லி போன் போட்டேன்?"

"எப்ப வந்தா என்ன? யாருக்கும் என் மீது சந்தேகம் வரக்கூடாது. இல்லையா? அப்படித்தான் வந்திருக்கேன். சரி– சரி... விஷயம்.. எந்த மட்டும் இருக்கு?"

பதில் சொல்லாமல் ராஜா யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் மணிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"இந்த சுண்டைக்காய் சமாசாரத்திற்கு இன்னுமா யோசனை?" என்றான் எரிச்சலோடு.



உவது சாவி

த. ஜானகி

"மணி கோவிச்சுக்காதே. சுண்டைக்காய் சமாசாரம் என்று நீ எடுத்த முயற்சி வெற்றி பெற்றதா?"

மணியால் இன்னும் தன் தோல்வியை, ஏமாற்றத்தை ஜீரணிக்க முடியவில்லை.

அவன் மனதிற்குள் எண்ணங்கள் ஓடின. சந்திப்பைக் கடத்துவது சுண்டைக்காய் சமாசாரம்தான் என்று எளிதாக நினைத்து பள்ளியிலேயே கடத்த ஏற்பாடு செய்தேன். காலையில் அவன் பள்ளிக்கூடம் நுழையும் போது அடையாளம் பார்த்துக் கொண்டு மாலையில் காரோடு வந்தேன். பொய் சொல்லி என்னை ஏமாற்றி விட்டான். நானும் குழம்பிப் போய் ஏமாந்து விட்டேன். அப்புறம் துறவி வேஷத்தில் இந்த கிராமத்திற்கு வந்து எத்தனையோ ஜாக்கிரதையாக விஷயங்களைச் சேகரித்தேன். கடவுள், கோவில் என்று மக்கள் நம்பும்படி எப்படியெல்லாமோ பக்திமானாக நடித்தேன். அதனால்தானே எனக்குத் தெரிந்தது மார்கழி மாதம் முப்பது நாளும் விடியற்காலை

சந்தீப்தான் கோவிலுக்கு பால் கொண்டு தருவான் என்று? அதனால மார்கழி மாதப் பிறப்பன்றே நடுங்கும் குளிரிலும் அவனைக் கடத்த முயற்சி செய்தேன். ஆனால்.... ஆனால், நாயா... அது? பேய்... பிசாசு. இருட்டு நேரமாக இருந்ததாலே எப்படியோ தப்பித்துக் கொண்டேன். அப்புறம் மூன்றாவது முறையும் ஏமாந்து போய்விடக் கூடாது என்றுதானே ராஜாவே திட்டம் தீட்டினான்? "மணி! சந்தீப்ங்ற அந்த பையனை ஏமாற்ற முடியாது என்று நினைக்கிறேன். ஆடற மாட்டை ஆடிக் கறக்கணும்... பாடற மாட்டை பாடிக் கறக்கணும்னு சொல்வாங்க. அவனைக் கடத்தற சமயத்திலே மாட்டிக் கொண்டால் இன்னும் பெரிய சிக்கல் ஏற்படும். அதனால புது மாதிரியா ஒரு திட்டம் சொல்கிறேன். நண்பர்களோடு அவன் வீடு திரும்பும் பொழுது நீ கத்தியைக் காட்டி மிரட்டு. நான் பட்டிகாட்டான் வேஷத்தில் அவனைக் காப்பாற்றுவது போல் நடித்து நல்ல பெயர் வாங்கிக் கொள்கிறேன். அப்பத்தான் அவங்களுக்கு என் மீது நம்பிக்கையும் பிரியமும் ஏற்படும். எப்படியோ பொய் சொல்லி ஒரு வேலையை வாங்கிக் கொண்டு அந்த கிராமத்திலேயே தங்கி இருக்கிறேன். சந்தீப் வீட்டினரோடு நெருங்கிப் பழகுகிறேன். காரியம் பழம் ஆகும் போல் தெரியும் சமயத்தில் உனக்கு போன் செய்யறேன். அப்ப நீ வந்தால் போதும்" என்றான்.

ராஜா போட்டுக் கொடுத்த திட்டத்தின்படிதான் எல்லாமே இது வரை வெற்றிகரமாக நடந்து இருக்கிறது. அப்படி இருக்க மேலும் என்ன யோசனை?

"மணி..." ராஜா கூப்பிட மணி சிந்தனை கலைந்து சுய உலகிற்கு வந்தான்.

"மணி! நீ கோபமாக இருக்கே என்று எனக்கு நன்றாகவே தெரிகிறது. இங்கு நான் ஒன்றும் சும்மா இல்லை."


"உம்... மேற்கொண்டு சொல்லு."

"இப்ப இந்த கிராமம் பூராக எனக்கு அத்துபடி. எல்லாருக்கும் என் மீது அப்படி ஒரு மதிப்பு!"

"உம்..."

"சந்தீப் வீட்டாருக்கு என் மேலே நம்பிக்கை வந்து விட்டது. மீனாட்சி அம்மாளை நல்லா காக்கா பிடிச்சு வைத்திருக்கேன். மேஜர் தேவநாதனும் என் கிட்டே பிரியமா பழகுகிறார்."

"என்னடா ராமாயணம் சொல்றே? மீனாட்சியம்மாளை நீ காக்கா பிடிச்சா என்ன? குருவி பிடிச்சா என்ன? இதுனால நம்ம திட்டத்திற்கு என்னடா லாபம்?" என்று எரிந்து விழுந்தான் மணி.



"பிளாட்ஃபாரம் இல்லாத ஸ்டேஷன் எது?"
"போலீஸ் ஸ்டேஷன்தான்!"
— சுவீட் ரவி

"மணி, என் மேலே கோபப்பட்டு எந்தவிதமான பயனும் இல்லே. நான் இங்கே பண்ணற ஒவ்வொரு வேலையும் நம்ம திட்டத்தை நிறைவேற்றத்தான் கறதை நினைவில் வெச்சுக்க."

"முதல்ல, நீ நினைப்பு வச்சுக்க. எந்த வேலைக்காக நாம இங்கே வந்திருக்கோம்கறதை நீ மறந்துடாதே. நீ சொல்றதெல்லாம் பார்த்தா அந்த மீனாட்சி அம்மாவோட பிரியத்தை சம்பாதிச்சுக்கிட்டு, அவங்க அடிக்கடி தர பலகாரங்களுக்காக நம்ம திட்டத்தையே கோட்டை விட்டுடுவியோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு. பட்டுனு விஷயத்துக்கு வா" என்றான் மணி கடுமையாக.

"இந்த கிராமத்திலேந்து சந்தீப்பைக் கடத்தறது ரொம்ப ரொம்பக் கஷ்டம். ஏன்னு கேட்கலையே?"

"சொல்லித் தொலை."

"கிராமம் பூரா மேஜரைத் தலைவராக நினைத்து மதிக்கறாங்க. போதாக் குறைக்கு அவர் வைத்தியம் வேற செய்கிறார். ஏழைகள் கிட்டே காசே வாங்கு





நாட்காட்டி

சின்னச் சின்ன நாட்காட்டி;
சிறுவரும் விரும்பும் நாட்காட்டி!
வண்ண வண்ண நாட்காட்டி;
வகைவகை யான நாட்காட்டி!

எண்ண எண்ணப் புதுமையினை
இனிக்க இனிக்க ஊட்டிடுமாம்;
கண்ணைக் கவரும் நாட்காட்டி;
கருத்தைக் கவரும் நாட்காட்டி!

நல்லது கெட்டது அறிந்திடவும்
நாளும் தெரிந்து நடத்திடவும்,
இல்லார் இருப்போர் பேதமின்றி
எவர்க்கும் உதவிடும் நாட்காட்டி!

நாளும் கிழமையும் பார்த்திடவே
நாளும் உதவிடும் நாட்காட்டி!
கால நேரம் கணித்திடவே
கைகொ டுக்கும் நாட்காட்டி!

உற்ற நண்பனாய்த் திகழ்ந்திடுமாம்;
ஒவ்வொரு நாளும் உதவிடுமாம்!
கற்றவர் போற்றும் நாட்டகாட்டி;
கைய டக்க நாட்காட்டி!

— அ. சுப்பையன்.

வதில்லை. மார்கழி மாதப் பிறப்பன்று நீ செய்த செயல், அப்புறம் நம்ப நாடகத்திலே நான் சந்திப்பைக் காப்பாற்றியது எல்லாமே கிராமம் பூராகப் பரவி விட்டது. அதனால சந்திப் மீது எல்லோரும் ஒரு கண் வைத்திருக் கிறார்கள். இந்த காந்தி சாலையிலேந்து பள்ளிக் கூடம் வரை அவனுக்கு போலீஸ் பாது காப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது."

"அதனால...."

"விராலிமலைக்கு அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்."

"உன்னோடு தனியாக அனுப்புவாங் களா?"

"கிருத்திகை அன்றைக்கு, "விராலி மலை முருகனைக் கும்பிடணும். நாம இரண்டு பேரும் போகலாம் என்று சந்திப் கிட்டே சொல்லப் போறேன். அவனும் கட்டாயம் வருவான். அப்பொழுது... சந்தர்ப்பம் பார்த்து கடத்திடு வேன்.

"இன்னிக்கே கேளு. அவனைக் கடத்த ஏற்பாடு செய்திருப்பேன்னு எவ்வளவு ஆசையா வந்தேன் தெரியுமா?"

"ரொம்பவும் அவசரப் படாதே. இப்ப நான் சொல்வதை கவனமாகக் கேட்டுக்கோ. இன்னிக்கு வியாழக் கிழமையா? வருகிற ஞாயிற்றுக் கிழமை அன்றைக்குத்தான் கிருத்திகை. அன்றைக்கு சாயந்திரமா - ஆறு மணிக்கு மேலே... சைக்கிளே நானும் சந்திப்பும் விராலி மலைக்கு வரோம். கோவில் வாசல்லே நீ பிச்சைக்காரன் வேஷத்திலே இரு... மலையிலே ஏறுவதற்கு முன்போ, பின்போ சமயம் பார்த்து அவனைக் கடத்திடுவோம். இதை நேரில் சொல்லத் தான் உன்னை வரச் சொன்னேன். போன்லே இப்படி விளக்கமா பேச முடியுமா? சரி... சரி... நீ... கிளம்பு."

"அப்ப... கிருத்திகை யன்னிக்கு சந்திப் போம்?" கூறியபடி மணி வந்த வழியே திரும்பலானான்.

உலகத்தில் நாம் நினைப்பது திட்ட மிடுவது எல்லாமே நடந்து விடுகிறதா?

(தொடரும்)

யாருக்கோ தானே?

பரமசிவம் திருச்சியைச் சேர்ந்தவர். கோபி அவரது மகன். ஏழாம் வகுப்பு. பரமசிவம் ஒரு சின்ன இடத்தில் சமோசா, வடை போன்ற பல காரங்களைத் தயாரித்து மொத்தமாக பஸ் ஸ்டாண்டில் விற்பவர்களுக்கும், ஹோட்டல் வைத்து நடத்துபவர்களுக்கும் விற்பனை செய்வார்.


தான் தயாரித்து விற்கும் பலகாரங்களில், தனக்கே இலாபம் அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்று பரமசிவத்திற்குப் பேராசை..

அழுகிய தக்காளி, சொத்தையான உருளைக் கிழங்கு போன்ற கெட்டுப் போனவற்றை மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்கிப் பலகாரம் தயாரிப்பார். கலப்பட எண்ணெயையே வாங்குவார். குறைந்த விலைக்குக் கிடைக்கிறதே? இதனால் தான் போடும் பலகாரங்களைத் தின்னும் மக்களுக்கு நோய் வரும் என்று பரமசிவத்திற்கு நன்கு தெரியும். இருப்பினும் கிடைக்கின்ற கொள்ளை இலாபத்திற்காக அதையெல்லாம் அவர் பெரிதாய் எடுத்துக் கொள்ள மாட்டார். அவரிடம் வாங்கி விற்கும் இலாபத்தை மட்டும் கவனிக்கும் வியாபாரிகளும் இதையெல்லாம் கண்டுகொள்ள மாட்டார்கள்.

அன்றும் வழக்கம் போல பரமசிவம் வியாபாரிகளுக்கு சரக்கு போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார். பண்டிகைக் காலமாக இருந்ததால் அதிகமான சரக்குப் போட வேண்டியிருந்தது. அதனால் இன்னும் அதிக நேரம் வேலை செய்து விட்டு, அவர் வீட்டிற்குக் கிளம்ப இரவு பத்து மணி ஆகிவிட்டது.

பரமசிவம் சைக்கிளை ஓரமாக வைத்து விட்டு மூடியிருந்த வீட்டுக் கதவைத் தட்ட கதவில் கை வைத்த போதுதான் கதவு பூட்டியிருப்பதைக் கவனித்தார்.

கவலை நிறைந்தவராகப் பக்கத்து வீட்டில் விசாரித்தார். "சாயங்காலமே கோபிக்கு உடம்பு சரியில்லைன்னு பக்கத்து ஊர் ஆஸ்பத்திரிக்கு அவங்



கம்மா கூட்டிக்கிட்டுப் போனாங்க. இன்னுமா வரலை?" என்று பரமசிவத்தையே அவர் கேள்வி கேட்க, பரமசிவம் அவசர அவசரமாய் சைக்கிளை எடுத்துக் கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்றார்.

மருத்துவமனை வந்தது. பரமசிவம் கவலையோடு பரபரப்பாக உள்ளே சென்றார்.

கோபி கட்டிலில் படுத்துக் கொண்டிருக்க, சலேன் வாட்டர் இறங்கிக் கொண்டிருந்தது. அருகில் அவரது மனைவி கவலையே உருவாக அமர்ந்திருந்தாள்.

"கோபிக்கு என்ன ஆச்சு?"

"சாயங்காலம் பள்ளியிலேருந்து வந்தவுடனேர்ந்து வயித்தை வலிக்கு துன்னு சொன்னான். அப்புறம் அடிக்கடி வயிற்றுப் போக்கு ஆரம்பிச்சது. நிக்கவே இல்லே. அதனால டாக்டர் கிட்டே கூட்டி வந்தேன். கோபி ரொம்பப் பலவீனமா இருக்காங்கறதுனால சலேன் வாட்டர் ஏற்றி இருக்காங்க. டாக்டர் பயமில்லேன்னுதான் சொல்லியிருக்கார்" என்று கூறும்போதே அம்மாவுக்குக் கண்கலங்கியது.


"ஏன் இப்படி இமர்னு இவனுக்கு? என்ன சாப்பிட்டான் வீட்ல?"

"வீட்ல எதுவும் சாப்பிடலீங்க. மத்தியானம் சாப்பாட்டுக்கு தொட்டுக்க பஸ் ஸ்டாண்டு சூரியா ஓட்டல்ல வித்த சமோசாவை வாங்கிச் சாப்பிட்டானாம்"

பரமசிவத்திற்கு யாரோ கன்னத்தில் அறைந்தது போன்று இருந்தது.

"ஐயோ, கொள்ளை இலாபத்துக்காக அழுகிப் போனதையும், வீணாப் போனதையும் வச்சு சமோசா பண்ணி வித்தேன். இதன் பாதிப்பு யாரோ முன்னே பின்னே தெரியாதவங்களுக்குத் தான்னு தைரியமா இருந்தேன். கடைசியிலே அது என் பையனையே பாதிச்சுடுச்சே! நான் பண்ணின சமோசாவை சாப்பிட்ட எல்லாருமே என் கோபி மாதிரித்தானே கஷ்டப்படுவாங்க? இனிமே இந்த மாதிரி கெட்டு அழுகிப் போனவற்றை உபயோகப்படுத்த மாட்டேன். இது எனக்கு நல்ல பாடம்" என்று பரமசிவம் திருந்திய உள்ளத்தோடு மனத்திற்குள்ளேயே அழுது கொண்டார்.

— ஆர். கோவிந்தராஜன்


பீமனையும் வென்ற காளை
கதை: ஆனந்தி
படம்:
பாட்டி! யாத்திரை போயிட்டு வந்திருக்கியே, எங்கேல்லாம் போனே?
ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதாரநாத்...
அங்கெல்லாம் என்ன பார்த்தே?
இமயமலைத் தொடர்ல ரொம்ப உயரமான இடத்துல இருக்கு கேதாரநாத். சுற்றிலும் பனிச் சிகரங்கள். கேதாரநாத் பற்றி ஒரு சுவாரஸ்யமான கதை இருக்கு.
சொல்லு! சொல்லு!
மகாபாரதக் கதை தெரியுமோல்லியோ? கடைசில குருக்ஷேத்திர யுத்தம் நடந்தது இல்லையா?
ஆமாம்.
கௌரவர்கள் தோற்றுப் போயாச்சு; பாண்டவர்கள் ஜெயிச்சாச்சு. ஆனாலும் தருமருக்குத் துக்கம்...
சகோதரர்களையெல்லாம் அழித்து விட்டுக் கிடைத்த ராஜ்யத்தை ஆள்வது எப்படி மகிழ்ச்சி தரும்?
பீமனும் அர்ஜுனனும்...
தருமரின் மனம் அமைதி அடைய வேண்டும்!
சகாதேவனை யோசனை கேட்போம்.




சகாதேவன்...
மனத்துயரிலிருந்து மீள வழி, வேறு நல்ல விஷயத்தில் மனதை ஈடுபடுத்துவதுதான்.
நகுலன்...
அசுவமேத யாகம் செய்யலாம்.
சரியான யோசனை!
ஐவரும் வியாசரிடம் சென்று ஆசி கோரினர்...
அரசனாக முடி சூட்டிக்கொண்ட தருமன் நிச்சயம் யாகம் செய்யத்தான் வேண்டும்; ஆனால்...
ஆனால் என்ன? எந்த விதமான தடையையும் தகர்த்தெறிய நாங்கள் தயாராயிருக்கிறோம்.
கௌரவர்கள் கொடியவர்கள்; ஆனாலும் உங்கள் சகோதரர்கள். அவர்களைக் கொன்ற பாவம் தீராமல் எப்படி யாகம் செய்வீர்கள்?



இதற்கென்ன வழி?
ஏன், கண்ணனையே கேளுங்களேன்!
கண்ணனைக் காணச் சென்றனர்...
பாதபூஜை செய்கிறேன்; ஆசி கூறுங்கள்...
கண்ணா! எவ்வளவு முயன்றாலும் என் மனத் துயர் குறையவே யில்லையே?
நீ நடத்தியது தர்மத்தை நிலை நாட்டுவதற்கான யுத்தம் தான். ஆயினும் சகோதரர்களை அழிக்க நேர்ந்ததால் துயர மடைந்திருக்கிறாய். பாவம் புரிந்ததாய்க் கருதுகிறாய்...
சகல பாவங்களையும் மன்னித்து விடக் கூடியவர் ஒருவரே! ஆனால் அவரைத் தரிசிப்பது சுலபமல்ல. கடும் தவம் செய்ய வேண்டும்!


யார் அவர்? சொல்லுங்கள். எத்தனை தவம் வேணுமானாலும் செய்கிறோம்.
இமயமலையில் வீற்றிருக்கும் மகாதேவரை தரிசித்து விட்டால் உங்கள் பாபங்களைப் போக்கி அருள் புரிவார்.
கண்ணனிடம் விடை பெற்று இமயமலைச் சாரலுக்குச் சென்றனர்.
ஆஹா! எத்தனை அழகான சூழ்நிலை!
அட! இந்தக் குளிர் பிரதேசத்திலும் வெந்நீர் பொங்குகிறதே! ஸ்நானம் செய்வோம், வாங்க.
ஒரு மலை வாசியை சந்திக்க...
இது என்ன இடம்? உனக்குத் தெரியுமா?
கௌரிகுண்டம்னு சொல்லுவாங்க...


மகாதேவரின் அருளைப் பெற தேவி தவம் செய்த இடம்.
சரியான இடத்துக்குத் தான் வந்திருக்கிறோம்!
மந்தாகினி நதிக் கரையில் தவம் செய்தார்கள்.
நீண்ட காலம் சென்றது...
அதோ சிவபெருமான்!
சம்போ மகாதேவா!
ஓம் நமச் சிவாய!
சிவபெருமானைத் தொடர்ந்து விரைந்தார்கள்...
காணோமே!
எங்கே போனார்?
தேடி களைத்துச் சோர்ந்தனர்.
மாயமாய் மறைந்து விட்டாரே!


தருமபுத்திரர்...
ஈசுவரன் நம்மைப் பார்க்கவே விரும்பவில்லை! அத்தனை பாவம் செய்திருக்கிறோம் என்று அர்த்தம்!
கைலாசத்தில்...
பிரபோ, பிரம்ம கமல மாலை சமர்ப்பிக்கிறேன்...
...சுவாமி, பாண்டவர்களை ஏன் இப்படி சோதிக்கிறீர்கள்?
யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானவர்களைக் கொன்று குவித்த பாண்டவர்களுக்கு எப்படி தரிசனம் கொடுப்பது?
சுவாமி அந்த யுத்தமும் உங்கள் லீலைதானே? தர்மத்தை நிலைநாட்ட நடந்த யுத்தம்தானே...
சுவாமி, வரம் தர வேண்டாம்; பாண்டவர்களுக்குத் தரிசனமாவது கொடுப்போம்.



இல்லை! அது சிவபெருமானாகத்தான் இருக்க வேண்டும்.
நமக்கு வரம் தரப் பிடிக்காமல் மாடுகளோடு மாடாய் மேய்ந்து திரிகிறார்!
தருமபுத்திரரிடம் அனுமதி பெற்று பீமன் மாடுகளை நெருங்கினான்.
இந்த மாடுகளில் எது மகாதேவர் என்று புரியவில்லையே.. மாயை மறைக்கிறது...
பீமன், அனுமனைப் பிரார்த்தித்தான்.
அண்ணா! உங்களைப் போல் எனக்கும் சக்தி அளியுங்கள்!
பீமன் வானளாவ உயர்ந்தான்.
மாடுகள் என் கால்களுக்கு இடையே நுழைந்து செல்கின்றன. அதோ அந்தக்காளை மட்டும் வளர்ந்து எதிர்த்து நிற்கிறது!
காளையைப் பிடித்து வசப்படுத்த முயன்றான் பீமன்.
அடேயப்பா! என்ன துள்ளல்! என்ன பாய்ச்சல்!


அர்த்தநாரீசுவரராக சுவாமியும் அம்பாளும் தரிசனம் தந்தனர்.
ஹர ஹர மகாதேவா! நம: பார்வதி பதயே!
காட்சி தந்த வேகத்தில் மறைந்தும் விட்டனர்.
அடடா! பாவம் போக்கி அருள வேண்டும் என்று வரம் கேட்பதற்கு முன் மறைந்து விட்டனரே!
பாட்டி கதை கூறிக் கொண்டிருந்தார்...
ஈசன் ஒளிந்து கொண்டதால் அந்த இடத்துக்கு குப்தகாசி என்று பெயர்!
அப்புறம் என்னாச்சு?
பீமனுக்கு ஒரு சந்தேகம்...
அதோ! அந்த மலையில்தான் சிவபெருமான் மறைந்தார்! அங்கே போய்த் தேடுவோம்.
அங்கே...
இத்தனை உயரத்தில் மாடுகள் மேய்கின்றனவே! அதிசயம்!
அந்தக் காளையைப் பார்! சாமான்ய மாடு மாதிரியா இருக்கு?


எப்படியும் இந்த திமிலைப் பிடித்து அமுக்கி காளையை அடக்கி விடுகிறேன்!
முடியாமல் போக...
ஈசனே! சோதித்தது போதும். அன்புப்பிடிக்குள் அகப்படக்கூடாதா? எங்களுக்குப் பாப விமோசனம் தரக்கூடாதா?
காளை பூமிக்குள் மறைய, அதன் திமில் மட்டும் வெளியே தெரிந்தது...
இது என்ன மாயம்! அண்ணா நான் தோற்றேன்.
தருமபுத்திரர்...
இந்த திமில் லிங்க வடிவில் உள்ளது. இதை பூஜிப்போம். நம்பிக்கையோடு செயல்படுவோம். ஈசன் கைவிட மாட்டார்.
அவ்வாறே ஐவரும் அந்த லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து பூஜித்து வந்தனர்...
ஓம் சங்கராய நம:
ஓம் சிவாய நம:


சிவனும் பார்வதியும் மனமிரங்கி தரிசனம் தந்தனர்...
உங்கள் ஆழ்ந்த நம்பிக்கையும் விடாமுயற்சியும் என் தரிசனத்தைப் பெற்றுத் தந்தன.
எங்கள் பாவங்களைப் போக்கி மனத்தில் சாந்தி நிலவச் செய்ய வேணும்!
தருமரே! எல்லாம் கண்ணனின் லீலைகளே! நீங்கள் கருவிகள் தான்!
அசுவமேத யாகம் செய்து ஜகம் புகழ அரசாள்வீர்கள்! இந்தக் கேதார மலைக்கு வந்து நீங்கள் பூஜித்த லிங்கத்தை வழிபடுவோர் உங்களைப் போலவே சகல பாவங்களும் நீங்கப் பெறுவர்.
பாண்டவர் ஹஸ்தினாபுரம் திரும்பவும் வியாசர்...
ஈசனின் அனுகிரஹம் பெற்ற நீங்கள் அசுவமேத யாகம் செய்ய தகுதி பெற்று விட்டீர்கள்.
அசுவமேத யாகம் முடிந்து தரும புத்திரருக்கு சக்கரவர்த்தியாக முடி சூட்டினார் வியாசர்.
ஜய விஜயீபவ!

கனவில் பெற்ற கடன்

ஆக்ராவில் வெகுநாட்களுக்கு முன்பு ஏழைப் புலவர் ஒருவர் இருந்தார். நிரந்தர வரும்படி இல்லாத குடும்பம். எப்பொழுதாவது வரும் வருமானத்தைக் கொண்டு மனைவி மக்களுடன் குடும்பம் நடத்தி வந்தார். புலவர் ஏழையானாலும் தன்மானம் மிக்கவர். 'எத்தனை கஷ்டம் வந்தாலும் யாரிடமும் ஒரு காசு கூடக் கடன் வாங்கக் கூடாது. அது நம்மை அழித்து விடும்' என்று மனைவியிடம் அடிக்கடி கூறுவார்.

ஒருநாள் அந்த ஏழைப் புலவர் பணம் கொடுப்பவன் ஒருவனிடம் தங்க நாணயங்கள் கடன் வாங்கியதாகக் கனவு கண்டார். கனவு என்றாலும் கூட அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனைவியிடம் கூறி மிகவும் மாய்ந்து மாய்ந்து போனார். மனைவி சும்மா இல்லாமல் தண்ணீர் எடுத்து வரும் போது அங்கு வருபவர்களிடம் தன் கணவன் பணம் கொடுப்பவரிடமிருந்து நூறு தங்க நாணயங்களை கனவில் வாங்கியதை எண்ணிக் கலங்கித் தவிப்பதைக் கூறினாள். எல்லோரும் சிரித்தனர். இந்தச் செய்தி மெதுவாக அந்த ஊரில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் பேராசைக்காரன் ஒருவனுக்கு எட்டியது. புலவரை எப்படியாவது ஏமாற்றிப் பணம் பறிக்க அவன் திட்டமிட்டான்.



பேராசைக்காரன் நேரே புலவரிடம் சென்று, "கனவில் என்னிடம் வாங்கிய நூறு பொற்காசுகளைக் கொடு" என்று மிரட்டி னான். "வட்டியுடன் சேர்த்துத் தர வேண்டும்" என்றும் வம்புக்கு இழுத்தான்.

புலவர் பாவம். மிரண்டு விட்டார். அவன் மனைவி 'பீர்பாலால் மட்டுமே இதைத் தீர்த்து வைக்க முடியும். அவர் காலில் விழுவோம்' என்று கூறினாள். இருவரும் பீர்பாலிடம் சென்று நடந்ததைக் கூறினார்.

பீர்பால் அவர்களைக் கவலைப்பட வேண்டாம் என்று தைரியம் கூறினார். நூறு பொற்காசுகளை எடுத்து மேசையின் மேல் வைத்தார். பிறகு அவைகளுக்கு முன் ஒரு பெரிய கண்ணாடியை வைத்தார். கண்ணாடியில் நாணயங்கள் தெரிந்தன. அதைப் பார்த்த புலவர் "நீங்கள் இவைகளை எனக்காக அந்தப் பேராசைக்காரனுக்கு கொடுக்கப் போகிறீர்களா? புத்திசாலியான உங்களுக்கே பேராசைக்காரனை மடக்க வழி தெரியவில்லையா?" என்று கேட்டார்.

பீர்பால் பேராசைக்காரனை அழைத்து வரக் கட்டளையிட்டார். பேராசைக்காரன் பீர்பால் மாளிகைக்கு வந்தான். அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சி. எப் படியோ பீர்பாலையே ஏமாற்றி விட்டோம் என்று மகிழ்ந்து கொண்டான்.

பீர்பால், "இந்தப் புலவர் உன்னிடம் கனவில் நூறு தங்க நாணயங்களை வாங்கினார் இல்லையா?" என்று கேட்டார்.

பேராசைக்காரன், "ஆமாம் ஆமாம் வாங்கினார். ஆனால் அதைக் கனவில் கூடத் திருப்பித் தரவில்லை" என்றான். அவன் பார்வை மேசை மேல் இருந்த தங்க நாணயங்கள் மீதே இருந்தது.

"சரி. நீ தாராளமாகக் கண்ணாடியிலிருந்து அதில் தெரியும் தங்க நாணயங்களை எடுத்துக் கொள்ளலாம். உண்மையான காசுகள் எனக்குச் சொந்தம். ஆனால் அவைகளின் பிம்பம் கண்ணாடியில் தெரிகிறதல்லவா? அவை உனக்குச் சொந்தம். ஏனென்றால் புலவருக்குக் கனவில் கொடுத்த கடன்தானே? என்று மடக்கினார்.


பேராசைக்காரனால் பதிலே பேச முடியவில்லை. தான் தோற்று விட்டதை உணர்ந்து மறு பேச்சுப் பேசாமல் நின்றான்.

"இம்மாதிரி அப்பாவி மக்களை ஏமாற்றி மிரட்டிப் பணம் பறிக்கும் உனக்கு தண்டனை தர வேண்டாமா? அபராதமாக புலவருக்கு நூறு பொற்காசுகளைக் கொடுத்து விடு" என்று தீர்ப்பு வழங்கினார் பீர்பால்.

— இந்திரா கோபாலன்.

பிருந்தாவனக் கவியரங்கம்

புதிய காகம்



பறந்த காகம் ஒன்றுக்கு
பசியும் உடனே எடுத்ததாம்
எறிந்த இலையைக் கண்டதாம்
எடுத்துப் பிரித்துப் பார்த்ததாம்

வடையில் பாதி இருந்ததாம்
வாயால் கொத்தி எடுத்ததாம்
மாடி வீட்டு முகட்டிலே
மகிழ்ந்து பறந்து அமர்ந்ததாம்.

குட்டி நாயும் வந்ததாம்
கொஞ்சம் பாடேன் என்றதாம்
கெட்டி யாக வடையினை
காலில் காகம் பிடித்ததாம்

நாடோர் புகழும் நாயண்ணா
நல்ல பாட்டுப் பாடுவேன்
கேட்டே மகிழ்வீர் என்றதாம்
காகா என்றே கரைந்ததாம்!



எத்தனை அறிவு உனக்கேதான்!
ஏய்க்க முயன்றேன் தோல்வியே!
என்றே நாயும் புகழ்ந்ததாம்
எழுந்து ஓடிச் சென்றதாம்!

- சு. கண்ணகி.

சின்னக் குடை



சின்னக் கறுப்புக் குடையிது
சிறிய அடியேன் குடையிது
அண்ணன் எனக்கு அன்புடன்
அளித்த அழகுக் குடையிது.

ஒருவர் பிடித்துச் சென்றிட
உதவும் அருமைக் குடையிது
இருவர் வரினும் இதமாய்
இடம் அளிக்கும் குடையிது!

வெயிலில் மழையில் காத்திடும்
வேகக் காற்றில் பறந்திடும்!
தயக்க மின்றிக் கேளுங்கள்
தருவேன் இரவல் ஒருமுறை

- இரா. பிரபாகரன்.

இராணுவம்



கண்ணைக் கவரும் இமையைப்போல்
காக்கும் நாட்டை இராணுவம்
எண்ணிப் பார்க்கின் இதைவிட
எதுதான் உயர்வு கூறுங்கள்?

படையைக் காட்டி நாட்டினை
பணிய எண்ணி பகைவரை
நடுங்கித் தயங்க வைத்திடும்
நாட்டுப் பணியே ராணுவம்!
வெள்ளம் கடுமைப் புயலிலே
விரைந்து உதவும் ராணுவம்
சொல்லிப் புகழ வார்த்தைகள்
சிறிதும் உண்டோ சொல்லுங்கள்?

- ந. சிவசுப்ரமணியன்.



பனைமரம்

பனைமரம் என்றே அழைக்கின்றார்
பருகிட பதனீர் தருகின்றேன்
இணைத்துக் கட்டிட உத்தரமாய்
இருப்பதை ஏனோ மறந்திடுறார்!

பசியைப் போக்கும் கிழங்காகி
புசித்திட இனிக்கும் நொங்காவேன்
ஏசுவோர் இவற்றை மறந்திடுறார்
எனக்கு நியாயம் கூறிடுவீர்!


- அ. பத்மநாபன்.

கெட்டிக்காரப் பூனை!

எங்கள் வீட்டுப் பூனை
எவரும் விரும்பும் பூனை
பாங்காய் பாலைக் குடிக்கும்
பதுங்கி எலியைப் பிடிக்கும்

பரணில் ஏறித் தூங்கும்
பாச மாகக் கத்தும்
குறும்புத் தனங்கள் செய்யும்
கெட்டிக் காரப் பூனை!

- ஆர். கோபி கண்ணன்.



மாம்பழம்

பங்கன பள்ளி மாம்பழம்
பாப்பா வுக்குப் பிடிக்குமாம்

மல்கோவா மாம்பழம்
மாமா வுக்குப் பிடிக்குமாம்

சேலத்து மாம்பழம்
சித்திக்கு நன்கு பிடிக்குமாம்


பெங்க ளூரு மாம்பழம்
பெரியப் பாவுக்குப் பிடிக்குமாம்

அத்திப் பட்டு மாம்பழம்
அனை வருக்கும் பிடிக்குமாம்

நடுச் சோலை மாம்பழம்
நாங்கள் விரும்பும் மாம்பழம்ம

நீங்கள் விரும்பும் வகையதை
நன்கு எடுத்துக் கூறுங்கள்

- ஜ. ரசியாபேகம்.





வழிவகுப்பீர்

சின்னச் சின்னத் தம்பிகளே
சிறியோன் சொல்வதைக் கேளுங்கள்
வன்முறை உணர்வை அழிப்பீரே
வாழும் வகையை அறிவீரே

ஆன்றோர் வாழ்ந்த பூமிஇதை
அழிப்பது எதுவென அறிவீரோ?
மண்ணைக் காக்கும் மரங்களையே
மாய்ந்து அழித்தல் உணர்வீரே!

வசதியை எண்ணி மரங்களையே
வெட்டுதல் அழிவு அறிவீரோ?
நாசம் இதனை நிறுத்திடுவீர்
நாநிலம் வாழ வழிவகுப்பீர்!

- சுப. சிவராஜா.


கடிகாரம்


கடிகாரம் இது கடிகாரம்
கோபம் வராத கடிகாரம்
நொடியும் காட்டும் கடிகாரம்
நாங்கள் விரும்பும் கடிகாரம்

வெள்ளை வண்ண கடிகாரம்
வேண்டும் உருவில் கடிகாரம்
முட்கள் உள்ள கடிகாரம்
முன்னோர் காணா கடிகாரம்

சுவரில் தொங்கும் கடிகாரம்
சுறுசுறுப் பான கடிகாரம்
எவரும் உறங்கும் வேளையிலும்
வேலை செய்யும் கடிகாரம்!

- ஆர். பிரசன்னா.





திருக்குறள்

கருத்து நிறைந்த திருக்குறள்
காட்டும் நமக்கு அரும்பொருள்!
பகுத்துச் சொல்லும் திருக்குறள்!
படித்தால் விலகும் மனஇருள்!


செய்யுள் யாவும் இரண்டடி
சிந்தை மகிழ தினம்படி!
பொய்யா மொழியின் பொன்னடி
போற்று! பொலியும் உன்குடி!

நூற்று முப்பது அதிகாரம்!
கோர்த்து வைத்த முத்தாரம்!
ஊற்றாம் குறள் நூலினை
உணர்ந்தா லொழியும் தீவினை!

வாழும் வகைகள் அதிலுண்டு!
ஆளும் முறையும் அதிலுண்டு!
தாழும் உள்ளம் உயர்ந்திட
நாளும் படிக்க முயன்றிடு!

- கு. சரவணன்.


புள்ளிகளைச் சேருங்கள்!





கண்டுபிடி - போட்டி

இங்கே இந்தக் கட்டங்களைப் பாருங்கள். இவை எல்லாமே கடைசி எழுத்து 'டை' என்று முடிபவை. எட்டுச் சொற்களுக்கான கட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டுபிடித்து உரிய கட்டங்களில் எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். வெளிநாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள நண்பர் அல்லது உறவினர் ஒருவரின் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.













							டை
							டை
							டை
							டை
							டை
							டை
							டை
							டை







கண்டுபிடி போட்டி

பெயர் : ....


வயது : ....

முகவரி : ....


....


பின் கோடு..............................

முடிவு தேதி : 31.1.95



காரட்டை எடுக்க
முயலுக்கு வழிகாட்டுங்கள்!


HOW CREATIVE ARE YOU?
GOKULAM
The monthly magazine for children
96 pages for just Rs. 5!
BUY YOURSELF A COPY TODAY!
Write to
GOKULAM, 47 Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Madras - 600 097.
for a subscription.
DON'T MISS IT!


"ஏண்டா இப்படி இரைக்க இரைக்க ஓடி வர்றே?"
"நாய் கடிச்சிடிச்சிப்பா!"
- சீர்காழி வி.ரேவதி.
"பத்து யானை வரிசையா இருக்கு...! முதல் யானை பின்னாடி என்ன இருக்கும்?"
"இரண்டாம் யானை."
"தப்பு... வால் இருக்கும்!"
- காவேரிப்பட்டணம் சோமசேகர்.
"ஏன் ஆந்தையாரே கண்ணாடி போட்டு இருங்கிங்க?"
"எல்லாம் பகல்ல கண்ணு தெரியத்தான்..."
-சேலம் எம்.கே.வேங்கவேல்
சிரிப்...
"டேய்! பொடியா என்ன விஷயம்? பொருட்காட்சி பார்க்க வந்த இடத்திலே என் 'அப்பா அம்மா' வைக் காணோம்! கண்டு புடிச்சுக் கொடுங்க!
- தென்காசி கு-அருணாசலம்.

சின்ன பாபு

தேவதை கேட்ட மாலை!

ஏலமலையின் காட்டுப் பகுதியில் பொன்னனுக்கு ஏராளமான விளை நிலங்கள் இருந்தன. அவனுக்கு இரண்டு பிள்ளைகள். பெரியவன் கஜபதி பேராசையின் மொத்த வடிவம். மற்றவர்களை மோசம் பண்ணிப் பொருள் சேர்ப்பதில் திறமையானவன். அண்ணனுக்கு நேர் மாறான குணமுடையவன் தம்பி சேதுபதி. தன்னால் மற்றவர்களுக்கு உதவ முடியுமானால், தானாகவே முன் வந்து தேவையானதைச் செய்வான். மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருக்கத் தன்னால் எதைச் செய்ய முடியும் என்பதை அறிந்து உதவுவதிலேயே குறியாக இருப்பான்.

பொன்னன் இறந்ததும் கெட்டிக்காரனான பேராசைக்கார கஜபதி, தந்தையின் வளமான சொத்துகளில் பெரும் பகுதியைத் தானே எடுத்துக் கொண்டு, சிறிய வறண்ட நிலப்பகுதியை மட்டும் தம்பிக்குக் கொடுத்தான்.

சேதுபதி எந்த விதமான எதிர்ப்பையும் காட்டவில்லை. ஆனால், சேதுபதியின் மனைவியால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளுடைய நச்சரிப்பைத் தாங்காது சேதுபதி, அண்ணனிடம் கேட்டான்.

"தம்பி, உன்னைவிட நான் பதினைந்து வயது மூத்தவன் என்பதால் நான் அதிகமாக எடுத்துக் கொண்டு, கொஞ்சமாக உனக்குக் கொடுத்தேன். இதை அநியாயம் என்று நீ எண்ணினால், கொடுத்து விடுகிறேன்" என்று குழைந்தான் கஜபதி.

கஜபதி நினைத்தபடியே சேதுபதி அதற்குமேல் எதுவும் கேட்கவில்லை. கஜபதிக்குத் தம்பி என்ற பாசம் இல்லை. இருந்தாலும் சேதுபதிக்கு அண்ணனிடம் பாசமும் அன்பும் இருந்தது. அண்ணன் அதிகமாக எடுத்துக் கொண்டது நியாயமே என்று மனைவியிடம் கூறி விட்டான்.



சேதுபதிக்குக் கிடைத்த நிலம், நீர் வசதி இல்லாதது. இருந்தும் தனது கடுமையான உழைப்பைக் கொண்டு, அவன் அதில் ஒரு பூந்தோட்டம் அமைத்தான். அதில் பூக்கள் பூத்தன என்றாலும் அவன் எதிர்பார்த்த அளவுக்கு மலர்கள் அதிகமாகப்

பூக்கவில்லை.

ஒருநாள் இரவு சேதுபதி வீடு திரும்ப நேரமாகிவிட்டது. களைப்பு மிகுதியால் தாமரைக் குளத்திற்கு அருகே படுத்துக் கொண்டான். நடு இரவில் ஏதோ சத்தம் கேட்டு சேதுபதி விழித்துக் கொண்டான்.

தாமரைக் குளத்தில் ஆயிரம் நிலவுகள் பூத்தது போன்ற ஒளி வெள்ளம். இனிமையான இசை கேட்டது. வானத்தில் இருந்து ஒரு தேவதைக் கூட்டம் இறங்கியது. இளவரசியைப் போன்ற ஓர் அழகு தேவதை ஒளி வெள்ளத்தில் குளித்தது. தன்னை மலர்களால் அலங்கரித்துக் கொண்டது. ஒரு சின்ன தேவதை மலர் மாலையைக் கொண்டு வந்து கொடுத்தது.



"இது என்ன! மாலையா! இப்படிக் கன்னா பின்னா என்று துளியும் கலை உணர்வு இல்லாது கட்டியிருக்கிறாயே! எனக்கு இந்த மாலை வேண்டாம்" என்று சலிப்புடன் மாலையைச் சுழற்றி வீசியது தேவதை.

"நான் என்ன செய்வேன்? எனக்கு இப்படித்தானே மாலை கட்டத் தெரியும்?" என்று வருந்தியது சின்ன தேவதை. பிறகு எல்லாத் தேவதைகளும் ஆடிப் பாடின. சிறகை விரித்தபடி வானில் பறந்து போயின.

அடுத்த நாள் சேதுபதி அழகழகான நறுமணம் மிக்க மலர்களைச் சேகரித்தான். கவனமாகப் பார்த்துப் பார்த்து அழகான ஒரு மலர்மாலையைக் கட்டினான். மலர்களைக் கொண்டே அதற்கு ஒரு பதக்கமும் வைத்தான். தோள் வரும் இடத்தில் சிறகுபோல் கூங்கு வைத்துக் கட்டினான். 'வனதேவதைக்கு ஏழை சேதுபதியின் காணிக்கை' என்று ஒரு சீட்டில் எழுதி மாலையில் கட்டினான். மாலையை அழகான ஒரு பிரம்புக் கூடையில் வைத்து எடுத்துக் கொண்டான். தாமரைக் குளத்திற்குச் சென்று கூடையைக் கரையில் வைத்து விட்டு மறைந்து கொண்டான்.

நடு இரவில், தன் தோழிகளுடன் வந்து இறங்கிய வனதேவதை, தன்னை மலர்களால் அலங்கரித்துக் கொண்டது. சேதுபதி வைத்திருந்த பிரம்புக் கூடை அதன் கண்ணில் பட்டது. மாலையை எடுத்துப் பார்த்தது.

"எத்தனை அழகான மாலை! இவ்வளவு அழகான மலர் மாலையை நான் இதுவரை பார்த்தது கூடக் கிடையாதே!" என்று வியப்பும் மகிழ்ச்சியும் பொங்கக் கூறிய தேவதை அதில் இருந்த சீட்டைப் படித்தது. அதன் மகிழ்ச்சி அதிகமானது. "இந்தச் சேதுபதியை எங்கே இருந்தாலும் அழைத்துக் கொண்டு வா" என்று சின்ன தேவதைக்குக் கட்டளையிட்டது.



"என்னைத் தேடி அலைய வேண்டாம். நான் இங்கேதான் இருக்கிறேன்" என்று மறைவில் இருந்து வெளியே வந்தான் சேதுபதி.

"சேதுபதி, உன்னுடைய மாலை கட்டும் திறமையையும், என்மேல் வைத்திருக்கும் அன்பையும் பாராட்டுகிறேன். எனக்கு தினமும் இப்படி ஓர் அற்புதமான மாலையைக் கொண்டு வந்து தருவாயா?"

"கண்டிப்பாகத் தருகிறேன். ஆனால், என்னுடைய தோட்டத்தில் செழுமையே இல்லையே? மழையும் இல்லை. கிணற்றிலும் நீர் இல்லையே?"

"இதற்காக நீ வருந்த வேண்டாம். உன்னுடைய கிணற்றில் இனிமேல் எந்தக் காலத்திலும் நீர் வற்றாது. உன் தோட்டத்து மண்ணில் இனி ஒன்றுக்குப் பத்து விளையும். செழுமை பூத்துக் குலுங்கும்."

"இனி, தினமும் நான் தொடுக்கும் அழகிய மலர் மாலை என் காணிக்கையாக இங்கே காத்திருக்கும்" என்று உறுதி அளித்தான் சேதுபதி.

அன்று முதல் வறண்டு கிடந்த சேதுபதியின் தோட்டம் பூத்துக் குலுங்கத் தொடங்கியது. கிணற்றில் நீர் பொங்கி வந்து நிறைந்தது. சேதுபதி, மனைவியுடன் கடுமையாக உழைத்தான். அவன் தோட்டத்தில் பூத்த மலர்களும், காய்த்த காய்கறிகளும், பயிர்களும் மரம் செடி கொடிகளும் தனிச் சிறப்புடன் இருந்தன. அருகே உள்ள நகருக்கு அவைகளை எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்றான். வெகு விரைவில் வசதிகள் வந்து சேர்ந்தன. ஆனாலும் பழைய குணம் மாறாது, வந்தவர்களை அன்புடன் வரவேற்றான். இயன்ற உதவிகள் எல்லாவற்றையும் செய்து வந்தான். அதோடு, தினமும் பிரம்புக் கூடையில் தேவதைக்கு மலர் மாலை எடுத்து வைத்தான்.

தம்பியின் வசதியான வாழ்க்கையும், தம்பியின் தோட்டம் மட்டும் பசுமை மாறாது என்றும் பூத்துக் குலுங்குவதையும் கண்ட கஜபதி பொறாமையால் மனம் வெந்து போனான். தம்பியை இரகசியமாகக் கண்காணிக்க ஆரம்பித்தான். இரவில் தம்பி பூக்கூடையுடன் போவதைக் கவனித்துப் பின் தொடர்ந்தான். சேதுபதி பூக்கூடையைத் தாமரைக் குளத்தின் கரையில் வைத்து விட்டு மறைந்ததும் கஜபதி மாலையை எடுத்துப் பார்த்தான். வனதேவதைக்கு ஏழை சேதுபதியின் அன்புக் காணிக்கை என்று எழுதியிருந்த சீட்டையும் எடுத்துப் படித்தான். மறைந்திருந்து எல்லாவற்றையும் பார்த்தான். அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

வனதேவதையின் அருளால்தான் தம்பி கொழிக்கிறான் என்ற உண்மையை அறிந்து கொண்ட கஜபதி, வனதேவ



தைக்குத் தம்பியின் மேல் கோபம் ஏற்படும்படி செய்து விட்டால் சேதுபதியின் வளமான வாழ்க்கை முடிந்து விடும் என்று ஒரு திட்டம் போட்டான். வாடிக் கசங்கி வாடை வீசிய ஒரு மாலையை எடுத்துக் கொண்டான். தம்பி வைத்த கூடையில் இருந்த அழகிய மாலையை எடுத்துவிட்டு வாடை வீசிய மாலையை வைத்தான். சீட்டையும் எடுத்து அதில் கட்டினான். தினமும் இப்படியே செய்தான்.

"புதிய மலர் மாலையை ஒப்புக் கொண்டபடி வைக்காதது ஒரு குற்றம். பதிலுக்கு வாடை வீசும் மாலையை வைப்பது இரண்டாவது குற்றம். அதில் நன்றிக் காணிக்கை என்று சீட்டு எழுதி வைப்பது மிகப் பெரிய குற்றம். அவமானம் கூட" என்று வெகுண்டது தேவதை. அதன் விளைவு சேதுபதியின் செழுமையான தோட்டத்தைப் பாதித்தது. கிணறு வறண்டுபோனது. செடி, கொடி, மரங்களெல்லாம் பசுமை இழந்தன.

சேதுபதி பாவம். இதற்கெல்லாம் அண்ணனின் செயல்கள்தான் காரணம் என்பதை அறியவில்லை. ஒரு நாள் எப்படியும் தேவதையை நேரில் சந்தித்துக் கேட்டு விடுவது என்று வழக்கப்படி மாலையைப் பிரம்புக் கூடையில் வைத்து எடுத்துக் கொண்டு தாமரைக் குளத்திற்கு வந்து கூடையை வைத்து விட்டு மறைந்து கொண்டான். தம்பி ஒளிந்திருப்பதை அறியாத கஜபதி, கூடையில் இருந்த மாலையை எடுத்து விட்டு வாடை வீசும் மாலையை வைத்துச் சீட்டையும் எடுத்துக் கட்டினான். போய்விட்டான்.

சேதுபதிக்கு எல்லாம் புரிந்து விட்டது. தேவதை வரும் வரை காத்திருந்தான். தேவதை வந்ததும் ஓடிச் சென்று எல்லாவற்றையும் கூறினான். தேவதை நம்பவில்லை. நாளைக்குச்

சீக்கிரமாக வந்து என்ன நடக்கிறது என்று பாருங்கள்'' என்று அவன் வேண்டிக் கொண்டதும் ஒப்புக் கொண்டது.

அடுத்த நாள் இரவு. தம்பி கொண்டு வந்து வைத்த அழகான புத்தம் புதிய மாலையை எடுத்துவிட்டு, வாடை வீசும் மாலையை வைத்த கஜபதி, சிட்டையும் பிரித்துக் கட்டினான். மறைந்து பார்த்துக் கொண்டிருந்த தேவதை அடக்க முடியாத ஆத்திரத்துடன் அவன் முன்னால் வந்து நின்றது.

"எவ்வளவு கெட்ட எண்ணம் இருந்தால் இப்படிச் செய்வாய்? பாவம் சேதுபதியைத் தவறாக எண்ணி, தண்டித்து விட்டேனே!'' என்று வருந்திய தேவதை, "நல்ல மாலையை எடுத்து விட்டு, வாடை வீசும் மாலையை வைத்து என்னை அவமானப்படுத்திய உன்னைச் சுற்றி, எப்பொழுதும் கடுமையான வாடை வீசும். நீ இனி எதைத் தொட்டாலும் கடுமையான வாடை அடிக்கும்'' என்று சாபம் கொடுத்தது.


தெரியாமல் சேதுபதியைத் தண்டித்து விட்டதற்காக மனம் வருந்திய தேவதை, "சேதுபதி உன் தோட்டம் பழையபடி பசுமையாக மாறும். நீ தொட்டதொல்லாம் பசுமை பெறும். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்'' என்று கேட்டது.

"நான் கேட்பது எதுவாக இருந்தாலும் தருவீர்களா?'' என்று கேட்டான் சேதுபதி.

"கண்டிப்பாக. நீ செய்யாத குற்றத்திற்கு நான் உன்னைத் தண்டித்து விட்டேனே'' என்று உறுதியளித்தது தேவதை.

"என் அண்ணனுக்குக் கொடுத்த சாபத்தை மாற்றுங்கள். ஏதோ அறியாமல் அவர் செய்து விட்டார். அவரை மன்னித்து அவர் நல்லவராக மாற அருளுங்கள்'' என்று வேண்டினான் சேதுபதி.

"சேதுபதி, நீ கட்டும் மாலைகள் மட்டுமல்ல, உன் மனமும் அழகானது'' என்று சிரித்து அருளியது தேவதை.



மகிழுவோம்!

காலையிலே கதிரை வீசி
கதிரவனும் வருகிறான்.
சோலையிலே பூப்பறித்து
தங்கை கோலம் போடுறாள்

கொல்லைப் புற வாசலிலே
அடுப்பை அன்னை வைக்கிறாள்
மெல்ல மெல்லப் பொங்கலுமே
பொங்கியேதான் வருகுதே!

அண்ணனுக்கும் தங்கைக்கும்
அம்மா பொங்கல் தருகிறாள்.
கணுவை நீக்கிக் கரும்பை எடுத்து
கடைக்குட்டி சிரிக்கிறான்.

சின்னவனும் பொங்கலுடன்
சின்ன வாயைக் காட்டுறான்
திண்ணையிலே தாத்தாவுமே
தின்று ருசி பார்க்கிறார்.

உங்கள் வீட்டில் பொங்கலா
உண்டு மகிழ்ச்சி கொள்ளுங்கள்.
பொங்கல் பண்டிகை இல்லையேல்
பெரிய வருத்தம் ஏனுங்க?

எங்கள் வீடு நோக்கியே
எல்லோருமே வாருங்கள்.
பொங்கல் தின்று மகிழுவோம்!
புதிய மகிழ்ச்சி கொள்ளுவோம்!

-அருப்புக்கோட்டை செல்வம்

பட்டாம் பூச்சியின் ஆயுள் எத்தனை ஆண்டுகள்?




◆ ஹாக்கி பந்தை பக் (puck) என்று வர்ணனையாளர் குறிப்பிட்டாரே! ஹாக்கி பந்துக்கு இப்படி ஒரு பெயர் இருக்கிறதா? - மு. அனந்தநாராயணன், வேங்கைவாசல்.

இருக்கிறது. ஹாக்கியிலேயே ஐஸ் ஹாக்கி என்று ஓர் ஆட்டம். இந்த விளையாட்டில் பயன்படுத்தப்படும் பந்துக்கே பக் என்று பெயர்.

◆ அசோகருடைய ஸ்தூபிகளில் பொறிக்கப்பட்டுள்ள புத்தாது போதனைகள் எந்த மொழியில் உள்ளன? - ரா. சின்னசாமி, வேட்டைக்காரன் புதூர்.

அசோகருடைய ஸ்தூபிகளில், கல்வெட்டுக்களில் உள்ளவை பிராஃமி எழுத்துக்கள்.





◆ Queens Bery Rules என்பவை எந்த விளையாட்டுக்கு உரிய விதிமுறைகள்? - அ. பரமானந்தம், சாத்தனூர்.

பாக்ஸிங் என்ற குத்துச் சண்டை விளையாட்டுக்களின் விதிமுறைகளே க்வீன்ஸ் பெர்ரி ரூல்ஸ் என்பவை.

◆ சந்திரகுப்த மௌரியரின் தலைநகரான பாடலி புத்ரம் இப்பொழுது எங்கே இருக்கிறது? - மா. சரவணபாலா, கரூர்.

தற்போது உள்ள பாட்னா நகருக்கு அருகே அமைந்துள்ள புதிய பாட்னா நகரம் தான் வரலாற்றுக்கால பாடலிபுத்ரம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

◆ பக்திப் படல்களான சூர்தாஸ் பஜன்கள் ஹிந்தி மொழியில் எழுதப்பட்டவை

தானே? - மா. பெரியநாயகி, சாத்தூர்.

இல்லை. ஆனால் கேட்க இந்தி போலவே இருக்கும். சூர்தாஸ் பஜன்கள் பிரிட்ஜ் பாஷா என்றழைக்கப்பட்ட மொழியில் எழுதப் பட்டவையே.

♦ ***பட்டாம்பூச்சியின் ஆயுள் எத்தனை ஆண்டுகள். - மு. ரென்னி, உதகை.***

பட்டாம்பூச்சியின் சராசரி ஆயுள் 15 முதல் 20 நாட்களே! ஆண்டுக்கணக்கில் அல்ல.


♦ ***'கௌபாய்ஸ்' (Cowboys) என்பவர்கள் யார்? - து. சிகாமணி, சிதம்பரம்.***

வட அமெரிக்காவில் கால் நடை மேய்த்தவர்கள்தான் கௌபாய்ஸ் என்று அழைக்கப்பட்டார்கள். எல்லா தட்பவெப்ப நிலைகளையும் தாக்குப் பிடித்து இவர்கள் தங்கள் கடுமையான பணியைச் செய்வார்கள். இன்றும் இவர்கள் நவீன வசதிகள் எல்லாவற்றையும் பயன்படுத்திக் கொண்டு மேய்த்தல் தொழிலைத்தான் செய்து வருகிறார்கள்.

♦ ***ஹிட்லர் தலைவராக இருந்த கட்சியின் பெயர் என்ன? - மரு. சைமன் பாக்கியநாதன், பாளையம்கோட்டை.***

சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லர் தலைவராக இருந்த கட்சியின் முழுப் பெயர் நேஷனல் சோஷலிஸ்ட் கட்சி. இதை சுருக்கமாக நாஜி என்று குறிப்பிடுவார்கள்.







♦ ***சிலந்திகள் எல்லாமே ஒரே மாதிரி டிசைனில்தான் தங்கள் வலைகளைப் பின்னுமா? - மா. சின்னராக்கு, மருதமலை.***

இல்லை. ஒவ்வொரு வகையான சிலந்தியும் தனக்கென ஒரு டிசைன் வைத்துக் கொண்டிருக்கிறது. சிலந்திகளில் பல வகைகள் இருக்கின்றன.

♦ ***ஜலமண்டலம் என்பது என்ன? இதன் நீர் பட்டால் இறந்து விடுவார்கள் என்பது உண்மையா? - கா. சிந்சபேசன், மன்னார்குடி.***

ஜல மண்டலம் (Scutigera) என்பது பூரான் வகை. பூரானுக்கும் இதற்கும் இவைகளின் கால்களைக் கொண்டு வித்தியாசம் கண்டு பிடிக்கலாம். ஜல மண்டலியின் கால்கள் நீண்டு இருக்கும். இது மிக வேகமாக ஓடும். இது கடித்தால் தேள் கொட்டின மாதிரி இருக்கும். ஆனால், இதனால் மனதனின் உயிருக்கு அபாயம் இல்லை. இதைப் பற்றி இல்லாத பொல்லாத பயங்கரக் கதைகள் எல்லாம் நம்மிடையே வழங்கி வருகின்றன. இன்னும் கேட்டால்,

கேளுங்கள் சொல்லப்படும் — சேரநம்பி

ஜல மண்டலியை நமது நாட்டில் காண்பது அபூர்வம்.

♦ ***டபாய்க்கி அரிசி என்கிறார்களே, அது என்ன? - மா. ராஜாமணி, மண்ணடி.***

இது சென்னை நகருக்கு மட்டுமே உரிய குழந்தை உணவுப் பொருள். மரவள்ளிக் கிழங்கு, பனங்கிழங்கு இரண்டின் கூழையும் கலந்து தயாரிக்கப்படும் ஜெவ்வரிசி போன்ற அரிசி இது. புரோட்டீன் சத்து நிறைந்தது. குழந்தைகளுக்கு இதைக் காய்ச்சி, பாலுக்குப் பதில் தருவார்கள். Baby Food டப்பாக்களில் வரத் தொடங்கிய பிறகு இதன் தேவை மறைந்து இன்று அடியோடு மறைந்தே விட்டது. டபாய்க்கி அரிசி நாட்டு மருந்துக்கடைகளில் மட்டுமே கிடைத்து வந்தது. இது டப்பாவில் போட்டு விற்பனைக்கு வந்ததால் இந்தப் பெயரைப் பெற்றது.

♦ ***சிறுவர்கள் ரசிகர் மன்றங்களை அமைப்பது உண்டா? - வா. ஆனந்தவல்லி, ரங்கராஜபுரம்.***

கல்வி கற்க வேண்டிய பயன் மிக்க காலத்தை ரசிகர் மன்றம் அமைக்க செலழிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்த நேரத்தில் சிறுவர் இலக்கியம் தொடர்பான ஒரு செய்தியை இங்கு கூறியாக வேண்டும். திரு கொ.மா. கோதண்டம், சிறுவர் உலகுக்கு நன்கு அறிமுகமான அருமையான ஓர் எழுத்தாளர். கோகுலத்தில் கூட ஏராளமாக எழுதி வருகிறார். இவரது சிறுகதைகள் காட்டு சூழலில் நடப்பவை. இவற்றின் ஹீரோ, நீலன் என்ற காட்டுவாசிச் சிறுவன். இவரது கதைகளால் பெரிதும் கவரப்பட்ட முத்துராமலிங்கபுரம் சிறுவர்கள், "நீலன் ரசிகர் மன்றம்" என்ற ஓர் சிறுவர் இலக்கிய அமைப்பை ஆரம்பித்திருக்கிறார்களாம். சிறுவர்கள் இத்தகைய சிறுவர் இலக்கிய ரசிகர் மன்றங்களைத் தொடங்கி நடத்துவது அவர்களுக்கும் நன்மை, சிறுவர் இலக்கியத்திற்கும் நன்மை.





♦ ***சினிமாவில் வரும் குழந்தை நட்சத்திரமாக நடித்துப் புகழ் பெற விரும்புகிறேன். உங்கள் அறிவுரை என்ன? - ராதா, பார்த்தசாரதி, சேலம்.***

சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர்கள் எல்லோருமே மகிழ்ச்சியாக இல்லை. அவர்கள் எப்படியெல்லாம் துன்பப்படுகிறார்கள் என்பதை Aadhi Haqueeqat Aadha Fasana (Children of Silver Screen) என்ற non feature படத்தில் மிக அழகாகக் காட்டியிருக்கிறார்கள். இது ஒரு இந்தி மொழிப்படம். ஆனால், புரிவதற்கு மொழி தேவையில்லை. 60 நிமிடங்கள் ஓடும் இந்தப் படத்தை உங்களைப் போன்ற சிறுவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டும்! இது தொடர்பாகத் தொடர்பு கொள்ள வேண்

டிய முகவரி National Film Development Corporation Ltd., 6th & 7th Floors, Discovery of India Nehru Centre, Dr. Anne Beasant Building, Bombay - 500 018.


♦ ***வால் ஸ்டீரீட் (Wall Street) என்று அடிக்கடி ஷேர் மார்க்கெட் செய்திகளில் குறிப் பிடுகிறார்களே, இது எங்கு உள்ளது? - வாராகி, ராகவன், ஸ்ரீமுஷ்ணம்.***

இது அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஒரு தெரு. இங்கு உலகின் பொருளாதாரத்தையே தலைகீழாக மாற்றவல்ல நிதி நிறுவனங்கள், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் உள்ளன. இங்கு எடுக்கப்படும் முடிவுகள் உலகின் எல்லாப் பொருளாதார வளர்ச்சியையும் மறைமுகமாகக் கட்டுப்படுத்துகின்றன. அமெரிக்கக் குடியேற்றம் நடைபெற்ற 16 ஆம் நூற்றாண்டில், நியூ ஆம்ஸ்டர்டேமில் கவர்னராக இருந்த பீட்டர் ஸ்டுவைஸ்ஸான்ட் என்பவர் 1652 ல், இங்கிலாந்தின் தாக்குதலைச் சமாளிக்க நியூயார்க் நகரில் ஒரு சுவரைக் கட்டினார். இதன் காரணமாகவே இதற்கு வால் ஸ்டிரீட் என்ற பெயர் நிலைத்து விட்டது.

♦ ***நாம் அருந்தும் காப்பிக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது? - மா. குணசேகர பாண்டியன், தென்காசி.***

காப்பி முதன் முதலாகப் பயிரிடப்பட்டது காஃப்பா (Kaffa) என்ற பகுதியில். இது எதியோப்பியாவில் உள்ளது. இதை ஒட்டியே காப்பிக்கு இப் பெயர் வந்தது.





♦ ***எட்டேகால் லட்சணமே என்று திட்டுகிறார்களே, இதற்கு பொருள்? - மா. அடைக்கலம், புதுக்கோட்டை.***

இதற்கு அவலட்சணம் என்பது பொருள். தமிழில் எண்களைக் குறிக்க தனிக் குறியீடுகள் உள்ளன. இதன்படி எட்டேகால் என்பதற்கு உரிய தமிழ்க் குறியீடு "அவ". இதோடு லட்சணத்தையும் சேர்த்தால் அவலட்சணம் அதாவது அழகில்லாதவன் என்று ஆகிறது.

♦ ***டிரைகிளீனிங் முறையை யார் கண்டு பிடித்தார்கள்? - கா. மேரி தாரா, அரியமங்கலம்.***

ஜே.பி.ஜாலி என்ற பிரஞ்சுக்காரர்தான் தற்செயலாக இதைக் கண்டு பிடித்தார். உலகின் முதல் டிரை கிளீனிங்கைத் தொடங்கிய வரும் இவரே.

மன்னன் எழுதிய சரித்திரம்!



இந்தியாவில் அரசாள முகலாய வம்சத்தைத் தோற்றுவித்த பாபரைப் பற்றிப் படித்திருப்பீர்கள். பாபர் சாதாரணமான மனிதரல்ல. விடாமுயற்சியும் கடின உழைப்பும் மிக்கவர். இல்லாவிட்டால், பதவி ஆசைக்காக எதையும் செய்யத் தயாராக இருந்த குடும்பத்தார் இடையே, கண்டிப்பையும் ஒழுங்கையும் காட்டி ஆட்சி பீடத்தைப் பிடித்திருப்பாரா?

பாபரிடம் இருந்த ஓர் வித்தியாசமான குணம் நாட்குறிப்பு எழுதுவது. அன்றாட நிகழ்ச்சிகளை அவர் தானே குறித்து வந்ததுடன், தான் கண்டறிந்த கேட்டறிந்த மாறுதலான தகவல்களையெல்லாம் விளக்கமாகக் கூறி எழுதவும் வைத்தார். ஆக்ராவை அவர் ஆண்ட போது, அதற்கு அருகே உள்ள "சிக்ரி" என்ற பூங்காவில் இயற்கைச் சூழலில் அமர்ந்து அவர் கூறக் கூற, அவரது உதவியாளர்கள் மாறி மாறி அவற்றை எழுதினர்.

ஒருமுறை இப்படி பாபர் சொல்ல, உதவியாளர் எழுதிக் கொண்டு வந்த போது, எழுதப்பட்ட காகிதங்கள் புயல் காற்றால் பறந்து மழையில் நனைந்து விட்டன. அந்தக் கொட்டுகின்ற மழையிலேயே தனது உதவியாளர்களுடன் பாபர் அவற்றைத் தேடி எடுத்துச் சேகரித்தார். மிகவும் கவனமாக அவற்றைக் கம்பளித் துண்டுகளுக்கு இடையே வைத்துத் தனது மேற்பார்வையிலேயே காய வைத்தார்.

இந்தத் தொகுதியில் பாபரது இலக்கியப் பற்று மிக்க நடை, இந்தியாவின் தட்பவெப்ப நிலை, இயற்கை வளங்கள், விலங்குகள், பறவைகள், மக்கள், மன்னர்கள், அரச குடும்பங்கள், செல்வங்கள், மொழிகள் என்று எதையுமே விட்டு வைக்காது எழுதி வைத்துள்ளார். இந்தத் தகவல் தொகுப்பின் பெயர்தான் பாபர் நாமா. இது துருக்கி மொழியில் எழுதப்பட்டது.

பாபர் நாமா முகலாயர்களின் முன்னோர்களைப் பற்றியும், அக்கால இந்தியாவைப் பற்றியும் அறியப் பெரிதும் உதவுகிறது.


ஹுமாயூனுக்காக பாபர் தனது உயிரையே தியாகம் செய்ய வேண்டிக் கொள்ள அப்படியே ஆனதைப் பற்றியெல்லாம் கூட 'பாபர் நாமா'வில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இது பிற்காலத்தில் யாரோ சேர்த்த இடைச்செருகல்களே. பாபர் நாமாவுக்கும் இதற்கும் தொடர்பே இல்லை என்று ஒரு மறுப்பும் இருக்கிறது.

எது எப்படியிருந்தாலும் சரி. நாட்டு நடப்புகளை மிக அருமையாக எழுதி வைத்து, வருங்கால மக்களுக்குப் பெரிதும் உதவக்கூடிய ஓர் அரிய செயலை பாபர் செய்திருப்பதை நாம் பாராட்டியே தீர வேண்டும்.


வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கும் பாபர் நாமா ஒரு அரும்பெரும் பொக்கிஷம்.

பறவைகளின் இரை விசித்திரங்கள்

ஆழி





மீன் கொத்திப் பறவை, சற்றுப் பெரிய மீனாக இருந்தால், அலகால் பிடித்து, மரக்கிளையில் ஓங்கி அடித்துக் கொன்று விழுங்கும். சிறிய மீனாக இரந்தால், உயிரோடு, அதன் தலைப் பக்கம் தன் தொண்டையை நோக்கி இருக்குமாறு அலகில் வைத்துக் கொள்ளும். அலகில் இருக்கிற மீன் துள்ளித் துள்ளி, தானாகவே பறவையின் தொண்டை வழியே வயிற்றுக்குள் போய்விடும்!



பிலிப்பைன்ஸ் தீவில் உள்ள கழுகுகள் 'மகாக்' என்னும் குரங்குகளைத்தான் கொன்று தின்னுகின்றன.

கருநீல ஈ-ப் பிடிப்பாளர் பறவை, தனது எடைக்குச் சமமான பூச்சிகளைத் தினமும் தின்று தீர்க்கிறது!






ஆந்தைக்கு 'ராட்டில்' என்னும் கிலுக்குப் பாம்பின் குட்டியை மிகவும் பிடிக்கும். அதைக் கொன்று தின்றுவிடும். அதற்குப் பழி தீர்ப்பது போல், ராட்டில் பாம்புக்கு ஆந்தையின் குஞ்சைத் தின்பது மிகவும் பிடிக்கும். ஆனால், 'மர்மோட்' என்னும் பிராணிக்கு ஆந்தையின் குஞ்சும் பிடிக்கும், ராட்டில் பாம்பின் குட்டியும் பிடிக்கும்!






'ஹார்ன் கிரிப்' என்னும் பறவை அதிகமாகத் தின்னும் இரை மிக மிருதுவான இறகுகள். அது தன் குஞ்சுகளுக்குக் கூட, தன் கழுத்துப் பக்கத்தில் உள்ள மெல்லிய இறகுகளையே பிடுங்கி இரையாகக் கொடுக்கிறது.


கழுகுகள் எல்லாமே மாமிசம் தின்கின்றன. என்பது தவறு. ஐரோப்பாவில் உள்ள 'பாம் நட்' என்னும் கழுகுகள், காய் கனிகள், கொட்டைகள் முதலிய தாவர இரையை மட்டுமே தின்று உயிர் வாழ்கின்றன.



'கறுப்பு அகப்பை அலகு' என்னும் பறவை, தன் அலகைத் திறந்தபடி நீர் மட்டத்தில் வைத்து, நீரை உழுவதுபோலப் பறந்து கொண்டே போகும். நீர் மட்டத்தில் நீந்திக் கொண்டிருக்கும் சிறு சிறு மீன்கள் அதன் வாய்க்குள் நுழைந்துவிடும்!




'லாப் விங்' என்னும் பறவைக்கு முதலையின் பல் இடுக்கில் உள்ள பொருள்தான் பிடிக்கும். அந்தப் பறவை, முதலையின் வாய்க்குள் உட்கார்ந்து கொண்டு அதன் பல் இடுக்குகளில் உள்ள உணவுத் துணுக்குகளையும் சிறு புழுக்களையும் தின்று சுத்தம் செய்து விடுகிறது. அந்தப் பறவையை முதலை ஒன்றும் செய்வதில்லை!



'கேட்டில் ஈக்ரெட்' பறவை, இரை தேட எங்கும் அலைவதில்லை. நீர்யானை, எருமை முதலிய விலங்குகளின் மேல் சவாரி செய்து கொண்டே அவற்றின் மேல் உள்ள ஒட்டுண்ணிகளை எடுத்துத் தின்னும்.


குயில் ஒரு மணி நேரத்தில், மற்ற பறவைகள் தின்னாத சுமார் 100 புழுக்களைத் தின்று விடும்!





'கோர்மொராண்ட்' பறவைக்கு ஒரு விசித்திரமான பழக்கம் உண்டு. நீருக்குள் பிடிக்கிற மீனை, நீர் மட்டத்திற்கு மேலே கொண்டு வந்து ஆகாயத்தை நோக்கி வீசி எறியும். வீசி எறியப்பட்ட மீன் கீழே வரும்போது சட்டென்று அதைப்பிடித்து விழுங்கும்.

'ஃபிஞ்ச்' பறவை, மரத்தின் இடுக்குகளில் பதுங்கிக் கொண்டிருக்கும் புழு பூச்சிகளைத் தன் அலகினால் கொத்திப் பார்க்கும். அலகுக்குச் சிக்கவில்லையென்றால், நீண்ட குச்சி ஒன்றை எடுத்து வந்து, இடுக்குக்குள் விட்டுக் குத்தி அவற்றை வெளியே எடுத்துத் தின்னும். இப்படி இரை தேடும் ஒரே பறவை உலகில் இது மட்டும்தான்!





ஒவ்வொரு கழுகும் தன் எடையைப் போல் 3 மடங்கு இறைச்சியைத் தின்னும். ஆனால், எந்த இரையும் கிடைக்காவிட்டாலும் சேர்ந்தாற்போல் 45 நாட்களுக்கு மேலும் பட்டினியாக இருந்து விடும்!

கடினமான விதைகளை உடைத்துத் தின்ன மரங்கொத்தி, அந்த விதைகளை ஒரு மரத்தின் இடுக்கில் அசையாதபடி பொருத்தி வைத்துக் கொண்டு உடைத்துத் தின்னும்!









'ஷ்ரைக்' என்னும் பறவை, இரையாகக் கொண்டு வரும், பல்லிகள், சிறிய பறவைக் குஞ்சுகள், பூச்சிகள் முதலியவற்றைத் தன் கூட்டின் பக்கத்தில் அது அமைத்திருக்கும் முட்களில் குத்திச் சேமித்து வைத்திருந்து தின்னும்.

'பிளமிங்கோ' பறவை இரை பிடிப்பது விசித்திரமானது. நீரில் வாழும் சிறு ஜந்துக்களைப் பிடிக்க அது தன் தலையைத் தலைகீழாக வைத்துக் கொண்டு சேற்றை உழும். அப்போது அதன் குழிவான மேல் அலகில் தங்கும் சிறு மீன்களையும் பூச்சிகளையும் அது தின்னும்!

ஸ்பெயின், சீனா ஆகிய நாடுகளில் காணப்படும் 'தாடி வல்லூறு' கடினமான எலும்புகளையும் ஆமைகளையும் உடைத்துத் தின்ன, அவற்றை மிகவும் உயரத்தில் தூக்கிச் சென்று ஒரு பாறையின் மீது போடும். உடைந்ததும் எளிதாகத் தின்றுவிடும்!



'ஹம்மிங் சிட்டு' கட்டைவிரல் அளவே உள்ள மிகவும் சிறிய பறவை. அதன் இரையே தேன்தான். அது ஒரு நாளைக்குத் தன் எடையைப்போல் 1½ மடங்கு தேனைக் குடித்துவிடும்!



எது செய்தாலும்...

தரஜா

"அரியநாயகபுரத்திலே நாளைக்குச் சந்தை கூடுகிறதாம் நீங்களும் அங்கே போய் நமக்கு உபயோகமாக ஏதாவது வாங்கிட்டு வாங்களேன்!" என்று கந்தசாமியிடம் கூறினாள் அவனது மனைவி பேச்சியம்மா.

"முட்டாள்தனமாகப் பேசாதே... சந்தையிலே சாமான் வாங்க நம்மிடம் பணம் ஏது...? ஏதோ இருக்கிற கொஞ்ச நஞ்ச நிலத்திலே சோளம் பயிரிட்டு, அதையே தின்று வருகிறோம்... நம்மிடம் பொருள் ஏதேனும் இருந்தாலாவது அதைக் கொடுத்துப் பண்டமாற்று செய்து கொள்ளலாம்..." என்று அலுத்துக் கொண்டான் கந்தசாமி.

"நம்மகிட்டதான் ஒரு குதிரை இருக்கே... மறந்துட்டீங்களா?"

"இதப் பாரு... எங்க அப்பா குதிரை வண்டி ஓட்டிப் பிழைச்சாரு... அவர் வளர்த்த குதிரை இது... ஒரு ஞாபகார்த்தமாக வச்சுட்டிருக்கேன்..."


"நான் சொல்றதைக் கேளுங்க.. நமக்கு வண்டி கிண்டி எதுவும் இல்லை... தண்டத்துக்கு இந்தக் குதிரைக்குத் தீனி போட்டு வளர்க்கிறோம்... அப்பா வெட்டின கிணற்றுத் தண்ணி உப்புக் கரித்தால் அதைப் போய்க் குடிப்போமா என்ன? நாம இந்தக் குதிரையைக் கொடுத்துவிட்டு, உபயோகமாக வேறு ஏதாவது ஒரு பொருள் வாங்கலாம்!"

மனைவி சொன்னது கந்தசாமிக்கு நியாயமாகப் பட்டது.

"சரி, என்ன பொருள் வாங்கலாமென்று சொல்!"

"ஏதோ ஒன்னு வாங்கிட்டு வாங்க... நீங்க எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும்!" என்று கூறி, கணவனை உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்தாள் பேச்சியம்மா.

கந்தசாமி குதிரையுடன் சந்தைக்குப் புறப்பட்டான்.



அவனைப் போலவே இன்னும் பலரும் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் விற்பதற்கென்று ஏதோ ஒன்று இருந்தது.

முதலில் எதிர்ப்பட்ட ஆசாமியிடம் ஒரு கறவைப் பசு இருந்தது.

கந்தசாமி அவனுடன் பேசி, குதிரையைக் கொடுத்து விட்டுப் பசுவை வாங்கிக்

கொண்டான்.

அடுத்தபடியாக செம்மறியாட்டை ஓட்டியபடி ஒருவன் வந்தான். மாட்டை அவனிடம் ஒப்படைத்து விட்டு, ஆட்டைப் பெற்றுக் கொண்டான்.

இன்னும் சிறிது தூரம் சென்றதும் ஒரு விவசாயி சேவல் ஒன்றையும் பெட்டைக் கோழி ஒன்றையும் எடுத்து வருவதைப் பார்த்தான்.

"இந்த ஆட்டுக்குப் பதிலாகச் சேவலையும் பெட்டைக் கோழியையும் தருவாயா?" என்று கேட்டான் கந்தசாமி.

'இவன் சரியான முட்டாளாக இருப்பான் போலிருக்கிறதே!' என்று நினைத்தபடியே, ஆட்டை வாங்கிக் கொண்டான் அந்த விவசாயி.

சந்தை நடைபெறும் இடத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, ஒருவன் தலையில் பெரிய சாக்குப் பை ஒன்றைச் சுமந்து கொண்டு வருவதைப் பார்த்தான் கந்தசாமி.

அவனை நெருங்கி, "இந்தாப்பா...! அந்த மூட்டையிலே என்ன இருக்கு...? லேசான துர்நாற்றம் கூட வருகிறதே! என்னது அது?" என்று கேட்டான்.

"இந்த மூட்டை நிறையப் பப்பாளிப் பழம் இருக்கு... அதிகமாகப் பழுக்க வைத்ததில் அத்தனையும் அழுகியே போய் விட்டது!"

"எங்கே எடுத்துப் போகிறாய்?"

"சந்தையிலே நிறையப் பேர் பன்றிகளை ஓட்டி வருவார்கள்... அவைகளுக்கு இது ஆகாரமாகப் பயன்படும் என்றுதான் எடுத்துச் செல்கிறேன்!"

"இதோ பார்! இந்தப் பெட்டையையும், சேவலையும் தருகிறேன். பதிலுக்கு அந்த மூட்டையை எனக்குக் கொடுப்பாயா?"

"நிஜமாகக் கேட்கிறாயா, கேலி பண்ணுகிறாயா?"

"நான் சூதுவாது தெரியாதவன். கேலி செய்வதெல்லாம் என் வழக்கமல்ல... வாஸ்தவமாகவே கேட்கிறேன். அந்த அழுகிய பப்பாளிப் பழங்களைக் கொடுக்க முடியுமா?"

"பேஷாக எடுத்துக் கொள்!" என்று மூட்டையைத் தூக்கி, கந்தசாமியின் தலையில் வைத்தான் அந்த ஆசாமி. கூடவே, இரண்டு ரூபாய்க் காசுகளையும் அளித்தான்.

"பொருளைத்தான் மாற்றிக் கொண்டு விட்டோமே! பணம் எதற்குக் கொடுக்கிறாய்?" என்று கேட்டான் கந்தசாமி.

"சந்தை நெருங்கி விட்டது. அங்கே தேநீர்க் கடையில் தேநீர் குடித்து விட்டுப் போ. இந்த மூட்டையைச் சுமந்து கொண்டு ஊர் திரும்ப உனக்குத் தெம்பு வேண்டுமல்லவா?"

"ஐயா! நீ நல்லா இருக்கணும்!" என்று மனமார வாழ்த்தினான். பிறகு, தேநீர்க் கடையை நோக்கி நடந்தான் கந்தசாமி.

கடையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. கந்தசாமி ஓர் ஓரத்தில் பப்பாளிப் பழ மூட்டையை இறக்கி வைத்து விட்டு, சுடச் சுடத் தேநீர் வாங்கிப் பருகலானான்.

அப்போது, பட்டும் பீதாம்பரமும் பகட்டுமாக ஒரு வியாபாரி தேநீர்க் கடைக்குள் நுழைந்தான். அவனது பார்வை மூட்டையின் மீது சென்றது.


"யாருடைய மூட்டை இது?" என்று உரத்த குரலில் கேட்டான் வியாபாரி.

"என்னுதுதான் ஐயா..." என்ற கந்தசாமி, வீட்டிலிருந்து குதிரையுடன் புறப்பட்டு, அழுகிய பப்பாளிப்பழ மூட்டை வாங்கியது வரையில் நடந்ததையெல்லாம்

"வீட்டில் குப்பை அதிகமா இருந்தா கூட்டலாம். ஆனா பெருக்கக் கூடாது ஏன் தெரியுமா?"

"பெருக்கினா அதிகமாயிடும்."

- எஸ். தட்சணாமூர்த்தி.





விவரமாகச் சொன்னான்.

"இந்தப் பழங்களை என்ன செய்வாய்?" என்று அக்கறையுடன் விசாரித்தான் வியாபாரி.

"வீட்டுக்குக் கொண்டு போவேன்! என் மனைவியிடம் கொடுப்பேன்!"

"உன் மனைவியிடம் பலமாகத் திட்டு வாங்கப் போகிறீர்கள்... உலக்கை யைத் தூக்கிக் கொண்டு வந்து உம்ம மண்டையிலே போடப் போகிறாள்!"

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. பேச்சியம்மா மிகவும் நல்லவள். நான் எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும் என்று நம்புகிறவள்... அவள் என்னைப் பாராட்டுவாளே தவிர, கடிந்து கொள்ளவே மாட்டாள்..."

"இதெல்லாம் சும்மா! திட்டு கிடைப்பது நிச்சயம். நான் பந்தயம் கட்டுகிறேன்... உன் மனைவி உன்னைக் கடிந்து கொள்ள வில்லையென்றால் இதோ இந்தப் பணப் பையில் இருக்கும் மொத்தப் பணத்தையும் சும்மாவே உன்னிடம் தந்து விடுகிறேன்!"

"சரி, வாருங்கள் போவோம்!" என்று வியாபாரியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

வேலி மடலைத் திறந்து கொண்டு கந்தசாமி நுழைந்தபோதே ஆவலும் உற்சாகமுமாக வந்து எதிர்கொண்டாள் பேச்சியம்மை.

"போன காரியம் என்ன ஆச்சு? வெற்றிதானே?"

"வெற்றிதான்... நம்ம குதிரையைக் கொடுத்து விட்டுப் பசுவை வாங்கினேன்..."

"அப்படியா? சந்தோஷம்... பசு இருந்தால் சோளத் தட்டையை ஆகாரமாகப் போடலாம்... பால் நிறையக் கொடுக்கும்... நமது உபயோகத்துக்குப் போக, மீதியை விற்றுக் காசாக்கலாம்... பசு எங்கே?"

"சொல்றேன் கேளு... அந்தப் பசுவுக்குப் பதிலாக ஆடு வாங்கினேன்..."

"ரொம்ப நல்ல காரியம் செய்தீர்கள். பசுவின் பாலை விட ஆட்டுப் பால்தான் சிறந்தது. தவிர, ஆட்டு ரோமத்தைக் கூட விற்றுப் பணம் பண்ணலாம்..."

"அவசரப்படாதே... ஆட்டைக் கொடுத்து விட்டு ஒரு சேவலும் பெட்டையும் வாங்கிக் கொண்டேன்..."

"அடடா! அதுதான் புத்திசாலித்தனம்...! முட்டைகளை நாமும் சாப்பிடலாம்; விற்கவும் செய்யலாம்... அவ்வப்போது குஞ்சு பொரிக்க வைத்து விட்டால், கோழிகளின் எண்ணிக்கை பெருகி விடும்! நல்ல சாமர்த்தியமான காரியந்தான் செய்திருக்கிறீர்கள்!"

"இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது... அதையும் சொல்லி விடுகிறேன், கேள். சேவலும் கோழியும் நமக்கு எதற்கு என்று தோன்றியது. எனவே அவற்றுக்குப்

பதிலாக ஒரு மூட்டை பப்பாளிப் பழம் வாங்கி வந்து விட்டேன்!"

"பப்பாளிப் பழமா! ஹை!"

"ஆனால் அத்தனையும் அழுகிய பழம்!"

வியாபாரி இருப்பதைக் கூடப் பொருட்படுத்தாது கணவனுக்குத் திருஷ்டி கழித்தாள் பேச்சியம்மை.

"அடடா! என்ன சாமர்த்தியமாகக் காரியம் செய்திருக்கிறீர்கள்! என் மனம் அடைகிற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! நான்தான் எப்போதும் சொல்வேனே நீங்க எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும்...!" என்று கணவனைப் புகழத் தொடங்கினாள் பேச்சியம்மை.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த வியாபாரிக்கு வியப்பாக இருந்தது.

"ஏம்மா! உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? கூட்டிக் கழித்துப் பார்த்தால் உங்கள் கணவர் ஒரு குதிரையைக் கொடுத்து விட்டு, அதற்குப் பதிலாக ஒரு மூட்டை நிறைய அழுகிப் போன பப்பாளிப் பழங்களையல்லவா வாங்கி வந்திருக்கிறார்! உங்களுக்கு வருத்தமாக இல்லையா?" என்று பேச்சியம்மையைக் கேட்டார் வியாபாரி.

"துளிக்கூட வருத்தம் கிடையாது..." என்றாள் பேச்சியம்மை சிரித்தவாறே.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"விளக்கமாகவே சொல்கிறேனே! இவர் வெளியே போன பிறகு சமைக்கத் தொடங்கினேன். அப்போதுதான் வீட்டில் காய்கறி எதுவும் இல்லையென்று தெரியவந்தது. பக்கத்தில் தோட்டம் போட்டிருக்கிறார்கள். இவருக்குப் பிடிக்குமே என்பதால் பக்கத்து வீட்டுக்காரியிடம் சென்று ரெண்டு 'கத்தரிப் பிஞ்சு கொடு' என்று கேட்டேன். அவளுக்கு நானும் என் கணவரும் சண்டை, கிண்டை போடாமல் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டு பொறாமை. எனவே அவள், 'கத்தரிப் பிஞ்சாவது! அழுகின கத்தரிப் பிஞ்சு கூட உனக்குக் கொடுக்க மாட்டேன்!' என்று பதில் சொல்லி விட்டாள்..."

"சரி, அதற்கும் இதற்கும்...?"

"சம்பந்தம் இருக்கு... இப்ப நான் அவளிடம், 'நீ அழுகின கத்தரிப் பிஞ்சு கூடக் கொடுக்க முடியாது என்று சொன்னாயல்லவா! நான் உனக்கு ஒரு மூட்டை அழுகின பப்பாளிப் பழம் தருகிறேன்!' என்று சொல்லி, அவள் மூக்கையறுப்பேன்... மூட்டையை அவள் வீட்டிலே தள்ளி விட்டு வருவேன். என் கணவர் இதை வாங்கி வந்ததால் அல்லவா என் மானம் பிழைத்தது!.. அவர் எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும்!"

பேச்சியம்மை கூறியதைக் கேட்டுப் பிரமித்துப் போனான் அந்த வியாபாரி. 'ஆகா! கணவன் செயலில் தப்புக் கண்டு பிடிக்காமல், அவன் முட்டாள்தனத்தைப் பொறுத்துக் கொண்டு, அவனோடு ஒத்துப் போய், வாழ்க்கை நடத்துவதில் தானே குடும்பத்தின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது! கிடைப்பது எதுவாக இருந்தாலும் அதை வைத்துக் கொண்டு திருப்தியடைகிற மனப்பாங்கு இவர்களுக்கு உள்ளது. இதுதான் கிடைப்பதற்கரிய செல்வம்!' என்று மனத்துக்குள் அவ்விருவரையும் வியந்து பாராட்டினார்.

பின்னர், தான் வாக்களித்தபடியே தனது பணப் பையைக் கந்தசாமியிடம் கொடுத்து விட்டுப் புறப்பட்டுச் சென்றான் வியாபாரி.

"குதிரையை விலைக்கு விற்றிருந்தால் கூட இத்தனை பணம் கிடைத்திருக்காது. உங்களது சாமர்த்தியத்தினால்தான் நமக்குப் பெரும் பொருள் கிடைத்தது. நீங்கள் எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும்!" என்று கணவனைப் பாராட்டத் தொடங்கினாள் பேச்சியம்மை!

"நாளைக்கு உனக்கு பரீட்சை ஆரம்பமாடா கண்ணா?"

" உங்களுக்கு யார் சொன்னது?"

"நீ கோவிலுக்குப் போறியேன்னு கேட்டேன்!"

- சீர்காழி வி. ரேவதி



அப்பா, பவித்ராவை நிமிர்ந்து நோக்கினார்.

"காலாண்டு விடுமுறையில், எங்கள் பள்ளியில மதுரைக்குச் சுற்றுலா போறோம்... இருநூறு ரூபாயாகுமாம்" என்றாள் பவித்ரா.

"போயிட்டு வாம்மா. நாளைக்கு பள்ளிக்குப் போகும் போது மறக்காம பணத்தை வாங்கிக் கொண்டு போ" என்று அனுமதி அளித்த அப்பா, "இப்போ மகிழ்ச்சிதானே?" என்று கேட்க, பூரிப்பின் எல்லைக்கே சென்றாள் பவித்ரா.



அந்த 200 ரூபாய்!

ஆன்மீஹ் உமாசங்கர்

அடுத்த நாள். பணத்தை வாங்கிக் கொண்டு, முன்னதாகவே பள்ளிக்குச் சென்றாள் பவித்ரா. வகுப்புத் தோழிகள் புவனாவும், சீதாவும் கூட முன்னதாகவே வந்திருந்தனர். தான் சுற்றுலாவுக்குப் பணம் கொண்டு வந்திருப்பதை பவித்ரா கூறிய போது தாங்களும் கொண்டு வந்திருப்பதைக் கூறினார்கள் அவர்கள்.

வகுப்பில் பவித்ராவுக்கு இருப்பே கொள்ளவில்லை. எப்போ இடைவேளை முடிந்து கணக்கு வகுப்பு வரும் எனக் காத்திருந்தாள். ஏனெனில், கணக்கு ஆசிரியைதான் சுற்றுலா கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பை ஏற்றிருந்தார். அதனால்தான் அத்தனை ஆவல்.

ஒருவழியாக இடைவேளை முடிந்து கணக்கு வகுப்பு தொடங்கியது. 'யாரெல்லாம் சுற்றுலாவுக்குப் பணம் கொண்டு வந்திருக்கிறீங்க?" என்று கேட்டார் ஆசிரியை.

புவனா, கீதா, பவித்ரா மூவரோடு இன்னும் சிலரும் எழுந்து நின்றனர்.

"மீதிப் பேரெல்லாம் நாளைக்குக் கொண்டு வந்து பதிவு செய்து கொள்ளுங் கள்... பணம் கொண்டு வந்தவர்கள் வரி சையாக என்னிடம் கொடுங்கள்" என் றார் ஆசிரியை.

புவனாவும், கீதாவும் மற்றும் சில ரோடு வரிசையாக வந்தனர். பவித்ராவும் வரிசையில் சேர்ந்து கொண்டு பணம் வைத்திருந்த பெட்டியைத் திறந்து பார்த் தாள். அவள் கொண்டு வந் திருந்த இருநூறு ரூபாய் பணம் அதிலே இல்லை!

"இதில்தானே வைத் தேன்! வேறெங்கும் வைக்க வில்லையே...? இங்கே பெட்டி யில் வைத்த பணம் எங்கே மாயமாய்ப் போயிருக்கும்?" பவித்ராவுக்கு அழுகை முட் டிக் கொண்டு வந்தது.

"பவித்ரா... என்ன ஆச்சு? சீக்கிரம் பணத்தைக் கொடு. நான் பாடம் எடுக்க வேண் டாமா?" என்று ஆசிரியை முடுக்கினார்.

"டீச்சர்... பணம் வைத் திருந்த பெட்டியில் இப்பொ பணத்தைக் காணோம்..." என்று அழுது கொண்டே கூறினாள் பவித்ரா.

"வேறு எங்கேனும் வைத் திருப்பாய்... நன்றாய் நினைவு படுத்தித் தேடிப் பார்..." என் றார் ஆசிரியை.

"இல்லை டீச்சர். இதிலே தான் வைத்திருந்தேன்" -பவித் ராவின் விசும்பல் அதிகமானது.

"நம்ம மாணவிகள் எல்லோருமே நல்ல பிள்ளைகள்; பணத்தைத் திருடி யிருக்க மாட்டாங்க. கைமறதியா பெட் டியோ, பையோ மாறி இருக்கலாம். அப் படி யாரிடமாவது பவித்ராவின் இருநூறு ரூபாய்ப் பணம் வந்திருந்தால் இப்பவே கொடுத்து விடுங்கள்" என்று கண்டிப்பு டன் கூறினார் ஆசிரியை.

யாரும் அசைந்து கொடுக்கவில்லை. எல்லோரும் மௌனம் சாதித்தனர்.

தனது மாணவச் செல்வங்கள் மீது அபாரமான நம்பிக்கை வைத்திருந்த ஆசிரியை பவித்ராவிடம், 'உனது பணத்தை யாரும் திருடியிருக்க மாட் டாங்கம்மா. நீ வீட்டிலேயே எங்காவது தொலைத்து விட்டாயோ என்னவோ! வீட்டுக்குப் போனதும் ஒருமுறை நன்றா கத் தேடிப் பார். எப்படியும் பணம் கிடைத்துடும். கவலைப்படாதே" என்று பாடம் எடுக்க ஆரம்பித்தார்.

பள்ளி விட்டவுடன் எல்லோரும்



சென்று விட்டனர். ஆனால் பவித்ரா மட்டும் உற்சாகம் இன்றி மெதுவாக நடந்து வந்தாள். பள்ளி காம்பவுண்ட் டைத் தாண்டியதும், வேலியோரமாக மினுமினுப்புடன் கிடந்த ஒரு கவர் அவளுடைய கவனத்தை ஈர்த்தது. எடுத் தாள். அதில் பணம்...! எண்ணிப் பார்த் தாள். சரியாக இருநூறு ரூபாய்! சுற்றுலா வுக்குத் தேவையான அதே இருநூறு ரூபாய்! ஆனால்... இது அவள் தொலைத்த

பணமில்லையே!

கொண்டு போன பணம் தொலைந்து போனதையும், வேறு பணத்தைக் கண்டெடுத்ததையும் வீட்டில் பவித்ரா கூறவே இல்லை. அடுத்த நாள், பள்ளி துவங்கு முன், கணித ஆசிரியையிடம் தான் கண்டெடுத்த இருநூறு ரூபாய்க் கவரை ஒப்படைத்து அதைக் கண்டெடுத்த விபரத்தையும் கூறினாள்.

“நேற்று உனது பணத்தைக் காணவில்லை என்று சொன்னாயே... அது இல்லையா இது...?” என்றார் ஆசிரியை.



“இல்லை டீச்சர்... நான் கொண்டு வந்தது இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள். இதுவோ நான்கு ஐம்பது ரூபாய்த் தாள்கள். இது என்னுடையது இல்லவே இல்லை. வேறு யாருடையதோ” என்றாள்.

அவளுடைய நேர்மையைக் கண்டு வியந்த ஆசிரியை, பெருமிதம் கொண்டார்.

“பவித்ரா... உன் நேர்மையைப் பாராட்டுகிறேன். இன்றைக்கு, இறை வணக்கக் கூட்டத்தில் இதை அறிவித்து உரியவரிடம் ஒப்படைப்போம்” என்றார்.

இறைவணக்கக் கூட்டத்தில் தலைமையாசிரியை அந்த இருநூறு ரூபாய்க் கவரைத் தூக்கிக் காண்பித்து, ‘இது யாருடையது?’ என வினவினார்.

யாரும் தன்னுடையது என்று முன் வரவில்லை!

“இன்று மாலை பள்ளி முடிவதற்குள் உரியவர் எவரும் பெற்றுக் கொள்ள முன்வராவிட்டால் பவித்ராவுக்கே இந்தப் பணம் சுற்றுலா செல்வதற்கு அளிக்கப் படும்” என்று அறிவித்தார்.

பவித்ராவின் வகுப்புத் தோழிகள் எல்லாம், “பவித்ரா, உனக்குத்தான் அந்த இருநூறு ரூபாய் பணம்” என்று கூறி மகிழ்ந்தனர். ஆனால், பவித்ராவுக்கோ முகத்தில் மகிழ்ச்சியே இல்லை.

வகுப்புகள் துவங்கின. இடைவேளைக்குப் பின் கணித ஆசிரியை வந்தவுடன் பவித்ரா எழுந்து நின்று, “டீச்சர்... அந்த ரூபாயை யாரும் பெற்றுக் கொள்ள முன்வராவிட்டால் எனக்கே அதை சுற்றுலா செல்ல அளிப்பதாகத் தலைமையாசிரியை சொன்னதை என்னால் ஏற்க முடியவில்லை. நான், என் பணத்தைத் தொலைத்தது கவனக் குறைவால். அது எனக்கொரு பாடமாக இருக்கட்டும். அதற்காக மற்றவர் தொலைத்த பணத்தை எனக்காகப் பயன்படுத்திக் கொள்வதை என் மனம் ஏற்க முடியவில்லை. அப்படி ஏற்பது தவறு அல்லவா? மேலும், வசதி இல்லாத எத்தனையோ பேர் சுற்றுலா வராமல் இருக்கிறார்கள். அவர்களில் யாரை யாவது கூட்டிக் கொண்டு போக இதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே? அப்படிச் செய்வது தவறு என்றால் அதைப் பள்ளியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதே சிறந்தது என



தெரியாமல் இடைவேளையின் போது பவித்ரா டிபன் பாக்ஸை அலம்பப் போனப்போ அவ பெட்டியிலிருந்து பணத்தை எடுத்து, எனக்கு சுற்றுலாப் பணமாகக் கட்டினேன். தலைமையாசிரியை தூக்கிக் காட்டிய, பவித்ரா கண்டெடுத்ததாகக் கொடுத்த உறை என்னுடையதுதான். பவித்ராதான் எவ்வளவு நல்லவள்! தலைமையாசிரியையே முன்வந்து அவளிடம் தானே அதை ஒப்படைக்க முன்வந்தும், மற்றவர் தொலைத்த பணத்தை நான் பயன்படுத்திக் கொள்ள மறுத்து விட்டாளே! இப்படிப்பட்ட உயர்ந்த மனமுடைய தோழியின் பணத்தை அப்பாவின் அடிக்குப் பயந்து நான் திருடி விட்டேனே? அவள் எங்கே! நான் எங்கே! நான் செய்த தவறுக்கு நீங்கள் எனக்குக் கடுமையான தண்டனை தரவேண்டும்" என்று அழுது கொண்டே கூறினாள்.

"தவறை உணர்ந்தும் திருத்திக் கொள்ளாமல் மறுப்பதுதான் தவறு... புவனா... நீ திருந்தி விட்டாய். எனக்கு மிகவும் மகிழ்ச்சி. உனக்கும் ஏதாவது தண்டனை தர வேண்டுமல்லவா...? நாம் சுற்றுலா செல்கிற மதுரையைப் பற்றி திரும்பி வந்ததும், விரிவாக ஒரு கட்டுரை எழுதி வகுப்பில் வாசித்துக் காட்ட வேண்டும். சரிதானே...?" என்றார் ஆசிரியை.

வகுப்பே ஒட்டுமொத்தமாய்ச் சிரித்தது. புவனாவும், பவித்ராவும் ஓரக்கண்ணால் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

நினைக்கிறேன்" என்றாள்.

ஆசிரியை பவித்ராவின் மனவளர்ச்சியை எண்ணி அசந்து போய் நின்றார்.

"உன் விருப்பம் போலவே ஆகட்டும்மா" என்றார்.

பவித்ராவின் அருகிலிருந்து திடீரென்று விசும்பல் சப்தம் எழுந்தது. பவித்ராவின் உயிர்த் தோழி புவனாவிடமிருந்துதான் விசும்பல்!

"என்ன ஆச்சு புவனா?"

"டீச்சர்... என்னை மன்னிச்சுடுங்க. பவித்ராவின் பணத்தை எடுத்தது; இல்லை இல்லை திருடியது நான்தான். எப்படியோ கவனக்குறைவால் நான் கொண்டு வந்த பணத்தைத் தொலைத்து விட்டேன். பயமாப் போச்சு. அப்பா விளாசி விடுவார். அதனால், யாருக்கும்



பகல் தூங்கி!

நந்திதா

அதிவீர ஜெயசிம்மன், சுவர்ணபுரியை ஆண்டு வந்தார். வீரமும், சுறுசுறுப்பும் உடையவர். அவருக்கு சோம்பேறிகளைக் கண்டால் அறவே பிடிக்காது. கடுமையான தண்டனை கொடுப்பார். அரசருக்கு ஒரே ஓர் கெட்ட குணம். பயங்கரமான முன் கோபம் அவருக்கு வரும். அது வந்து விட்டால் அவ்வளவுதான். அரண்மனையே கிடுகிடுக்கும். அது தலை காட்டாத போது மன்னர், மக்களுக்கு ஒரு தாயைப் போல இருந்தார்.

ஒரு நாள், மந்திரியுடன், மாறு வேடத்தில், நகரைச் சுற்றி வந்தார் மன்னர். காலை வேளையில், தன் மக்கள்' அனைவரும், தத்தம் வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தனர். அரசன் மிகவும் மகிழ்ந்தார்.

வழியில் ஒரு வீட்டுத் திண்ணை. அதில் ஒரு வாலிபன் குறட்டை விட்டு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்! அரசருக்குக் கோபம் தலைக்கேறியது. உழைக்க வேண்டிய காலைப் பொழுதில் வேலை செய்யாமல் தூங்குவதா? தன் வாளை உருவினார்.

அருகில் இருந்த மந்திரி, நிலைமையைச் சமாளித்து அரசனின் காதில் சொன்னார், "அரசே! தூங்குபவனைக் கொல்வது பாவம். அவனை எழுப்பி, தீர விசாரிக்கலாம்," என்றார்.

அரசனுக்கும் இது சரி என்று பட்டது. இருவரும் என்ன விதமெல்லாமோ தொந்தரவு பண்ணி அவனை எழுப்ப முயன்றனர். ஆனால் அவன் தூக்கம் கலையவே இல்லை! புரண்டு புரண்டு படுத்து, உரத்த சத்தத்தில் குறட்டை வேறு விட்டான்!

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், "எதற்காக உங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்? இவனோ பகல் தூங்கி! என்ன செய்தாலும், இவன் தூக்கம் கலையாது," என்றனர். இதற்குள் வீட்டிலிருந்து அந்த வாலிபனின் தாயார் வெளியில் வந்தாள்.

"ஐயா, சிறு வயதிலிருந்தே, இவன் இரவில் தூங்க மாட்டான் பகலில்தான் தூங்குவான். எவ்வளவோ மருந்து கூடக் கொடுத்தேன். வைத்தியம் பார்த்தேன். பயன் இல்லை. பகலில் தூங்குவதால், இவனுக்கு எவரும் வேலை தருவது கிடையாது. அதனால் வறுமையால் மிகவும் கஷ்டப்படுகிறோம்," என அழுதாள்.

மாறு வேடத்தில் இருந்த அரசன் இதை நம்பவில்லை. ஊரையும், தன் தாயாரையும் இவன் ஏமாற்றுகிறான், என்றே நினைத்தார். இருந்தும், தன் குடிமகனான அந்த வாலிபனின் தாய் கஷ்டப்படுவதைக் கண்டு வருந்தினார். அவளிடம் சிறிது பணம் கொடுத்து விட்டுக் கிளம்பினார்.

அரண்மனைக்குத் திரும்பியதும் மந்திரியிடம், "சோம்பேறியான அந்த வாலிபனை அழைத்து வந்து தூணில் கட்டி உதையுங்கள்" என்றார் அரசர். அரசரின் குணம் அறிந்த அமைச்சர் அப்படியே செய்கிறேன்" என்று கூறிச் சென்றார்.

அமைச்சருக்கு அந்த பகல் தூங்கி இளைஞன் சோம்பேறியாக இருப்பான் என்று தோன்ற வில்லை. அவனது கை கால்களும், உடம்பும் நன்கு பயிற்சி பெற்ற உடலைப் போல் தோன்றினதே தவிர சோம்பேறியின் உடலாகத் தோன்ற வில்லை. அவனுக்கு ஏற்ற ஒரு வேலையைத் தந்து அவனுடைய திறமையை மன்னரே புகழும்படி செய்ய அவர் விரும்பினார். அதற்கு முன் அரசரின் தண்டனையில் இருந்து அவனைக் காப்பாற்ற வேண்டுமே?

பிற்பகலில் அமைச்சர் அரசனிடம் சென்றார். "நம் நாட்டின் வட எல்லை கிராமங்களில் அடிக்கடி திருடு போகிறது. மக்கள் பீதி யடைந்திருக்கிறார்கள். உடனே நாம் இதை நிறுத்த வேண்டும்," என்றார்.



அரசருக்குப் படு கோபம். "இன்று இரவே நாம் அங்கு புறப்பட வேண்டும். திருடர்களை சாதாரணமாக எண்ணக் கூடாது. நம் எதிரிகள் கூட திருடர்களாக வந்து குழப்பம் செய்ய முயற்சிக்கலாம். இதை உடனே கவனியுங்கள்" என்றார்.

"அப்படியானால் அந்தப் பகல் தூங்கியை" என்று இழுத்தார் அமைச்சர். "உன் நாட்டில் நடப்பதை பின்னால் கவனிப்போம். முதலில் எல்லையைக் கவனிப்போம்" என்றார் அரசர். மந்திரி எதிர்பார்த்தது இதைத்தானே?

இரவு வந்தது. மாறு வேடம் பூண்டு, மந்திரி, கிளம்பினார்.

பகல் தூங்கி அப்பொழுது தான் எழுந்து பல் துலக்கிக் கொண்டு இருந்தான். "எங்களுக்கு இரவு வேலைக்காக ஒரு வேலையாள் தேவை, வருகிறாயா?" என்று அவர் கேட்டதும் வாலிபன் உடனே அவருடன் புறப்பட்டான். தன் வீட்டை அடைந்து மாறு வேடத்தைக் கலைத்ததும், வாலிபன் பயந்தான். வேலை செய்யாமல் பகலில் தூங்கியதற்காகத் தனக்குத் தண்டனை கொடுக்கவே மந்திரி அழைத்து வந்து இருக்கிறார் என்று நினைத்துக் கலங்கினான்.



அவனைத் தேற்றிய அமைச்சர் சிப்பாயின் உடையைக் கொடுத்து அவனை அணியச் செய்தார். மற்ற சிப்பாய்களுடன் அவனையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார். வழியில் அரண்மனைச் சிப்பாய்களும் சேர்ந்து கொண்டனர். மன்னரும் வந்தார். எல்லோரும் வட எல்லை நோக்கி முன்னேறினர்.

நேரம் செல்ல செல்ல, பகல் தூங்கியைத் தவிர மற்ற சிப்பாய்கள் கண் அயர்ந்தனர். அரசனும் அமைச்சரும் கூடச் சொக்கி விழுந்தனர்.


எல்லைக்குச் சிறிது தூரத்தில் ஒரு உருவம் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. பகல் தூங்கி அந்த உருவத்தை உன்னிப்பாகக் கவனித்து மறைந்திருந்து அந்த உருவம் நெருங்கியதும் பாய்ந்து பிடித்தான்.

எல்லோரும் எழுந்து கொண்டனர். வந்தவன் அண்டை நாட்டு ஒற்றன் என்பது தெரிந்தது. ஒற்றனைப் பிடித்த புது சிப்பாய்க்கு வெகுமதி கொடுத்த அரசன், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். "என்னைத் தண்டனையிலிருந்து காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினான் அவன்.

அரசன் புரியாமல், மந்திரியைப் பார்க்க, மந்திரி, "இந்தப் புது சிப்பாய், வேறு யாருமில்லை. பகல் தூங்கிதான். இவன் சோம்பேறியும் இல்லை. இவன் உடலில் ஏதோ கோளாறு. ஆகவே, இவனுக்கு இரவு பகல் போலவும் பகல் இரவு போலவும் ஆகி, பகலில் தூங்குகிறான். உங்கள் தண்டனையிலிருந்து இவனைக் காப்பாற்றவும், இவன் திறமையைப் பரிசோதித்து இவனுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ளவுமே இவனை நம்முடன் வரச் செய்தேன்" என்றார்.

பகல் தூங்கிக்கு இரவில் காவல் காக்கும் வேலை கிடைத்து என்பதைக் கூறவும் வேண்டுமா!

சாதனைகளின் சிகரம்!



சில மாதங்களுக்கு முன், ஸ்ரீலங்காவுடன் ஆட வேண்டிய டெஸ்ட் தொடருக்கு முன், உடற்பயிற்சிக்காகச் சென்னை வந்திருந்தார் கபில். கூடவே அசார், மனோஜ் பிரபாகர், சச்சின், சித்து, ராஜு என்று முழு டீம்.

ஒரு சமூக சேவை நிறுவனம் கபிலும் சச்சினும் சிறுவர்களுக்குப் பரிசு கொடுக்கும் நிகழ்ச்சியை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்திலேயே வைத்துக் கொண்டது ஓர் இடத்தில் இரு ஆட்டக்காரர்களுடன் பரிசு பெறும் சிறுவர்களை வைத்துப் புகைப்படம் எடுத்தார்கள். பிறகு வேறொரு பகுதிக்கு இருவரையும் மறுபடி அழைத் தார்கள்.

பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் எந்த ஆட்டக்காரருமே கொஞ்சம் பிகு பண்ணிக் கொள்ளுவார். அல்லது 'ஏன் இப்படித் தொந்தரவு செய்கிறீர்கள்?' என்று கேட்பார்.

ஆனால் கபில் அப்படி எதுவுமே செய்யவில்லை! கபில் சிரித்த முகத்துடன் அந்தச் சிறுவர்களுக்கு நடுவே நின்று கொண்டு போஸ் கொடுத்தார். மைதானத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு மளமள வென்று விரைந்தார்.

சிறுவர்களுக்கு ஏகக் குஷி.

கையெழுத்து வேட்டைக்காக ஆட்டோகிராஃப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வரும் தம் ரசிகர்களிடமும், சட்டென்று கையெழுத்துப் போட்டு அனுப்பி விடுவதில்லை கபில். பக்கத்தைப் புரட்டிப் பார்க்கிறார். ஏதானும் கேள்வி கேட்கிறார் சற்றுக் கிண்டலடிக்கிறார்.

பிறகுதான், கையெழுத்து!

தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேல் கிரிக்கெட் விளையாட்டில் டீமில் தாக்குப் பிடிப்பதே பெரிய காரியம் என்பார்கள்.

கபில் அதிலும் ஒரு சாதனையை ஏற் படுத்தியிருக்கிறார்.

அக்டோபர் 16 - 1978-ல் கிரிக்கெட் மைதானத்தில் முதன் முதலாக டெஸ்ட் பந்தயங்களில் ஆடத் தொடங்கினார் கபில்.

அக்டோபர் 17, 1994 அன்று தமது கடைசி டெஸ்ட் ஆட்டத்தை முடித்துக் கொண்டார்.

இடைப்பட்ட 16 ஆண்டுகளில் கபிலின் போலிங் ஆகட்டும், பேட்டிங் ஆகட்டும், காட்சுகள் ஆகட்டும், எல்லாமே சாதனைகளை உருவாக்கிய உயர்தரமான

ஆட்டங்கள்.

434 டெஸ்ட் விக்கெட்டுகள் என்பது உலக சாதனை.

5248 டெஸ்ட் ஓட்டங்களில் எட்டு முறை சதம்.

64 காட்சுகள்.

ஒருநாள் ஆட்டங்களிலும் அதிகபட்ச விக்கெட்டுகள் - 253.

3783 ரன்கள்; 71 காட்சுகள்!

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்த மாதிரி, 83-ல் உலகக் கோப்பையை கபில் தலைமையில் தான் இந்தியா கைப்பற்றியது.

"மற்ற ஆட்டக்காரர்கள் பெரும் பாலும் ரெகார்டுகளுக்காக ஆடும் போது, கபில் மட்டும்தான், நாட்டுக்காக ஆடுகிறோம் என்று நினைப்பவர்" என்பது கபில் ரசிகர்களின் கணிப்பு.

பழைய டெஸ்ட் ஆட்டக்காரரான எல். சிவராமகிருஷ்ணன் ஒருமுறை சொன்னார்

"கபில் சில சமயங்களில் சிறந்த ஆலோசனைகள் சொல்லுவார். எந்த உத்தியைக் கையாளலாம் என்று நாம் யோசித்துக் கொண்டிருக்கும் போது, கபிலின் ஆலோசனை வெகுவாகப் பலன் அளிக்கும். இன்னொரு நல்ல குணமும் கபிலிடம் உண்டு. மனம் விட்டுப் பாராட்டுவார். தட்டிக் கொடுப்பார்!"

போலிங்கில் மட்டும்தான் என்றில்லை. சிக்கலான கட்டங்களிலும் களம் புகுந்து, ரன்களைக் குவித்து மானத்தைக் காப்பாற்றிய தருணங்களும் கபிலின் கிரிக்கெட் வாழ்க்கையில் உண்டு. ஜிம்பாப்வேக்கு எதிராக ஆடிய 175 நாட் அவுட்டை மறக்க முடியுமா?

ஆல்ரவுண்டர் என்றால் கபில்தான். இனி ஒருவர் அவர் மாதிரி இந்திய அணியில் உருவாவதற்கு எத்தனையோ வருடங்கள் பிடிக்கும்.

கிரிக்கெட்டுக்கு வெளியேயும் கபிலுக்கு ரசிகர்கள் உண்டு. டென்னிஸ் ஆட்டக்காரரான ராமநாதன் கிருஷ்ணன் சொன்னார் : "கபிலின் கடுமையான உழைப்பும், கட்டுப்பாடும், விசுவாசமும் குறிப்பிடத் தகுந்தவை. இவைதான் அவர் பல ரெகார்டுகள் ஏற்படுத்த உதவியாக இருந்திருக்கின்றன."

கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் டீவியில் நேர்முக வர்ணனை செய்ய ஆரம்பித்திருக்கிறார் கபில்.

இந்தியும், ஆங்கிலமும் கலந்து கலந்து பேசுகிறார். ஆனால், அவருடைய வர்ணனை கேட்க வெகு இயல்பாக இருக்கிறது.

அனுபவம்தான் காரணம்.



- சித்தார்த்



வரிசைப்படுத்துங்கள் - போட்டி முடிவு

அடே அப்பா! நூற்றுக்கணக்கில் உற்சாகமாகக் கலந்து கொண்டிருக்கிறீர்களே! பெரும்பாலானவை சரியான விடை. பரிசுக்குரியவைகளைத் தேர்ந்து எடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. எஸ். பிரசன்னா, காரைக்கால்.
2. வேல். விஸ்வகுமார், சென்னை - 33.
3. கே. இந்துமதி, தேவனூர்புதூர் P.O.
4. கே. செரிபா, திருவில்லிபுத்தூர்.
5. மா. கோதை, காஞ்சிபுரம் - 1.
6. அ. தேஜோ நிவேதித்தா, கோவை - 43.
7. எஸ். சிந்துஜா, தஞ்சை - 4.
8. இரா. பால்பாண்டி, மதுரை - 14.
9. நா. கவிதா, மேலகரம்.
10. ஜி. புவனேஸ்வரி, அரக்கோணம் - 1.
11. பி. ஜானகி, திருச்சி - 21.
12. ச. மதுமதி, முள்ளங்குடி P.O.

சரியான விடை :

சங்கு, கும்பி, மிதவை, வைகாசி, சிவிகை, கைதி, திருப்பதி, திருகு, குப்பி, பிரம்பு, புரவி, விளக்கு, குடுகுடுப்பை, பைசா, சாவி, விலங்கு.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

மாட்டுக்கு மட்டும்தானா?

வே. சபாநாயகம்


பாரதி மிகச் சூட்டிகையான பையன். படிப்பில் மட்டுமல்லாமல், பிற எல்லாவற்றிலுமே கெட்டிக்காரனாக இருந்தான். எப்போதும் சிரித்த முகம். சோம்பல் துளியும் இல்லாத படுசுறுசுறுப்பு. எல்லோரிடமும் பிரியமாகப் பழகுவான். பிறர் துன்பங்கண்டால் அவனது முகம் வாடும். வாயில்லா ஜீவன்கள் என்றால் அவனுக்கு மிகவும் இரக்கம்.

எல்லாம் அவன் அப்பாவின் வளர்ப்பினால்தான். அவர் ஒரு பெரிய பணக்காரர். காந்தியவாதி. ஏழைகளிடம் இரக்கமும் பரிவும் உள்ளவர். அவருக்கு ஒரு பண்ணை இருந்தது. அப்பண்ணையில் ஆட்களுக்கோ, மாடுகளுக்கோ சிரமம் தராமல், டிராக்டரைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தார். மாடுகளையும் மனிதர்களையும் ஏர் உழப் பயன்படுத்துவதில் அவருக்குச் சம்மதமில்லை. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்று தன்னைப் போலவே பாரதியைப் பழக்கி இருந்தார்.

ஒருநாள் பாரதி பள்ளிக்கூடம் விட்டு, தன் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழியில் ஒரு பாரமேற்றிய வண்டியை அவன் கடக்க நேர்ந்தது. தற்செயலாய் அவன் வண்டி மாடுகளைப் பார்த்த போது அவனது மனம் பதறியது. சைக்கிளை நிறுத்திக் குதித்தான்.

வண்டி மாடுகள் இரண்டும் மிகவும் நலிந்து தோன்றின. கண்கள் ஒளியிழந்து சோகமாகப் பார்த்தன. கழுத்து, பாரத்தினால் காய்ப்பேறிப் போயிருந்தது. எலும்புகள் துருத்திக் கொண்டு போஷாக்கே இல்லாமல் பரிதாபமாகக் காட்சியளித்தன. வண்டி நிறைந்திருந்த பாரத்தை இழுக்க முடியாமல் வாயில் நுரை தள்ள அவை திணறின. வண்டியோட்டி சிறிதும் இரக்கம் இல்லாமல் அவற்றை சாட்டைக் கழியால் விளாசினான். தார்க்குச்சியை முதுகில் குத்தித் துன்புறுத்தினான். தார்க்குச்சி வலி தாளாமல் மாடுகள் நெளிந்தன. வாயிருந்தால் அவை கதறி அழுதிருக்கும். சாலை வேறு மேடாக ஏற்றத்தில் இருந்ததால் இழுக்க முடியாமல் மாடுகள் தடுமாறின.

மாடுகளின் கழுத்தில் தோல் பிய்ந்து ரணமாகி விட்டிருந்தது. நுகத்தடி அதில் பட்டு அசைந்தபோதெல்லாம் மாடுகள் துடிக்கிற மாதிரி பாரதிக்குப் பட்டது. கழுத்து ரணத்திலிருந்து நிணநீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது. அதற்குப் போட்டியாக மாடுகளின் கண்களினின்றும் நீர் கசிந்து கொண்டிருந்தது. பாரதியின் மனம் பதறியது. பாரதியால் அதற்கு மேல் அந்தக் கொடுமையைத் தாள முடியவில்லை.



வண்டிக்காரனை அழைத்து, "ஐயா! வண்டிக்காரரே! மாடுகளின் கழுத்தில் ரணமாகி ரத்தம் வழிகிறதே! அதோடயே ஓட்டுகிறீர்களே! மாடுகளுக்கு வேதனை உயிர் போகுமே பாவம்?" என்றான்.

வண்டிக்காரன் பாரதியை ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரிப் பார்த்தான். "இந்தப் பொடிப்பயல் நமக்குப் புத்தி சொல்வதா?" என்கிற அலட்சியம் அவனிடம் தென்பட்டது. "ஏய்! போடா ஒண்ணோட வேலையைப் பார்த்துக்கிட்டு" என்று முரட்டுத்தனமாய்ப் பேசினான்.

மறுபடியும் கெஞ்சுகிற தொனியில் பாரதி வேண்டிக் கொண்டும் வண்டிக்காரன் மனம் இரங்கவில்லை. "போடா பொடிப்பயலே! பெரீய புத்தரு இவரு - புத்தி சொல்ல வந்துட்டாரு! மாட்டை அவுத்து விட்டுட்டு உன்னைப் பூட்டி ஓட்டவா? மரியாதையா போ அப்பாலே!" என்று சீறினான்.

வண்டி மேடேறிக் கொண்டிருந்தது. திணறிய காளைகளைத் தார்க்குச்சியால் குத்தி, வாலைக் கடித்து வண்டிக்காரன் இம்சித்தான். பாரதிக்குத் தாங்க முடியவில்லை. "ஐயோ பாவங்க! அப்படியெல்லாம் செய்யாதீங்க!" என்று கெஞ்சினான். வண்டிக்காரன் ஆத்திரத்தின் உச்சிக்குச் சென்று விட்டான். 'வீச்'சென்று சாட்டையைப் பாரதியை நோக்கிச் சொடுக்கினான். நல்லவேளை! பாரதி குனிந்து கொள்ளவே தப்பினான். இல்லாவிடில் சதை பிய்ந்து போயிருக்கும்.

"ஏலே! இனிமே பேசினே எறங்கி வந்து சாட்டையாலே பிய்ச்சுடுவேன்" என்று மிரட்டினான் வண்டிக்காரன்.

இவன் நல்லதனமாகச் சொன்னால் படிய மாட்டான்; சொல்கிறபடி சொன்னால்தான் வழிக்கு வருவான் என்று முடிவு செய்தவனாய், பாரதி சைக்கிளில் ஏறி வேகமாய் மிதித்தான்.

இந்த மாதிரி வாயில்லா ஜீவன்களைக் கொடுமைப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கிற 'பிராணி வதைத் தடுப்புச் சங்கம்' பற்றி அவனிடம் அப்பா சொல்லி இருக்கிறார். வேகமாக அந்த அலுவலகத்துக்குப் போய் அங்கிருந்த அதிகாரியிடம் புகார் செய்தான். அதிகாரி, பாரதி சின்னப் பையனாக இருந்தாலும் அவனிடம் தென்பட்ட கருணை உள்ளத்தைப் பாராட்டி உடனே தன் பணியாளர்களுடன் கிளம்பினார்.

பாரதி வழிகாட்ட, வண்டியை நெருங்கிச் சூழ்ந்து கொண்டனர் 'பிராணி வதைத் தடுப்பு' அலுவலர்கள். கழுத்தில் ரணத்துடன் பாரமேற்றிய வண்டியில் மாடுகளைக் கட்டியதுடன், தார்க்குச்சியால் குத்திக் கொடுமைப்படுத்தியதற்காகச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சொன்னதும், வண்டிக்காரன் அதிகாரியின் காலில் விழுந்தான். "ஐயா நான் ஏழைங்க. ரெண்டு மூணு நாளா பாரமே கெடைக்கலீங்க. வீட்டுல குழந்தைங்க பட்டினி கிடக்குதுங்க. இன்னிக்கு இந்த லோடக் கொண்டு போயி எறக்குனாதாங்க புள்ளைங்க அரைவயித்துக் கஞ்சியாவது குடிக்கும்" என்று புலம்பினான். அதிகாரி விடுவதாக இல்லை. வண்டியிலிருந்து மாடுகளை அவிழ்க்கச் செய்து, தன் காவலர் மூலம் கால்நடை மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு,



அவன் மீது வழக்குப் பதிவு செய்யத் தொடங்கினார்.

வண்டிக்காரனுக்கு, இப்போது பாரதியின் செல்வாக்குப் புரிந்தது. சின்னப் பையன் என்றும் பாராமல் அவனது காலடியில் விழுந்து விட்டான். "தம்பி! எம்பிள்ளைங்க பட்டினியிலே சாவாம நீதான் காப்பாத்தனும். மாட்டுப் பாவத்தைப் பார்க்கிறியே? என் பாவத்தைப் பார்க்க வேணாமா? மாட்டுக்கு மட்டும் தானா இரக்கம்? எனக்கு இல்லையா?" என்று கெஞ்சினான்.

பாரதிக்கு இளகிய மனது. அதனால் தன்னை அவன் மோசமாகத் திட்டியதையும், சாட்டையால் சொடுக்கியதையும் மனதில் கொள்ளாமல் இப்பொழுது அவன் மீது இரக்கப்பட்டான். இப்பொழுது யாருக்காக இரக்கப்படுவது? மாடுகளுக்கா, - வண்டிக்காரனுக்கா? அவனுக்கு தர்மசங்கடமாக இருந்தது. இப்பொழுது அவனே மிகப் பணிவுடன் அதிகாரியிடம் பேசினான்.



"ஐயா, இவரை இந்த முறை எச்சரித்து விட்டு விடுங்கள். குழந்தைகளின் பசியைப் பார்க்க முடியாமல் இப்படிச் செய்திருக்கிறார். தயவுசெய்து புத்திமதி சொல்லி அனுப்பி வையுங்கள். சட்ட நடவடிக்கை வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டான்.

அதிகாரிக்கு பாரதியின் வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. "தம்பி! இவர்களையெல்லாம் சட்டத்தைக் காட்டி தண்டனை கொடுத்தாத்தான் திருந்துவார்கள். இப்படி இரக்கம் காட்டினா, நாளைக்கே மறுபடியும் மாடுகளைத் துன்புறுத்த ஆரம்பிச்சுடுவாங்க" என்றார்.

"இல்லை ஐயா. அதற்கு நானே ஓர் ஏற்பாடு செய்ய முடிவு பண்ணிட்டேன். எங்க பண்ணையிலேயே இவருக்கு ஒரு வேலை போட்டுத் தர என் அப்பாவிடம் சொல்கிறேன். அங்கே டிராக்டர் இருக்கு. மாட்டைப் பூட்டி ஓட்ட வேண்டாம். பிராணி வதை அப்போது நிகழாது. இவருக்குக் கருணை காட்டுங்கள்" என்றான் பாரதி.

அதிகாரிக்கு வியப்பாக இருந்தது. இத்தனை சிறு வயதில் இப்படிப்பட்ட மனிதாபிமானம் யாருக்கு வரும்? "சரி தம்பி! உனக்காக இவனை விடுகிறேன். உன் நல்ல மனதுக்கு என் பாராட்டுகள்" என்று பாரதியை வாழ்த்தி விட்டுக் கிளம்பினார்.

பாரதி அந்த வண்டிக்காரனை தன் வீட்டுக்கு வந்து பார்க்கும்படி சொல்லி முகவரியைத் தந்து விட்டு சைக்கிளில் கிளம்பினான். வண்டிக்காரன் கையெடுத்துக் கும்பிட்டு அவனை வாயார வாழ்த்தினான்.

சைக்கிளை மிதிக்கும் போது பாரதிக்கு ஒரு நல்ல காரியம் செய்த நிறைவு மனத்தில் பொங்கியது. அப்பா சொல்லித் தந்த பாரதியின் பாடல் நினைவுக்கு வந்தது.

"வண்டி இழுக்கும் நல்லகுதிரை
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு அதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!"

பாடியபடி சைக்கிளை மிதித்தான்.

சார் தபால்!

■ நாங்கள் தினமும் காணும் சாதாரணத் தவளையைப் பற்றி இத்தனை தகவல்களா! - சர்க்கார் கொல்லப்பட்டி, பெரு. இளங்கம்பன், விழுப்புரம் நா. நாகராசன், சீர்காழி பெத்த. பெருமாள், முத்தரசநல்லூர் கா. புவனா சகோதரிகள், அம்பாசமுத்திரம் பா. பெரியநாயகி, சின்னாளப்பட்டி மு. ஸ்டாலின், ராஜபாளையம் கா. மொய்தீன், அதிராமப்பட்டினம் மா. ஹுமாயூன், லால்குடி ஆர். பிரதீபன், கச்சிராபாளையம் அபிநயா மற்றும் பலர்.

■ ஆறு பக்கங்களுக்குள் இத்தனை சஸ்பென்ஸ் தருகிறாரே ஜானகி! இரண்டாவது சாவியைத்தான் சொல்கிறேன் சார். படுசூப்பர் போங்கள். பட்டீஸ்வரம் கே. கருப்பையன் சகோதரர்கள், கச்சிராபாளையம் க. கோவிந்தராஜ், விருதுநகர் மா. கனிமொழி, கல்யாணபுரம் நா. பழனியாண்டி மற்றும் பலர்.

■ அழகி குல்னாராவும் அதிசயங்கள் மூன்றும்/ கதை சினிமா படம்



பார்ப்பதைப் போல் இருந்தது. எல்லோரும் ரசித்தோம். ஓவியருக்குப் பெரிய வெற்றிதான். ஆனால் கதையில் மூன்று குழந்தைகளில் இருவர் பெண், ஒருவர் தானே ஆண்? - மேற்கு தாம்பரம் வி. மோகன், வடபாதிமங்கலம் வே. பழங்குன்றன், கொண்டரசம்பாளையம் எம். என். பெருமாள், நண்பர்கள், கச்சிராபாளையம் க. கோவிந்தராஜ், மற்றும் பலர்.

■ 'தாத்தா வந்தார்' நாடகம் ஈகையின் அருமையை மிக அழகாகச் சித்திரித்து மனத்தை நெகிழ வைத்தது - மேலகிருஷ்ணன்புதூர் பி. இராமகிருஷ்ணன், கொண்டரசம்பாளையம் எம். எஸ். பெருமாள் நண்பர்கள், கச்சிராபாளையம் க. கோவிந்தராஜ், மற்றும் பலர்.

■ 'கேளுங்கள் சொல்லப்படும்', கேட்கட்டுமா டாக்டர்?' பகுதிகள் இரண்டுக்காகவுமே கோகுலத்தை வாங்கலாம். பக்கங்களை அதிகரிக்கக் கூடாதா? நாயக்கன்பட்டி மா. நடராஜன், புதூர் வெ. சுப்பராஜு, உசிலம்பட்டி மா. தங்கம்மா, திருமங்கலம் பூ. ராஜாத்தி, மற்றும் பலர்.

■ 'எப்படிக் கிடைச்சது?' கதை பெற்றோர்களைப் போலவே எல்லாப் பெற்றோரும் இருந்துவிட்டால் பிள்ளைகள் யாரும் திருடத் துணிய மாட்டார்கள் - சிதம்பரம் கா. ரங்கம்மா, நாயக்கன்பட்டி மா. தேவானை, என். கொல்லப்பட்டி பெரு. ஜீவாத்மா, மற்றும் பலர்.

■ ஆமை போட்ட திபந்தனை கதையை வீட்டில் குழந்தைகளுக்குக் கூறினேன். பெரிதும் மகிழ்ந்தனர். நல்ல அறங்களை வளர்க்கும் கதைகளை எழுதிவரும் சின்ன பாபுவுக்குப் பாராட்டுகள். புள்ளம்பட்டி மா. எத்திராஜ், என்ஜுப்பாளையம் வா. கப்பம்மா, திரிவேணிபுரம் சா. சிவக்கொழுந்து மற்றும் பலர்.

■ சிரிப் பகுதியில் பாட்டி உரையாடுவதை பேரனாக்கிவிட்டாரே மதிகுமார்! இதேபோல மனிதன் செய்த உதவியில் குதிரையை ஒட்டகம் போல் வரைந்துள்ளாரே? - ஏழுகிணறு எஸ். பாலாஜி, ரெட்டிபாளையம், ரெஜினா பேகம், திங்களூர் மா. சுப்பையா, கொடுக்காப்புளியூர் மா. வெங்கடரமணன், எறும்பூர் இ. சோமசேகர் மற்றும் பலர்.


■ பூவை அமுதனின் ''குன்றத்தூர் போகலாமா?'' கதை கூறுவது போன்ற பிரமிப்பை உண்டாக்கியது. கொரட்டூர் வா. நரசப்பா, செங்குன்றம் மா. பிச்சைமுத்து, புதுவை. கா. காரணீஸ்வரன், திருமலை சொ. செல்லம்மாள் மற்றும் பலர்.

■ ஆழியின் 'காமிரா' அறிவியல் அற்புதம்! - மதுரை - 8, கா. முனீஸ்வரன், சரம்பை தூ. ராசப்பா, காலமனூர் வெ. செல்லம்மா, பேளூர் கே. பாலாஜி, ஆரணி கே. யுவராஜ் மற்றும் பலர்.

■ அட்டைப்படமும் கட்டுரையும், பிள்ளைகள் மனத்தில் பெரிய மாற்றத்தை உண்டாக்கிவிட்டன. அந்த போர்ட்டபிள் போர்டு எங்கே கிடைக்கும்? என்ன விலை? - மாச்சாம்பள்ளி மா. தாமோதரன், பகமலை க. ரேவதி, புதுக்குளம் பொன்மணி, நத்தகடையூர் எஸ். இராமசுப்பிரமணியன், மற்றும் பலர்.

(சென்னை சைனா பஜாரில் கிடைக்கிறது. விலை பன்னிரண்டு ரூபாய்தான். மொத்தமாக வாங்கினால் இன்னும் குறையும்.)

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.


ஹாரன் ரெடி வண்டி ரெடி
அன்புத் தங்கை நானும் ரெடி!



பார்லே
இப்போது பார்லே பாப்பின்ஸின் ஆனந்தம் பேக்கெட் தீர்ந்து விட்டாலும் தொடரும்
பார்லே பாப்பின்ஸ் மேலுறைகளை அனுப்பி பரவசமூட்டும் பரிசுகளைப் பெறுங்கள்.
இலவசம் 20 பார்லே பாப்பின்ஸ் மேலுறைகளை அனுப்பினால் குறும்புத் தனமான புதிர் கிட். 10 பார்லே பாப்பின்ஸ் மேலுறைகளை அனுப்பினால் ஃபன் பேட் மற்றும் ஜங்கிள் புக் ஸ்டிக்கர் 4 பார்லே பாப்பின்ஸ் மேலுறைகளை அனுப்பினால் ஜங்கிள் புக் ஸ்டிக்கர்.
* இச்சலுகை இல்லாமலும் பாப்பின்ஸ் கிடைக்கிறது.
PARLE
POPPINS
இப்போது பழங்களின் புதிய சுவைகளில்
பழரசம் அல்லது பல்ப் கிடையாது. கூடுதல் நறுமணங்கள் சேர்ந்தது
முந்துங்கள்
பரிசுகள் குறைவாக உள்ளன
பார்லே பாப்பின்ஸ் மேலுறைகளை உங்கள் முகவரி மற்றும் தபால் தலை ஒட்டிய கவருடன் அனுப்ப வேண்டிய முகவரி: பாப்பின்ஸ் பாயிண்ட், த.பெ. எண். 907, பம்பாய்-400 057.